

**ஹஜ்ஜுக்கான செலவை 6 லட்சத்தை விட குறைக்க முடியாது**

05 அல்ஹாஜ் அஸ்செய்யத் அஹமத் நகீப் மௌலானா
ஹஜ் குழு உறுப்பினர்



**பிளாஸ்டிக் வேண்டாம் II**



**07 கொந்தளிக்கும் மத்திய கிழக்கு**




# மீள்பார்வை

மීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/135/NEWS/2020 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 430 • 10 ஜனவரி 2020 வெள்ளிக்கிழமை • ஜமாதுல் அவ்வல் 1441 • விலை 40.00




# விஜேதாசவின் பிரேரணை ஜனநாயக விரோதமானது



பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ தனிநபர் பிரேரணையாக முன்வைத்து தற்போது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 21 ஆம் 22 ஆம் இலக்க திருத்தப் பிரேரணைகளில் 21 ஆவது திருத்தப் பிரேரணை தொடர்பில் பரவலான எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகிறது.



பிரதான கட்சிகளல்லாத கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் அரசியலமைப்பில் ஜனநாயக ரீதியிலான பங்களிப்பு வழங்கும் வகையிலேயே 5 வீத வெட்டுப் புள்ளி அமைந்துள்ளது. 70 க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் நாட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 35 பேர் அனாவசியமாகப் போட்டியிட்டார்கள். ஆனால் இதற்காக சிறிய கட்சிகளதும் சில இனத்துவ மற்றும் பிரதேசக் கட்சிகளதும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் தீர்மானங்கள் பொருத்தமானதாக இல்லை.

**பப்ரல் அமைப் பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**ரோஹன ஹெட்டியாரச்சி**



விஜேதாசவின் முன்மொழிவு நிறைவேறப் போவதில்லை. பிரதான கட்சிகளும் கூட இதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை. இது நிறைவேறினால் அது ஜனநாயக அரசியலுக்கான பலத்த அடியாகும். இந்தப் பிரேரணையை முன்வைத்து அவர் ஜனாதிபதியை சந்தோஷப்படுத்த நினைக்கிறார். ஆனால் இதனால் வரும் விளைவுகள் ஆபத்தானவை. வித்தியாசமான கருத்துக்கள் பாராளுமன்றத்தில் பேசப்படுவதை இது தடுக்கும். இதனால் பாராளுமன்றத்துக்கு வெளியில் இவற்றுக்கான தீர்வுகளைப் பெறும் செயற்பாடுகள் நடக்கும். இது நிறைவேற்றப்படுமானால் உலக ஜனநாயக தரப்படுத்தலில் இலங்கையின் தரம் இறங்கி விடும் -

**ஜேவிபி பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க**



ஜனநாயக ரீதியில் நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக இணைந்து செயற்படுகின்ற சிறுபான்மைக் கட்சிகளின் உரிமைகள் இந்தப் பிரேரணையால் பறிக்கப்படுகிறது -

**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன்**

ஜேவிபி போன்ற பிரதான கட்சி அல்லாத அரசியல் கட்சிகளுக்கும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டுமென்பதற்காகவே ஐ.தே.க. 5 வீதமாக வெட்டுப் புள்ளியைக் குறைத்தது.

**- ஐதேக பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம்**





19 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்த விஜேதாச ராஜபக்ஷ இன்று அதற்கு எதிராக நிற்கிறார். அதனால் இதனை நாங்கள் விஜேதாசவின் பழைமைவாத சிந்தனையாகவே நோக்குகிறோம். அத்தோடு அரசியலமைப்புத் திருத்தம் மக்கள் மைய திருத்தமாகவே அமையும் என்ற ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்துக்கும் முரணானது -

**சட்டத்தரணி சுனில் வட்டகல (ஜேவிபி)**



அவர் (விஜேதாச) ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி. அவர் இது போன்ற ஒரு பிரேரணையை முன்வைத்துள்ளமை புரிந்து கொள்ள முடியாததாக இருக்கிறது. இவரது இந்தப் பிரேரணை ஜனநாயக உரிமைகளைப் பறிப்பதாக உள்ளது. இதற்கெதிராக நாங்கள் போராடுவோம் -

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் நிஸாம் காரியப்பர்**

## 10 மாவட்டங்களில் ந.தே.மு. போட்டி

எட்டாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து, ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தியுள்ளார். அதன் போது அரசியலமைப்பில் சில மாற்றங்கள் அவசியமென்றும், தேர்தல் முறையில் மாற்றங்கள் தேவையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

'விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலுள்ள சாதகமான பண்புகளைப் பாதுகாக்கும் அதேவேளை, பாராளுமன்றத்தின் நிலைப்பாட்டினையும் மக்களின் நேரடிப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தவும் தற்போதைய தேர்தல் முறையில் மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இலக்கங்களால் தேர்தல்களை வெல்ல முடியுமாக இருப்பினும், தெளிவான தீர்மானங்களை எடுக்க முடியாத அடிப்படைவாதத்தின் (பக். 11)

## நான்கு பாரிய அரிசி ஆலைகளுடன் அம்பாறை கைத்தொழில் பேட்டை விரைவில்



அம்பாறை மாவட்டத்திலுள்ள 523 கிராம சேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக நான்கு பாரிய அரிசி ஆலைகள் நிறுவுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் மாவட்டச் செயலாளரைக் கேட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விஷேட சந்திப்பின்போது செயலிழந்து போயிருக்கும் அம்பாறை மாவட்ட கைத்தொழில் பேட்டையை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைளை விரைவில் முன்னெடுக்குமாறும் (பக். 11)

## புதிய அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்தல் இம்மாதம் முதல்



சிறிய கட்சிகளுக்கு எதிரான 12.5 வீத வெட்டுப் புள்ளிக்கான பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் மேலும் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (பக். 11)

## 21/4 தாக்குதல் தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகள் உயிர்த்தெழுகிறது

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கண்டறிவதற்கான ஜனாதிபதி விஷேட ஆணைக் குழுவின் அதிகாரிகள் புத்தளம் வண்ணாத்திவில்லு லக்டோ தோட்டம் தொடர்பில் பிரதேசவாசிகளிடமும் அரச அதிகாரிகளிடமும் தகவல் திரட்டியுள்ளனர்.

ஜனாதிபதிக் கமிஷனின் அதிகாரிகள் லக்டோ தோட்டத்துக்கு உரித்தான கிராம சேவையாளரிடமும் முன்னாள் கிராம சேவையாளரிடமும் தகவல்களைத் (பக். 11)



## அரசியல் பழிவாங்கலை விசாரிக்க ஜனாபதி ஆணைக்குழு நியமிக்கக் கோரிக்கை



அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுபவர்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். அரசியல் பழிவாங்கலுடன் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள், பொலிசார் உள்ளிட்ட அனைத்து தரப்பினர் தொடர்பிலும் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (பக். 11)

## தேர்தல் விதிகளை மீறிய அரச தொலைக் காட்சிகளுக்கு எதிராக நடவடிக்கை

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் விதிகளை மீறியமை தொடர்பில் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் மீதும், சுயாதீன தொலைக் காட்சி மீதும் பொலிசார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். தேர்தல்கள் ஆணைக்குழு பொலிஸ் தலைமையகத்துக்குச் செய்த முறைப்பாட்டையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (பக். 11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஒரு புரளி


எஸ்.எச்.எம். பழீல்

முஸ்லிம் மாணவ மாணவியர் இம்முறை க.பொ.த.உ/த.பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளமையைத் தொடர்ந்து இனவாதிகள் புதிய சந்தேக மொன்றை எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சை மோசடிகள் இடம்பெற மேற்பார்வையாளர்கள் அனுமதித்துள்ளனர் என்றும் அதனால் தான் அப்பிரதேச மாணவ மாணவியர் அதிக எண்ணிக்கை யில் பல்கலைப் பிரவேசம் பெறுகின்றனர் என்றும் புதிய புரளியொன்றைக் கிளப்புகின்றனர்.

இது பற்றிய பத்திரிகை ஆக்கமொன்றும் 'கொப்பி அடிப்பது தெற்கில் மட்டுமா தடைசெய்யப்பட்டுள்ளது?' எனும் தலைப்பில் 'அருண' எனப்படும் சிங்கள மொழிப் பத்திரிகையில் 2018.12.9 ஆம் திகதி எழுதப்பட்டுள்ளது. அதனை தற்போது சிலர் Share செய்து வருகின்றனர்.

அளவுக்கு மீறிய விளம்பரங்கள் அவர்களது பொறாமையைத் தூண்டியிருக்க லாம் என்றும் எம்மில் சிலர் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.







## சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

# 'எதற்கு அவர்களை மாத்திரம் கௌரவிப்பது?'

ஷானாஸ் முஹம்மத்

ஜூம்ஆவிற்குப் பிறகு, 'வைத்தியத் துறைக்கும், பொறியியல் துறைக்கும் தெரிவானவர்களை கௌரவித்தல்' என்று ஏதாவது நிகழ்ச்சி நடத்தினால் அந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு இருட்டில் நின்று அசிட் அடித்தால் தேவலை போல் இருக்கின்றது எனக்கு.

'எதற்கு அவர்களை மாத்திரம் கௌரவிப்பது' என்று கேட்கத் தோன்றினாலும், சபை அடக்கம் கருதி அதைக் கேட்காமல் வாய்க்குள் முழுங்கிக் கொள்கிறேன்.

இந்த வைத்தியர்களாலும், பொறியியலாளர்களாலும் சமூகம் அடைந்த அதே பலனைத் தான் அல்லது அதைவிடக் கூடிய பலனைத்தான் மற்ற பட்டதாரிகளாலும் சமூகம் அடைகிறது. 'ஆகக் குறைந்தது' அரச பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான அனைவரையுமாவது சரி சமமாக நடாத்துங்கள்.

சமூகமும் சரி பாடசாலைகளும் சரி, உடனே பாராட்டுவதாக இருந்தாலும், பிறகு ஆறுதலாக கலாசார மண்டபத்தில் பாராட்டுவதாக இருந்தாலும், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான (தெரிவாகக் கூடிய) சகலரையும் பாராட்டுங்கள். அவர்களின் பெயரையும் பேஸ்புக்கில் போடுங்கள்.

இந்த சமூகம் இப்படி 'பொறியிலாளர், மருத்துவர்' என்று போற்றிப் புகழ்ந்து அனுப்பியவர்களில், பல்கலைக்கழகப் படிப்பில் குண்டடித்து, மூன்று வருடம் நான்கு வருடம் பயிலாகி பயிலாகிப் படிப்பவர்களும் இருக்கிறார்கள். சமூகம் கணக்கெடுக்காமல் விட்டு B.Sc இற்குச் சென்று படித்து First Class Honour டிகிரி எடுத்தவர்களும் இருக்கிறார்கள்.

எங்களுக்கு இருக்கின்ற பிரதேச செயலாளர் வெற்றிடத்தை, அதிபர்கள் வெற்றிடத்தை, ஏனைய அரச அதிகாரிகளுக்கான வெற்றிடத்தை, பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான வெற்றிடத்தை, சிறந்த ஆசிரியர்களுக்கான் வெற்றிடத்தை, உளவியலாளர்களுக்கான வெற்றிடத்தை, உற்பத்தி வியாபாரிகளுக்கான வெற்றிடத்தை, கணக்காளர்களுக்கான வெற்றிடத்தை,



நல்ல ஊடகவியலாளர்களுக்கான வெற்றிடத்தை, தேசிய சர்தேச வியாபாரிகளுக்கான வெற்றிடத்தை இந்த டாக்டர்களாலும் என்ஜினியர்களாலும் மாத்திரம் தீர்க்க முடியாது.

இந்த "Doctor, Engineer" மாயையில் இருந்து வெளிவராதவரை இந்த சமூகம் உருப்படப் போவதில்லை.

எல்லாத் துறைக்கும், எல்லாப் படிப்பிற்கும் ஒரேயளவான மரியாதையையும், பார்வையையும் கொடுத்துக் கொண்டாடுகிற ஒரு சமூகம்தான் தன்னிறைவடையும்.

2019 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த சகலருக்கும் இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

As received

# புது வருட வாழ்த்து

றமீஸ் அப்துல் ஸலாம்




புது வருட வாழ்த்துச் சொல்வது ஒருவரது சொர்க்க நரகத்தைத் தீர்மானிப்பது போல மயிர் பிளக்கும் ஆய்வுகளும் பத்வாக்களும் வெளிவந்து கொண்டிருக் கின்றன.

'காபிர்கள்', 'அந்நிய கலாசாரம்' போன்ற பிரயோகங்களை மிகத் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவுதான் முஸ்லிம்களுக்குள் மார்க்கத்தின் பெயரால் அப்பாவி மனித உயிர்களைக் கொல்லும் வழிகெட்ட தீவிர குழுக்கள் உருவாகக் காரணம் என்பதை நாம் மறந்து விட்டோம்.

குறைந்தபட்சம் கருத்து வேறுபாட்டிற்கு உட்பட்ட விவகாரங்களை, அடிப்படையல்லாத கிளை அம்சங்களில் தீவிர எதிர்ப்பு நிலையல்லாத நெகிழ்வுப் போக்கோடு நடந்து கொள்வதற்கு தயாரில்லையென்றால் எப்படி...?

கடும் போக்கிலிருந்துதான் அதிதீவிர சிந்தனைகளும், தீவிரவாதமும் ஊற்றெடுக்கிறது.

# அதிபர் வெற்றிடம்

முர்ஷித் தாஹா

அதிகமான பாடசாலைகளில் கணிசமான ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவி வருகின்றன.

வகுப்பறைகள் இல்லாமல் இருக்கலாம், சீசீடீவீ கமரா இல்லாமல் இருக்கலாம், மூன்று மாடி நான்கு மாடி கட்டிடங்களும் இல்லாமல் இருக்கலாம்... தகுதியான ஆசிரியர்கள் இருந்தால் மேலுள்ளவை இல்லா விடினும் கல்வியில் நல்ல அடைவுகளை மாற்றங்களை காண லாம் அடையலாம். அவ்வாறே, அதிகமான முன்னணி பாடசாலைகளில் கூட...

அந்த அந்த பாடசாலைகளுக்கு தகுதியான தரத்தை கொண்ட (grade) அதிபர்கள் இல்லாமல் இயங்கி கொண்டிருக்கின்றன. குறிப்பாக தமிழ் முஸ்லிம் பாடசாலை களில் இந்த நிலையை அவதானிக்கலாம்.

நீண்ட காலமாக அதிபர் வெற்றிடங்களுடன் பல முன்னணிப் பாடசாலைகள் சமாளித்துக் கொண்டு ஓடுகின்றன இந்த இடைவெளிகள், வெற்றிடங்கள் மிக விரைவில் நிரப்பப்பட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதன் மூலம் எமது பிரதேச கல்வித் துறையில் மாற்றங்களை முன்னேற்றங்களைக் காணலாம்.

# தேசிய வீரர் கலாநிதி டி.பி. ஜாயா

சட்டத்தரணி டி.கே. அஸூர்

முன்னாள் அதிபர், கொழும்பு ஸாஹிரா கல்லூரி

(ஜனவரி முதலாம் திகதி கலாநிதி டி.பி. ஜாயாவின் பிறந்த தினத்தையொட்டி...)

கலாநிதி டி.பி.ஜாயாவின் 130 வது பிறந்த தின விழாவில், இலங்கையின் சுதந்திரப் போராட்டத்திற்கு அவர் செய்த குறிப்பிடத்தக்க பங்களிப்பை எடுத்துக் காட்டுவது பொருத்தமானது. அவரது ஏனைய பங்களிப்புக்களுடன், ஒரு அரச சபையின் கவுன்சிலராக, நவம்பர் 1944 இல், சோல்பரி அறிக்கை மற்றும் ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தின் வெள்ளை அறிக்கை குறித்து 3 மணி நேரம் பேசினார். முழு சுதந்திரத்திற்கும் வழிவகுத்தார்.

இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தில், அப்போதைய அரச சபையின் தலைவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவருக்கு வழங்கிய வாழ்த்துரை ஒன்றில், ''சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டதற்கான நன்றிக் கடன் வரலாற்றுப் பெருமைமிக்க டொமினியன் மசோதாவை நிறைவேற்றுவதற்கான உரைக்காக டி.பி. ஜாயாவுக்கு சந்தேகத்திற்கு இடமின்றிச் சென்றடைய வேண்டும்'' என அவர் கூறினார்.

கலாநிதி ஜாயா தனது மிகவும் புகழ்பெற்ற உரையில், இலங்கைக்கு முழு சுதந்திரத்தை வழங்குவதற்காக முஸ்லிம் சமூகத்தின் ஏகமனதான ஆதரவை உறுதியளித்தார். சிங்கள சமூகம் மற்றும் அதன் தலைவர்கள், சிறுபான்மையினருக்கு நீதி வழங்குவார்கள், சுதந்திரம் வழங்கப்பட்ட பின்னர் அவர்களை நியாயமாக நடத்துவார்கள் என்ற நம்பிக்கை தனக்கு முழுமையாக இருப்பதாக அவர் கூறினார். கலாநிதி ஜாயா எடுத்த இந்த நிலைப்பாடு அந்த நேரத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலையின் பின்னணியில் பார்க்கப்படுவது பொருத்தமானது.

மக்கள் தொகையில் சில பிரிவினர் தமக்கு பாதுகாப்பைக் கோருவதால், அது பின்னர் ஒரு இரத்தக் களரிக்கு வழிவகுக்கும் என்ற நொண்டிச் சாக்கின் அடிப்படையில் சுதந்திரம் வழங்குவதில் ஆங்கிலேயர்கள் மந்தமாக இருந்தனர். கலாநிதி ஜாயா அந்த அச்சங்கள் அனைத்தையும் சரிசெய்து, என்ன வேறுபாடுகள் இருந்தாலும் சுதந்திரம் வழங்கப்பட்ட பின்னர் சமூகங்களிடையே அதனை இணக்கமாக தீர்த்துக் கொள்ள முடியும் என்று கூறினார்.

இந்த வார்த்தைகள் இலங்கைக்கு முழுச் சுதந்திரம் வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு பிரிட்டிஷாரை ஆளாக்கியது.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது, பல் அங்கத்தவர் தொகுதியான கொழும்பு மத்தியிலிருந்து முதல் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு இரண்டாவது உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டி.எஸ்.சேனநாயக்க அரசாங்கத்தின் அமைச்சரவையில் அமைச்சராக நியமிக்கப்படும் அளவுக்கு உயர்ந்த முதல் முஸ்லிமாக அவர் திகழ்ந்தார்.



இந்தப் பதவியில் இருக்கும் போதே, இலங்கையின் முதல் உயர் ஸ்தானிகர் பதவியை ஏற்று பாகிஸ்தான் செல்லுமாறு பிரதமர் அவரைக் கேட்டபோது, அது மிகவும் குறைவாக இருந்த போதும் பிரதமரின் கோரிக்கைக்குச் செவிசாய்க்க அவர் தயங்கவில்லை. ஒன்பது நீண்ட ஆண்டுகள் இந்தப் பதவியில் அவர் அங்கு பணியாற்றியதன் விளைவாக அவருக்கு வழங்கப்பட்ட பாகிஸ்தானிய குடியுரிமையையும் அவர் பெருமனதுடன் நிராகரித்தார். பாகிஸ்தான் அரசாங்கமும் மக்களும் அவரது முயற்சிகளை மிகவும் பாராட்டினர். பஞ்சாப் பல்கலைக்கழகம் 1951 டிசம்பர் 22 ஆம் தேதி அவருக்கு முனைவர் பட்டம் (Honoris Causa) வழங்கி கௌரவித்தது..

இந்த ஆரம்ப கட்டங்களில் கலாநிதி ஜாயா கட்டியெழுப்பிய [illegible] வலுவான பிணைப்புகள் கடந்த ஆறு தசாப்தங்களாக எங்களை சிறப்பான நிலையில் வைத்திருக்கின்றன. பாகிஸ்தான் மிகவும் நட்பான அண்டை நாடாகவே இன்று வரை விளங்குகிறது. இதன் காரணமாக இலங்கை பொருளாதார ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் நல்ல உறவுகளைப் பேணிவருகிறது. இறுதிக் கட்ட உள்நாட்டுப் போரில் பாகிஸ்தான் அளித்த ஆதரவு இந்த மிக அருமையான நல்லுறவுக்கு மிகச் சிறந்த சான்றாகும்.

1890 ஜனவரி 01 ஆம் தேதி கலகெதரவில் பிறந்த கலாநிதி ஜாயா தன்னை ஒரு உண்மையான தேச பக்தர் என்றும், தகுதியான ஆளுமை என்றும் நிரூபித்துள்ளார். கண்டி தர்மராஜா கல்லூரி, மொரட்டுவ பிரின்ஸ் ஒப் வேல்ஸ், கொழும்பு ஆனந்த கல்லூரி ஆகியவற்றில் சிறந்த ஆசிரியராக பணியாற்றிய பின்னர், 1921 செப்டம்பர் 01 ஆம் தேதி கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றார். 1948 ஆகஸ்ட் 1 ஆம் திகதி வரையிலான ஸாஹிராவின் இருபத்தி ஏழு வருட சேவைக் காலத்தில் பல தலைவர்களையும் சீர்திருத்தவாதிகளையும், சிந்தனையாளர்களையும் மற்றும் தத்துவவாதிகள் , சட்டமன்ற உறுப்பினர்கள், தேசிய பிரமுகர்களையும் ஸாஹிரா வெற்றிகரமாக உருவாக்கியது, அவர்கள் ஒரு அறிவார்ந்த முஸ்லிம் சமூகத்தை உருவாக்கினர். காலப்போக்கில் இவர்கள் தேசிய அளவில் அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கு பங்களிப்பவர்களாக மாறினர்.

ஸாஹிரா ஒற்றுமை மற்றும் சமூக ஒருங்கிணைப்பின் அடையாளமாக பரிணமித்தது. ஆனந்தாவின் அவரது மூன்று மாணவர்கள், பிற்காலத்தில் முன்னோடி இடதுசாரி தலைவர்களாக உருவெடுத்தனர். டாக்டர் என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்தன மற்றும் ராபர்ட் குணவர்தன ஆகியோர் மாணவப் பருவத்தில் தமக்கு வழிகாட்டிய ஜாயாவை எப்போதும் மிகுந்த மரியாதையுடன் குறிப்பிடுகின்றனர்.

இந்த வகையில் ஸாஹிராவுக்கு அனைத்து சமூகங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் இருந்தனர். அவரது துணை அதிபர்களாக ஆனந்தவிலிருந்து வந்த ஜார்ஜ் வீரமந்திரி மற்றும் திரு. விஜேரத்ன ஆகியோர் இருந்தனர். அவர் வர்த்தகப் பிரிவை ஆரம்பித்த போது அதற்குத் தலைமை தாங்குவதற்காக ஜே.ஏ. சார்ல்ஸை தேர்ந்தெடுத்தார். அவரது ஆசிரியர் குழுவில் இந்தியாவைச் சேர்ந்த ரவூஃப் பாஷா, மௌலவி ஹனிப்நத்வி, இலங்கை தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்த பண்டிதர் நல்லதம்பி, பிரபல கவிஞர் நவாலியூர் எஸ்.நடராஜன், என்.பி. பிள்ளை, திருமதி பிள்ளை, திருமதி. இ. திசா நாயக்க எனப் பலரும் காணப்பட்டனர்.

டாக்டர் ஜெயாவின் தொலைநோக்கு குணங்கள் ஆரம்ப கட்டத்திலேயே தெளிவாகத் தெரிந்தன. அவர் ஆங்கில போதனைக்கு நிறைய் முக்கியத் துவம் கொடுத்தார். ஆங்கிலத்தைப் பற்றிய மிகச்சிறந்த அறிவைக் கொண்டு மட்டுமே உலக அரங்கில் இலங்கையர் சரியான இடத்தைப் பெற முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார், மேலும் தேசிய மொழிகளைப் புறக்கணிக்காத அதே வேளையில், தனது அனைத்து மாணவர்களுக்கும் அப்பழுக்கற்ற ஆங்கிலத்தை வழங்குவதில் அவர் குறையின்றி உழைத்தார்.

ஸாஹிராவை இலங்கையின் முன்னணி கல்லூரி களில் ஒன்றாக மலரச் செய்தது மட்டுமல்லாமல், கம்பளை, மாத்தளை, புத்தளம் அலுத்கம மற்றும் வேகந்த பிரதேசங்களில் ஸாஹிராவைத் திறப்பதன் மூலம் நாட்டின் பிற பகுதிகளுக்கும் அதன் கிளைகளை விரிவுபடுத்தினார். அவரது கையால் தேர்ந்தெடுக்கப்பட்ட வாரிசான டாக்டர் ஏ.எம்.ஏ. அஸீஸ் ஸாஹிராவை அதன் உச்சத்திற்கு கொண்டு சென்றார், மேலும் கம்பளை ஸாஹிராவின் முதல்வராக நியமிக்கப்பட்ட மற்றொரு சீடரான பதியுதீன் மஹ்மூத், மிக நீண்ட காலமாக கல்வி அமைச்சராக பணியாற்றினார். பிரதம மந்திரி டி.எஸ்.சேனநாயக்க ஒருமுறை சமயச் சார்பற்ற கல்லூரிகள் பற்றிக் குறிப்பிடும்போது, புனித தோமஸின் ரெவ். ஸ்டோன், ரோயலின் ஹார்ட்லி, வெஸ்லியின் ஹைஃபீல்ட் மற்றும் ஸாஹிராவின் ஜாயா ஆகியோரின் பங்கு பற்றிக் குறிப்பிட்டார். 'உள்நாட்டு சண்டை அல்லது அரசியல் கொந்தளிப்பு இல்லாமல் இலங்கை டொமினியன் அந்தஸ்தைப் பாதுகாத்ததில், உறவுப் பாலமமைத்த இந்தப் பள்ளி ஆசிரியர்களிடமிருந்து இளைஞர்களும் முதியவர்களும் கற்றுக்கொள்ள வேண்டிய விலைமதிப்பற்ற படிப்பினைகள் இருக்கின்றன'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஹஜ் நிகழ்த்தும் இலங்கை யாத்ரீகர்களுக்காக விடுதியொன்றை அமைக்கும் பணியை நிறைவேற்றிய பின்னர் 1960 மே 31 அன்று மதீனாவில் அவர் இறையடி எய்தினார். நபிகள் நாயகத்தின் (ஸல்) பல முக்கிய ஸஹாபாக்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள 'ஜன்னத்துல் பக்கி' யில் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷாபியிலிருந்து சுவிஸ் வரை

• நேசன்

சுவிஸ் தூதரக பெண் ஊழியர் கார்னியா பெனிஸ்டர் பிரான்சிஸ் கடத்தல் தொடர்பான விவகாரம் மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கான மற்றுமொரு நிகழ்வாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது இன்னும் இரண்டு மாதங்களில் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் வரைக்கும் தொடரக் கூடும். சர்வதேச சக்திகள் நாட்டில் தலையிடுவதற்கு எதிராக அரசாங்கம் உறுதியாக நின்று செயற்பட்டது என்று மக்கள் புளகாங்கிதம் அடைவதற்கு இது ஒரு உசாத்துணையாகவும் அமையும்.

இந்த விவகாரம் தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இலங்கை வந்திருந்த சுவிஸ் வெளியுறவு அமைச்சின் சிரேஷ்ட இராஜதந்திரிகளான யோர்க் பிரீடன் மற்றும் ஹான்ஸ் பீட்டர் மொக் ஆகியோர் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்துப் பேசிய வேளையில், இந்தப் பிரச்சினையில் குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் வரை சந்தேக நபர் குற்றமற்றவர் என்று கருதப்படும் கோட்பாடு பின்பற்றப்படவில்லை என்று தெரிவித்திருந்ததாக டிசம்பர் 19 இல் சுவிஸ் வெளியுறவு அமைச்சு விடுத்த அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

ஜெனீவாவை உள்ளடக்கியிருக்கின்ற சுவிட்சர்லாந்துக்கு இது ஆச்சரியமான விடயமாக இருக்கலாம். ஆனால் இலங்கையின் சட்டப் பாரம்பரியமே இதுதான் என்பதை சுவிஸ் தூதுவர்களுக்கு விளங்குவதற்கு வாய்ப்புக்கள் இல்லாமலில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் தற்போதைய பிரதமராகவிருக்கும் மஹிந்த ராஜபக்ஷவை பாராளுமன்றத்துக்கு அனுப்பிய மாவட்டமான குருநாகலில் வைத்தியர் ஷாபிக்கு நடந்ததும் இதே விதமானதுதான். அவர் குற்றமற்றவர் என்பதுதான் இறுதியில் வந்த தீர்ப்பாகவும் இருந்த நிலையில், அவரைக் குற்றவாளியாக்கி இந்த நாட்டில் ஊடகங்கள் போட்ட ஆட்டத்தை அடக்குவதற்கு நீதியும் முன்வரவில்லை. அரசாங்கமும் முன்வரவில்லை.



சுவிஸ் பெண் ஊழியரின் பிரச்சினையில் ஊடகங்கள் பெருமளவு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டமையையும், அந்தரங்கத்துக்குப் பாதுகாப்பு இல்லாதமையையும், விசாரணைகளில் இருந்து வெளிவரக் கூடிய முடிவுகள் குறித்து முன்கூட்டியே அனுமானித்து பகிரங்கமாக கருத்துக்கள் வெளியிட்டமையையும் அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு சுட்டிக் காட்டிய சுவிஸ் வெளியுறவு அமைச்சர் இக்னேஷியோ காஷிஸ், இது இரு தரப்பும் கூட்டாகத் தெளிவுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான நம்பிக்கையை அருகச் செய்து விட்டது எனக் குறிப்பிட்டார்.

ஆனாலும், ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ முதல் தடவையாக இலங்கையின் ஊடகப் பிரதானிகளைச் சந்தித்த போதும், முதல் தடவையாக பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் செய்தி ஆசிரியர்களைச் சந்தித்த போதும் அவர்களைப் பாராட்டுவதற்கான ஒரு விடயம் ஜனாதிபதியிடம் இருந்தது. சுவிஸ் தூதரகப் பெண் ஊழியர் தொடர்பான சம்பவத்தில் ஊடகங்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பில் அவர் ஊடகங்களுக்குத் தனது விஷேட நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

கானியாவுடைய விடயத்தில் ஊடகங்கள் நடந்து கொண்ட விடயத்தில் முக்கியமானது அவருடைய பெயர் தொடர்பிலானது. கொட்டை எழுத்துக்களில் தலைப்புச் செய்தி வெளியிட்டிருந்த ஒரு பத்திரிகை அவரது பெயர் கானியாவல்ல, அவரது பெயர் சிரியலதா. அவர் தனது பெயரை மாற்றிக் கொண்டுள்ளார் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் அவருக்கு கானியா பனிஸ்டர் பிரான்சிஸ் என்ற பெயரைத் தவிர வேறு எந்தப் பெயர்களுமில்லை என சட்டமாஅதிபரே ஒரு முறை கூறியிருந்தார்.

ஒருவரைக் குற்றவாளியாகத் தெரிவு செய்வதும் பின்னர் அவரை ஊடகங்கள் வாயிலாக குற்றவாளியாக வாந்தி எடுக்கச் செய்வதும் இலங்கையின் பாரம்பரியங்களில் ஒன்றாகச் சேர்ந்திருக்கிறது. இதன் அண்மைக்கால நிகழ்வுகளில் இதே விடயத்தை ஒரு பௌத்த பிக்குவின் ஊடாக வெளிப்படுத்தி அதற்கு ஊடகப் பிரச்சாரம் வழங்கும் விடயத்தை ஊடகங்கள் மேற்கொண்டு வருகின்றன. உண்மையைத் தேடுபவர்களுக்கு ஊடகங்களில் எதுவுமே இல்லை என்ற நிலைதான் தற்பொழுது தோன்றியிருக்கிறது.

கானியாவின் விடயத்திலும், அதனைத் தேடிப் பார்ப்பதால் நாட்டுக்கு அபகீர்த்தி உண்டாகிவிடும் என்பதை விடுத்துப் பார்த்தால், மற்றுமொரு பக்கம் இருந்திருக்கலாம். சைப்ரஸ் பெண்மணியுடைய சம்பவத்தை பேராசிரியர் ரத்ன ஜீவன் ஹூல் குறித்துக் காட்டுவதற்கும் ஏதேனும் காரணம் இருக்கலாம்.

வைத்தியர் ஷாபி விவகாரம் உள்நாட்டு ஊடகங்களில் அலசப்பட்டு அது வெளிநாடுகளிலும் பரவியபோது ஊடகங்களால் நாட்டுக்கு ஏற்பட்ட அபகீர்த்தி பற்றிப் பேசப்படவில்லை. பலோப்பியன் இல்லாமல் குழந்தைக்குத் தாயான கதையை இலங்கை ஊடகங்களில் மாத்திரம் தான் காணக் கிடைத்தது. இத்தனைக்குப் பின்னாலும் வைத்தியர் ஷாபியின் விவகாரத்தை மீண்டும் ஆரம்பித்திலிருந்து பரிசீலிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் சொல்லப்பட்ட மதகுருக்களின் உதவியுடன் மேலெழுந்தன.

இந்த நிலையில் நாட்டின் சட்டத்தை வழிநடத்திச் செல்பவர்கள் யார் ? அது ஊடகங்கள் என்றால் ஊடகங்களை வழிநடத்திச் செல்பவர்கள் யார் ? இந்த இரண்டு கேள்விகளுக்குமான விடையில் தான் நாட்டின் தர்மம் தங்கியிருக்கிறது. நாட்டின் அபிவிருத்தியை முன்னோக்கிப் பேச வேண்டிய ஊடகங்கள் அரசியல்வாதிகளின் கைதுகளையும் பாலியல் கல்வியையும் ஆபாச சிடீக்கள் கைப்பற்றப்படுவதையும் பூதாகரமாக்கி வருகின்றன. நாட்டின் பொருளாதாரம் பற்றியும், நாடு எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் பற்றியும், நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பது தொடர்பிலான விவகாரங்கள் பற்றியும் அவை பேசாமடந்தைகளாக இருக்கின்றன.

சுவிட்சர்லாந்து சுட்டிக் காட்டியுள்ளதன் படி , குற்றவாளி என நிரூபிக்கப்படும் வரை அவர் வெறும் சந்தேக நபர் தான் என்ற அடிப்படை விதியை ஊடகங்களுக்குச் சொல்லித் தர வேண்டியிருக்கிறது. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்படுவதை ஊதிப் பெருப்பித்துக் காட்டுகின்ற ஊடகங்கள், அவர் நிரபராதி என நிரூபிக்கப்பட்டு விடுவிக்கப்படுவதை வெளிப்படுத்துவதில்லை. வைத்தியர் ஷாபியை சட்டம் குற்றமற்றவர் எனத் தீர்ப்பு வழங்கி விடுவித்தபோது, அவரைக் குற்றவாளியாக்குவதில் கங்கணம் கட்டிச் செயற்பட்டவர்கள் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கும் முன்வரவில்லை. வைத்தியர் ஷாபி தொடர்பிலான தீர்ப்பு வெளியாகியபோது, அதனைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும், மேல் நீதிமன்றத்தை நாடுவதாகவும் அதுரலியே ரதன தேரர் குறிப்பிட்டிருந்தார்.

குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் வரை சந்தேக நபர் குற்றமற்றவர் என்று கருதப்படும் கோட்பாட்டை இலங்கை பின்பற்றுவது இலங்கையின் சுதந்திரமான நீதித்துறைக்கு பெரும் சவாலானதொரு விடயமாகவே இருக்கிறது. ஆனால் இதனை வெல்லாதவரையில் நாட்டில் அனைவரும் எந்த நேரத்தில் தான் குற்றவாளியாக்கப்படுவோம் என்ற அச்சத்திலேயே உறைந்து வாழ வேண்டியிருக்கும்.

---

• எம்.எஸ். அமீர் ஹுஸைன்



# முஸ்லிம் அரசியல் உரிமைகளை பறிக்கும் முயற்சி வெற்றி பெறுமா?

சிறுபான்மை இனங்களான தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த தனித்துவமான அரசியல் கட்சிகளின் மூலம் பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் சந்தர்ப்பத்தை இல்லாதொழிக்கும் வகையிலான தனிநபர் பிரேரணை ஒன்றை அரசியல் அமைப்பிற்கான 20 ஆவது திருத்தமாக சமர்ப்பிப்பதற்கு முன்னாள் நீதி மற்றும் புத்தசாசன அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான விஜேதாச ராஜபக்ஷ திட்டமிட்டு வருகின்றார். அவரது இந்தப் பிரேரணை பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறச் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது.

இதுகால வரையில் சிறுபான்மை இன அடிப்படையிலான கட்சிகள் தேர்தல்களில் போட்டியிட்டு 5% சதவீத வாக்குகளைப் பெற்றுக் கொண்டால் உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இருந்து வருகின்றது. அந்தச் சந்தர்ப்பத்தை ஒழித்துக் கட்டுவதற்கான முயற்சியாகவே இந்தப் பிரேரணை அமைய இருக்கின்றது.

தனிநபர் பிரேரணை ஒன்றால் ஒரு இனம் சார்ந்த உரிமையைப் பறித்து அழித்துவிட முடியுமா? என்ன காரணத்தின் அடிப்படையில் இவ்வாறான பிரேரணை ஒன்றை விஜேதாச ராஜபக்ஷ முன்வைக்க வேண்டும் போன்ற கேள்விகள் எழுந்துள்ளன. இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் சட்டமூலமாக சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே சட்டமாகும் நிலை இருக்கின்றது. இவ்வாறான ஒரு பிரேரணை பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஒருவரால் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிப்பதால் உடனடியாக சட்டமாகும் நிலை ஏற்படுவதில்லை.

இருந்தாலும் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் இடம்பெறுமாயின் அது சபை ஒத்திவைப்பு நேர பிரேரணையாகவே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். அவருக்குச் சார்பான ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதற்குச் சாதகமாகவும் எதிராகவும் கருத்துக்களை தெரிவிக்க முடியும்.

இந்தப் பிரேரணை பற்றி ஆராய்வதற்கு முன்னர் இந்த விஜேதாச ராஜபக்ஷ யார், அவரது போக்குகள் எப்படிப்பட்டது என்பது தொடர்பாக கவனம் செலுத்துவதும் முக்கியமானதாக அமைகின்றது. இவர் நல்லாட்சி அரசாங்கத்தில் மைத்திரிபால சிறிசேனாவுடன் இணைந்திருந்த சந்தர்ப்பத்தில் முன்னாள் நீதி மற்றும் புத்தசாசன அமைச்சராக இருந்தார். பின்னர் இடையில் அமைச்சர் பதவியை இழந்தார். அதற்கு முன்னர் சந்திரிக்கா பண்டாரநாயக்கா ஆட்சியில் இணைந்திருந்தார். அதன் பின்னர் சந்திரிக்காவின் அரசாங்கத்தில் இருந்து வெளியேறி ஐ.தே.க.வுடன் இணைந்து சிறிது காலம் செயற்பட்டார். பின்னர் மீண்டும் ஐ.தே.க.வில் இருந்து வெளியேறி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்பட்டார். இறுதியாக மைத்திரிபால சிறிசேனாவின் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் இணைந்திருந்து ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் கோதாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஒருவராக மாறினார்.

இவ்வாறாக நிரந்தரமற்ற ஒரு அரசியல் கொள்கையோ கட்சியோ இல்லாதவராக சந்தர்ப்ப சூழ் நிலைகளுக்கு ஏற்ப காற்றடிக்கும் திசைக்கு மாறி மாறி அரசியல் நடத்தும் ஒருவராக இலங்கையின் அரசியல் அரங்கில் பேசப்படும் ஒருவரே இவர். ஆனாலும் 2011 ஆம் ஆண்டின் பின்னர் கலபொட அத்தே ஞானசார தேரரின் முஸ்லிம் விரோத சிந்தனைகளால் வெகுவாகக் கவரப்பட்ட ஒருவராக இவர் இருந்து வருகின்றார். அதனால் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் அனுபவிக்கும் உரிமைகள், சலுகைகளுக்கு எதிராகக் குரல் எழுப்புவதன் மூலம் முஸ்லிம் விரோத இனவாதிகளதும் சிங்கள வாத தீவிர போக்காளர்களதும் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார். இவ்வாறான ஒரு பின்னணியைக் கொண்ட ஒருவரான விஜேதாச ராஜபக்ஷவே இந்தப் பிரேரணையையும் பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பிற்கான 20 ஆவது திருத்தமாக முன்வைக்கத் துடிக்கின்றார்.

தனிநபர் பிரேரணை ஒன்றின் நிலை இவ்வாறாக அமைந்தாலும் நாட்டில் பொதுமக்கள் மத்தியில் பொதுவான அபிப்பிராயம் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது பிரதான சாதகமான காரணியாக அமைகின்றது. அத்துடன் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்து இந்த உரிமையைப் பறிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இந்தத் தனிநபர் பிரேரணை ஒரு வாய்ப்பாக அமையலாம். ஆளும் கட்சியின் நீதி அமைச்சரால் அரசியல் அமைப்பிற்கான திருத்த மசோதாவாக உள்ளடக்கிய அமைச்சரவை அங்கீகாரத்துடன் எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்தில் விவாதிக்கச் செய்து சில சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்பட்டால் இதனால் பாதிப்பு ஏற்பட இடமிருக்கின்றது.

[illegible] பான 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த 12.5% வீதம் என்ற வெட்டுப் புள்ளிக்கு திருத்தம் கொண்டு வரும் வகையில் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் அரசியல் அமைப்பிற்கான 15 ஆவது திருத்தமாக 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டத்தின் மூலம் 5% என்ற வெட்டுப் புள்ளி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கான ஆலோசனைகளை அப்போதைய சிரேஷ்ட அரசியல்வாதியாக இருந்த ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த எம்.எச்.எம் அஷ்ரப் அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு வழங்கினார். அதன் படியே 15 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

ஆனாலும் அந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்ட போது அன்றைய நிலையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பேதங்கள் இன்றி எல்லா உறுப்பினர்களும் இதற்கு ஆதரவளித்தனர். அதன் காரணமாகவே இவ்வாறான ஒரு பிரேரணை நிறைவேறியது. ஆனாலும் இன்று விஜேதாச ராஜபக்ஷ இந்தப் பிரேரணையானது அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஆர்.பிரேமதாசாவை அஷ்ரப் ஏமாற்றி சுய நல நோக்கத்தில் நிறைவேற்றியது என்ற அடிப்படையில் மிக மோசமான முறையில் இனவாத அடிப்படையில் முஸ்லிம் விரோத போக்கை ஏற்படுத்தி மிகவும் தாழ்வான அரசியல் பிரபல்யம் தேடும் வகையில் கருத்துக்களை பரப்புவதில் ஈடுபட்டுள்ளார்.

அவருக்கு ஆதரவாக அடுத்த இனத்துவேஷியான அதுரலியே ரத்ன தேரர் செயற்பட்டு வருகின்றார். ஆனாலும் முன்னாள் இடதுசாரி அரசியல்வாதியும் அமைச்சருமான டியு குணசேகர உட்பட பல தமிழ் அரசியல்வாதிகள் இந்தப் பிரேரணையை எதிர்த்து கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் அதனை எதிர்ப்பதோடு விஜேதாச ராஜபக்ஷவின் அரசியல் சாணக்கியம் பற்றிய அறிவின் ஆழத்தையும் விமர்சித்துள்ளனர்.

இந்த 5% என்ற வெட்டுப் புள்ளி முறை அறிமுகப்படுத்தப் பட்டதன் காரணமாகவே சிறுபான்மை இனங்களான தமிழ் மற்றும் முஸ்லிம் இன

அடிப்படையிலான பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்லும் சந்தர்ப்பம் அதிகமாக ஏற்பட்டது. அதனால் பேரினவாத சிங்கள பெரும்பாமை அரசியல் கட்சிகள் சிறுபான்மை இனங்களின் காலில் மண்டியிடும் நிலை ஏற்பட்டதாகக் கூறி அந்த நிலைக்கு முடிவு கட்டுவதற்காக 5% என்ற வெட்டுப் புள்ளி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பது விஜேதாச ராஜபக்ஷவின் வாதமாகும். இந்தப் பிரேரணையை பாராளுமன்றத்தில் அரசாங்கம் அங்கீகரித்தால் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, தேசிய காங்கிரஸ் கட்சி உட்பட முஸ்லிம் சமூகம் சார்ந்த மற்றும் தமிழர் சார்ந்த மலையக இன அடிப்படையிலான கட்சிகளில் இருந்து பிரதிநிதிகள் பாராளுமன்றம் வருவதை நிறுத்த முடியும் என்பது விஜேதாசவின் திட்டமாகும்.

எவ்வாறோ இலங்கையின் அரசியல் வரலாற்றில் அவ்வப்போது வந்த அரசியல் தலைவர்கள் சிறுபான்மை இனங்களுக்கு ஏற்படும் அரசியல் ரீதியான அநீதிகளைக் குறைத்து அவர்களுக்கும் நாட்டில் போதுமான அரசியல் பிரவேசத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை அரசியல் அமைப்பு மூலம் வழங்கி வந்துள்ளனர். அந்த வரிசையிலே பல அங்கத்தவ தொகுதிகள், இரட்டை அங்கத்தவ தொகுதிகள் போன்ற வாய்ப்புக்களும் உள்ளன. அந்த வழிமுறையில் ஒரு சந்தர்ப்பமாகக் கிடைத்த உரிமையே

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
# 255 H-1/1, Dr. Danister De Silva Mawatha, Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## உரிமைகளுக்கு மதிப்பளிப்பது முக்கியமானது

இம்முறைய சுதந்திர தின நிகழ்வுகளில் தேசிய கீதம் தமிழில் பாடுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்ற பொது நிர்வாக அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனின் அறிவித்தல் பெரும்பான்மைத் தேசியவாதத்தின் வெளிப்பாடாகவே நோக்கப்படுகிறது. தேசிய கீதம் என்பது ஒன்று தான். அதனை இரண்டு மொழிகளில் பாட வேண்டிய அவசியமில்லை. இது சமூகங்களுக்கிடையில் அனாவசிய பிரிவினைகளுக்கு வழிகோலும் என அவர் தெரிவித்திருக்கிறார்.

இது பிரிவினையை ஏற்படுத்துமா இல்லையா என்பது ஏற்கனவே பேசி முடிவடைந்த விவகாரம். இந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்று தீர்ப்பளிக்கப்பட்டு முடிந்த ஒன்று. பிரதம நீதியரசர் பிரியசாத், பிரதி நீதியரசர் கே.ரீ. சித்ரசிரி, முன்னாள் நீதிபதி பிரசன்ன ஜயவர்தன ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழுவினால் தமிழில் தேசிய கீதம் இசைப்பதற்கு எதிரான மனு தள்ளுபடி செய்யப்பட்டு இந்த உரிமை 2016 ஆம் ஆண்டில் உறுதிப்படுத்தப்பட்டது.

அரசியலமைப்பின் 18, 19 ஆம் உறுப்புரைகள் சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழிகளாக அங்கீகரித்துள்ளன. எனவே தமிழில் தேசிய கீதம் இசைப்பது யாப்புக்கு முரணானதல்ல என சட்டமா அதிபர் இந்த வழக்கின் போது வாதிட்டிருந்தார்.

இந்த வகையில் தமிழில் தேசிய கீதம் இசைப்பதற்கு யாப்பு இடமளித்திருக்கிறது. இது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. இனி இவற்றுக்கு மதிப்பளித்துச் செயற்படுவது தான் ஜனநாயகத்தை மதிக்கின்ற அனைவருக்கும் நல்லது. இதன் பின்னர் இது இன நல்லிணக்கத்துக்கு உதவுமா, இனங்களைப் பிரிக்குமா என்ற வாதங்களெல்லாம் அவசியமற்றது. இந்தியாவில் ஒரே மொழியில் தானே தேசிய கீதம் இசைக்கப்படுகிறது என்ற வாதமும் இலங்கைக்கு அவசியமில்லை. அங்கு முன்னூறுக்கும் மேற்பட்ட மொழிகள் பாவனையில் இருக்கின்றன. அதற்கும் மேலாக இந்திய தேசிய கீதம் பெரும்பான்மை ஹிந்தி மொழியிலன்றி சாதுபாஷா எனப்படும் சமஸ்கிருத மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த பங்காளி மொழியிலேயே பாடப்படுகிறது. முழு இந்திய மக்களும் தமது பெரும்பான்மை மொழியிலல்லாத தேசிய கீதத்தையே இசைக்கின்றனர்.

இந்த வகையில் தேசிய கீதத்தை ஒரே மொழியில் இசைப்பது நாட்டுக்கு நல்லது என்கின்ற பெரும்பான்மை வாதத்தை மாற்றுவழியில் நுழைக்கின்ற வாதங்கள் இனி நமக்கு அவசியமில்லை. இங்கு அவதானிக்கத்தக்க விடயம் என்னவெனில், ஆட்சியாளர்களின் கொள்கைக்கு ஏற்ப அரசியலமைப்பையும் நீதிமன்றத் தீர்ப்பையும் மாற்ற முனைவது தான்.

ஆட்சி மாறும் போது ஆட்சியாளர்களின் மனநிலைக்கேற்ப நாட்டின் கொள்கைகள் மாறக் கூடாது என்பதற்காகவே அரசியலமைப்பு வரையப்படுகிறது. இந்த அரசியலமைப்பையே ஆட்சிக்கு வரும் எவரும் பின்பற்ற வேண்டும். இதற்கு அப்பால் சென்று தமது அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ள முனைவது ஜனநாயக விரோதச் செயலாகும். இதற்கு இடம் கொடுக்கும் ஆட்சியாளர்கள் ஜனநாயக விரோதிகளாவார்கள்.

இந்தியக் குடியரசு யாப்புக்கு முரணாக இந்திய ஆட்சியாளர்கள் செயற்பட்டதன் விளைவாக இன்று இந்தியாவே கொந்தளிப்பில் இருக்கிறது. அந்த நாட்டுடைய முன்னேற்றம் கூட இதனால் பாதிக்கப்பட்டு வருகிறது. இலங்கையிலும் யாப்புக்கு முரணாக ஆட்சியாளர்கள் செயற்பட்ட விதத்தை கடந்த அரசாங்கத்தில் காண முடியுமாக இருந்தது. புதிய ஜனாதிபதி இந்தத் தவறுகள் மீண்டும் நடக்காமல் பார்த்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டுமேயன்றி அதே தவறு மீண்டும் நடப்பதற்கு களம் அமைக்கக்கூடாது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல: 96, கிருல வீதி, கொழும்பு 05
தொலைபேசி: 011-5353635
பெக்ஸ்: 011-5335500
ஈமெயில்: pcclwood@pccsl.lk
இணையத்தளம்: www.pccsl.lk

# இனியும் விடக்கூடாத தவறு

• அப்துல்லாஹ் மர்லின்

இலங்கை முஸ்லிம்கள் மிக முக்கியமான காலகட்டத்தை அடைந்துள்ளனர். அதன் காரணத்தினால் தமது செயற்பாடுகளை மிகுந்த அவதானத்துடனும் தூர நோக்குடனும் அமைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இச்சமூகத்தினருக்கு முன்பாக உள்ளது.

### நாட்டுப் பற்றும் சேர்ந்து வாழ்தலும்

இந்நாட்டில் 1200 வருட வரலாற்றைக் கொண்டிருக்கும் முஸ்லிம்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனித்துச் செல்லவோ ஒதுங்கி வாழவோ பிரிந்து செல்லவோ முயற்சி செய்தது கிடையாது. ஆரம்ப காலம் தொட்டு இந்நாட்டு பெரும்பான்மை மக்களுடன் தனித்துவம் பேணியபடி சேர்ந்தே வாழ்ந்து வருகின்றனர்.

அதேநேரம் இந்நாட்டுக்காக அளப்பரிய சேவைகளை செய்துள்ள முஸ்லிம்கள் தான் இலங்கையை உலக நாடுகளுக்கு அறிமுகம் செய்தனர். அந்நிய ஆக்கிரமிப்புகளுக்கு இந்நாடு உட்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உள்நாட்டு படைகளுடன் இணைந்து முஸ்லிம்கள் நாட்டுக்காகப் போராடி உயிர்த் தியாகமும் செய்துள்ளனர். அத்தோடு இந்நாட்டு மன்னர்களதும் பெரும்பான்மை மக்களதும் நம்பிக்கைக்குரியவர்களாக விளங்கிய முஸ்லிம் சமூகத்தினர் மன்னர்களது அரசவைகளில் கூட முக்கிய பதவிகளை வகித்துள்ளனர்.




இதேவேளை, பிரித்தானியரிடமிருந்து 1948 இல் இந்நாடு சுதந்திரம் பெற்ற போது கலாநிதி டி.பி ஜாயா போன்ற முஸ்லிம் தலைவர்கள் பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்து வாழ்வதையே தெரிவுசெய்தனர். அதன்படி நாட்டின் இரண்டு பிரதான பெரும்பான்மை அரசியல் கட்சிகளிலும் முஸ்லிம்கள் அங்கம் வகித்து வந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் 1984, 85 வரையும் தனி அரசியல் கட்சி அமைப்பது குறித்து முஸ்லிம்கள் எண்ணிப் பார்க்கவில்லை. ஆனால் நாடு சுதந்திரமடைந்த சொற்ப காலத்திற்குள்ளேயே தமிழ் தலைவர்கள் தங்களுக்கென அரசியல் கட்சிகளை அமைத்துக் கொண்டனர்.

இந்நாட்டு முஸ்லிம் மக்கள் எப்போதும் பெரும்பான்மை மக்களோடும் அம்மக்களின் தலைவர்களோடும் இணைந்தே செயற்பட்டு வந்தனர். அதனால் பெரும்பான்மை மக்களதும் ஆட்சியாளர்களதும் அபிமானத்திற்குரிய மக்களாக முஸ்லிம்கள் விளங்கி வந்தனர். இதன் பயனாக சவூதி அரேபியாவில் கூட முஸ்லிம்களுக்கு வழங்கப்படாத உரிமைகளும் சலுகைகளும் இந்நாட்டு முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டு அனுபவித்து வருகின்றார்கள்.

### முஸ்லிம் கட்சிக்கு வித்திட்ட ஜே.ஆர்

ஆனால் தமிழ் இளைஞர்களின் ஆயுத ரீதியிலான கிளர்ச்சியின் விளைவாக 1984, 1985 களாகும் போது முஸ்லிம்களும் பாதிக்கப்படத் தொடங்கினர். அவர்களது ஆயுதம் கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராகத் திருப்பப்பட்டது. அச்சமயம் நாட்டின் தலைவராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அன்றைய தலைவரான ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களது உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கத் தவறினார்.

இது தொடர்பில் அன்றைய முஸ்லிம் தலைவர்கள் ஜே.ஆரை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்திய போது, உங்களது விடயங்கள் தொடர்பில் தமிழ் தலைவர்களுடன் பேசிக் கொள்ளுங்கள் எனக் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து தான் கவுன்சில் ஒப் முஸ்லிம் என்ற அமைப்பு கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் தலைமையில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். எம். ஸுஹைர் உள்ளிட்ட சில முக்கியஸ்தர்களுடன் சென்னைக்குச் சென்று தமிழ் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது.

அதேநேரம், ஜே.ஆர் ஜயவர்தன சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். அம்மாநாட்டில் முஸ்லிம்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து முன்வைக்கப்படவில்லை. அவர் தலைமையிலான அரசாங்கத்தில் கூட எத்தனையோ முஸ்லிம் தலைவர்கள் இருந்தும் இக்குறைபாட்டை நிவர்த்திக்க அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. சர்வகட்சி மாநாட்டில் அரசியல் கட்சிகள் மாத்திரமே பங்குபற்ற முடியும் என அவர் நிபந்தனை விதித்ததால் முஸ்லிம்கள் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகினர்.

இலங்கை வரலாற்றில் முஸ்லிம்கள் அரசியல் ரீதியில் நிர்க்கதிக்கு உள்ளாக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவேயாகும். ஜே.ஆரின் இச்செயற்பாடுகள் முஸ்லிம்களுக்கும் அரசியல் கட்சி தேவை என்ற நிலைமையை உருவாக்கியது.

இந்தப் பின்புலத்தில்தான் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை அரசியல் கட்சியாக 1986 இல் பிரகடனப்படுததினார். அவர் இக்கட்சியை அமைத்தது முதல் வபாத்தாகும் வரையும் அதன் தலைவராக இருந்தார். என்றாலும் பெரும்பான்மை சமூகத்தினர் பகைமை மனப்பான்மையில் நோக்கும் வகையில் அவர் கட்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. 1988 ஜனாதிபதித் தேர்தலில் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு ஆதரவு நல்கிய மர்ஹூம் அஷ்ரஃப், 1994 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க - சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஸ்ரீ ல.சு.கட்சிக்கு ஆதரவு நல்கினார்.

அவர் 2000 செப்டம்பரில் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த பின்னர் கட்சியின் தலைமையை தற்போதைய தலைவரான ரவூப் ஹக்கீம் ஏற்றார். அதனைத் தொடர்ந்து 2001 முதல் 2004 வரையான காலப்பகுதியில் இக்கட்சி பல துண்டுகளாக திட்டமிட்ட அடிப்படையில் பிரிக்கப்பட்டு பலவீனப்படுத்தப்பட்டது. அதனை யார், எவ்வாறு, எந்த அடிப்படையில் செய்தனர் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் நன்கறிவர். அது குறித்து கலந்துரையாடப்பட வேண்டிய இடம் இதுவல்ல.

### மக்களிடமிருந்து தூரமான ஐ.தே.க

ஆனாலும் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீ:ல.மு.கா 2005, 2010, 2015, 2019 ஆகிய எல்லா ஜனாதிபதி தேர்தல்களிலும் ஐ.தே.கவுக்கே ஆதரவு நல்கியது. அவற்றில் 2015 தவிர்ந்த எந்தவொரு ஜனாதிபதித் தேர்தலிலும் ஐ.தே.க வெற்றிபெறவில்லை. அதிலும் 2015 முதல் 2019 வரையான ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி, ஹம்பாந்தோட்டை துறைமுக விற்பனை உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகள் ஐ.தே.க.வை பெரும்பான்மை மக்களிடமிருந்து தூரப்படுத்தியது. ஐ.தே.க அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக பாராளுமன்றத்திற்குள் முன்னெடுக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைகளின் போது தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் நடந்து கொண்ட விதம் பெரும்பான்மை மக்களிடம் பிழையான பார்வையைத் தோற்றுவித்தது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2018.10.26 அன்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் அவரது அமைச்சரவையையும் பதவி நீக்கினார். ஆனால் 2015 பதவிக்கு வந்ததும் தொடர்ந்தும் பதவியில் நீடிப்பதற்கு ஏற்றவகையில் மேற்கொண்ட அரசியலமைப்புக்கான 19 வது திருத்தத்தைப் பயன்படுத்தி 52 நாட்களில் ரணிலே மீண்டும் பிரதமரானார். ஆனால் இலங்கையில் எந்தவொரு பிரதமரும் செய்யாத இச்செயலை பெரும்பான்மை மக்கள் அங்கீகரிக்கவில்லை.

இதேவேளை இந்த 52 நாட்களில் ரணிலையும் அவரது அரசாங்கத்தையும் பாதுகாப்பதில் ஐ.தே.க வின் சிங்கள தலைவர்களை விடவும் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொண்டனர். இதன் நிமித்தம் இவர்கள் நடந்து கொண்ட விதம், கூட்டங்களில் ஆற்றிய உரைகள், நீதிமன்றங்கள் சென்ற விதம் என்பன பெரும்பான்மை மக்களை விழிப்படையச் செய்தன.

### மக்கள் ஆணைக்கு முன் 19வது திருத்தம்

இருந்த போதிலும் இந்நிலைமைகளைச் சிறிதளவேனும் கருத்தில் கொள்ளாத தமிழ் முஸ்லிம் கட்சிகள், 'சிறுபான்மையினரின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியாக முடியாது', 'சிறுபான்மை ஆதரவு இன்றி ஆட்சியமைக்க முடியாது'. 'ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் ஜனாதிபதி அபேட்சகர்' என்ற வசனங்களை கடந்த ஜனாதிபதி தேர்தலில் பெரிதும் பயன்படுத்தி பிரசாரங்களை மேற்கொண்டனர். இப்பிரசாரங்களை நம்பி வடக்கு, கிழக்கில் 90 வீதம் தமிழ், முஸ்லிம் மக்கள் ஐ.தே.க.வின் ஜனாதிபதி அபேட்சகர் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்தனர். அப்படியிருந்தும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி அபேட்சகர் கோட்டாபய ராஜபக்ஷ தான் வெற்றி பெற்று ஜனாதிபதியானார். அவருக்கு மக்கள் அளித்த ஆணையை ஏற்று ரணிலும் அவர் தலைமையிலான அரசாங்கமும் பதவி விலகிச் சென்றனர். ஆனால் 2018.10.26 இல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிராக அரசியமைப்புக்கான 19வது திருத்தத்தைப் பயன்படுத்தியது போன்று இச்சமயம் அவர்கள் பயன்படுத்தவில்லை. ஏனெனில் மக்கள் ஆணை மிகவும் தெளிவாக அமைந்திருந்தது.

ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெறுவார் என உள்நாட்டு வெளிநாட்டு ஊடகங்களும் களநிலவரமும் தெளிவாகக் கூறியும் கூட தமிழ், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அதனை ஒரு பொருட்டாகக் கூட நோக்கவில்லை. 159 இலட்சம் மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள ஒரு தேர்தலில் சுமார் 40 இலட்சம் வாக்குகள் ஒரு தீர்மானிக்கும் சக்தியாக அமைய முடியுமா? அதற்கான சூழல் நாட்டில் காணப்படுகிறதா? என்பதை இவர்கள் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். அதனை அவர்கள் செய்யவில்லை.

### பெரும்பான்மையினரை ஐக்கியப்படுத்தியவர்கள்

ஆனால் இவர்கள் மேற்கொண்ட பிரசாரமும் இவர்களது செயற்பாடுகளும் பெரும்பான்மை மக்களை ஐக்கியப்படுத்தியது. இதன் ஊடாக சிறுபான்மையினரின் ஆதரவு இன்றி ஜனாதிபதியை எம்மால் உருவாக்க முடியும் என்பதை அவர்கள் நிரூபித்துள்ளனர். இத்தேர்தலில் வாக்களிப்பதற்காக வெளிநாடுகளில் தொழில்புரியும் வாக்காளர்கள் கூட வந்தனர். அதேபோன்று எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் சிறுபான்மையினரின் ஆதரவின்றி அரசாங்கத்தை அமைப்பதற்கான முயற்சிகளில் ஸ்ரீ.ல.பொ.பெரமுன ஈடுபட்டுள்ளது. அதுவும் அவர்களுக்குச் சாத்தியமில்லாத காரியமுமல்ல. ஏனெனில், 2010 பொதுத் தேர்தலில் 144 ஆசனங்களை ஐ.ம.சு.மு வெற்றி பெற்றமை தெரிந்ததே.

இருந்தும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் எடுத்த நிலைப்பாட்டுக்கு ஏற்பட்ட பின்னடைவு அல்லது தோல்வி, அதன் விளைவாக சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள், அவற்றைச் சீரமைத்து நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் என்பன தொடர்பில் மீளாய்வு செய்யாது ஆக்கபூர்வமான திட்டங்களை முன்னெடுப்பதை விடுத்து பொதுத் தேர்தலில் சஜித் பிரேமதாசவை வெற்றிபெறச் செய்யலாம் என முஸ்லிம் கட்சிகள் கூறத் தொடங்கியுள்ளன. ஆனால் களநிலவரங்களை ஆய்ந்தறியாது மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்ப்பது ஆரோக்கியமானதல்ல.

அதனால் முஸ்லிம்கள் மிகவும் கவனமாகவும் தூர நோக்கோடும் சிந்தித்து கடந்த ஜனாதிபதி தேர்தலில் விட்ட தவறை எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஒரு போதும் விட்டுவிடக்கூடாது. ஏனெனில் கடந்த தேர்தலில் விட்ட தவறினால் முஸ்லிம்கள்தான் பெரும்பான்மையினரால் பிழையாக நோக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலையிலிருந்து மீட்சிபெற வேண்டியது காலத்தின் அவசியமானதாகும். அதுவே சமூகத்தின் சுபீட்சத்திற்கும் மேம்பாட்டுக்கும் துணை புரியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்தின் தெவிட்டாத ருசி

## 19 இல் கைவைத்தலும் ஜே.ஆர்.இன் இருண்ட யுகத்திற்கு மீள்தலும்

• இப்கார் ஃபயூமி

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு உருவாக்கப்பட்ட இடைக்கால அரசாங்கம் அதிகாரத்தை பல தசாப்தங்களுக்குத் தக்கவைப்பதற்கும் சிறுபான்மை மக்களை அரசியல் பங்கேற்பிலிருந்து சேய்மைப்படுத்துவதற்கும் முடியுமான அனைத்து மூலோபாயங்களிலும் கவனம் குவித்து வருகின்றது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் தெவிட்டாத ருசியை சுவைப்பதற்கு வரலாற்றில் என்றென்றைக்கும் இல்லாத அரசியல் சூழ்ச்சித் திட்டங்களில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

சமீபத்தில் விஜேதாஸ ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அரசியலமைப்பு திருத்தம் குறித்த தனிநபர் பிரேரணை இந்நாட்டின் அரசியல் எதிர்காலம் குறித்த மிகப் பெரும் சந்தேகங்களையும் அச்சங்களையும் உருவாக்கி வருகின்றது. ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பியது போன்று, இது விஜேதாஸவின் பிரேரணையா மஹிந்த அரசின் பிரேரணையா என்பதை அரசாங்கமே கூற வேண்டும்.

பெரும்பான்மை சிங்கள பௌத்தர்களை மட்டும் உள்ளடக்கிய பாராளுமன்றத்தையும், அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் தீர்மானிக்கும் ஒரே வாக்கு வங்கியாக சிங்கள மக்களை மாத்திரம் ஆக்கும் இந்த சதித் திட்டத்தை ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து தோற்கடிக்க வேண்டும் என்ற கருத்தை பிமல் காட்டமாக வலியுறுத்தியிருப்பது கவனிப்புக்குரியது.

1977 இல் அதிகாரத்திற்கு வந்த ஐ.தே.க. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது. தேர்தல் முறை மாற்றப்பட்டது. அரசியலமைப்பின் 14 ஆவது திருத்தத்தின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 ஆக உயர்த்தப்பட்டது. விகிதாசாரத் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை தனது 70 ஆவது வயதில் ஜே.ஆர். ஜெயவர்தன கையில் எடுத்தார்.

நாட்டின் அனைத்து மக்களாலும் ஜனாதிபதி தெரிவுசெய்யப்படும் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் வாக்களித்த அனைத்து மக்களையும் முட்டாளாக்கும் நிறைவேற்று அதிகார முறைமையை ஜனாதிபதி கையில் எடுத்தார்.

ஜே.ஆர். 1977 இல் உருவாக்கிய அரசியல் அமைப்பு, விக்டர் ஐவன் குறிப்பிடுவது போன்று இலங்கை அரசியல் வரலாற்றில் அரசிலமைப்பு நெருக்கடியின் உச்சகட்டமாகும். ஏற்கனவே நிலவி வந்த அரசியல் சீர்கேடுகளை ஜே.ஆர். உச்சத்திற்குக் கொண்டு வந்தார். ஊழல், இலஞ்சம், வீண்விரயம், நிதி மோசடி, அரச அதிகாரிகளின் துஷ்பிரயோகம் இவை அனைத்திற்கும் ஜே.ஆர்.இன் அரசியலமைப்பெ பிரதான காரணமாகும். குறிப்பாக நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் அவர்களின் தலைவிதியையும் கையாளும் அதிகாரத்தை ஓர் ஒற்றைப் பூதத்திடம் ஒப்படைக்கும் ஜனாதிபதி முறைமை ஜே.ஆர். இனால் அறிமுகப்படுத்தப்பட்ட சாபக்கேடாகும்.

கடந்த 37 ஆண்டு காலமாக இம்முறையைக் கையாண்ட ஜனாதிபதிகள் தமது எண்ணங்களுக்கு ஏற்ப நாட்டின் அனைத்து விவகாரங்களிலும் மூக்கை நுழைத்து, பெரும் அரசியல் சீர்கேடுகளுக்குக் காரணமானார்கள். ''நான் ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்ற மாட்டேன். அது என்னால் முடியாது. அதைத் தவிரவுள்ள அனைத்தையும் எனக்கு மாற்ற முடியும்'' என ஜே.ஆர். ஜெயவர்தனவைச் சொல்ல வைத்தது இது.

''நான் சொல்வதே சட்டம். ஏனென்றால் நான் ஜனாதிபதி'' என்றார் சந்திரிக்கா. ''நாம் எண்ணினால் அரசியலமைப்பையே மாற்றியமைப்போம்'' என்றார் மஹிந்த. இதுதான் நிறைவேற்று அதிகாரத்தின் சாபக்கேடு.

ஒருவர் ஆறு வருட பதவியைக் கொண்ட ஜனாதிபதியாக இருக்கலாம். அவர் எத்தனை முறைமையும் தேர்தலில் போட்டியிடலாம். மிக முக்கிய அமைச்சுப் பதவிகளை தம் வசம் வைத்துக் கொள்ளலாம். ஜே.ஆர். நிதி, பாதுகாப்பு,



உள்நாட்டு விவகாரம் ஆகிய அமைச்சுக்களை தம் வசம் வைத்திருந்தார். மஹிந்தவும் அவ்வாறே செய்தார். அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தது. அதற்கு பிரதமரின் ஆலோசனையையோ சிபாரிசையோ பெற வேண்டியதில்ல. எவரது ஆலோசனையையும் பெறாமல் தலைமை நீதிபதி, தலைமைப் பொலிஸ் அதிகாரி, முப்படைகளின் தளபதி ஆகியோரை நியமிக்கும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருந்தது. ஜனாதிபதி மாளிகைக்கான செலவினங்களைத் தீர்மானிப்பது, ஒதுக்குவது அனைத்துமே அவரது அதிகாரத்திலேயே இருந்தது. பிரதமர் உட்பட நாட்டின் எந்த உயர் அதிகாரியையும் தான் நினைத்த மாத்திரத்திலேயே பதவி நீக்கம் செய்யும் அதிகாரமும் இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு இருந்தது. எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக விரும்பும் நேரத்தில் பாராளுமன்றைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தது.

இவற்றையெல்லாம் முழு நிறைவாக துஷ்பிரயோகம் செய்த ஒரே ஜனாதிபதி சர்வதிகார வெறி பிடித்த ஜே.ஆர் மட்டுமல்ல. தொடர்ந்து வந்தவர்கள் அதே பாதையில்தான் பயணித்தார்கள். நீண்ட காலமாக இம்முறை மாற்றப்பட வேண்டும் என்ற விவாதம் அரசியல் அரங்கில் சூடேற நிகழ்ந்து வந்துள்ளது. புத்திஜீவிகள் மதத் தலைவர்கள், சமூக அரசியல் செயற்பாட்டாளர்கள் குறிப்பாக நேர்மையையும் நீதியையும் நேசிக்கும் அனைத்து ஜனநாயக சக்திகளும் இம்முறையில் மாற்றம் வேண்டும் என்று போராடி வந்துள்ளனர். குறிப்பிட்டளவு அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதே அவர்களின் ஒரே எதிர்பார்ப்பு.

2015 ஜனவரித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்ரியை களமிறக்கி, முன்னின்று உழைத்தவர்கள் அனைவரும் அதிகாரத்திற்கு வந்து 100 நாட்களில் தாம் செய்து முடிக்கப் போகும் காரியங்களில் ஒன்றாக நிறைவேற்று அதிகார முறையை ஒழிப்பதை முன்னிறுத்தினர். ஆனால் நான்கரை ஆண்டு காலம் முடிந்தும் எதிர்பார்க்கப்பட்ட மாற்றம் நிகழவில்லை. ஆனால், குறிப்பிட்ட அளவு 19 ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு ஜனாதிபதியின் சில அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டன.

இரண்டு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதிப் போட்டியில் ஒருவர் களமிறங்க முடியாது, ஜனாதிபதி எந்தவொரு அமைச்சர் பதவியையும் வகிக்க முடியாது, பிரதமரின் சிபாரிசின் பேரிலேயே அமைச்சர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர், பெரும்பான்மை கொண்ட அரசாங்கம் ஒன்று ஆட்சியில் இருக்கும் பட்சத்தில் நான்கரை ஆண்டுகளுக்கு முன்பாக பாராளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியாது. பொலிஸ், நீதி, நிருவாகம் சார்ந்த சுதந்திர ஆணைக் குழுக்கள் உருவாக்கப்படும். அதன் மூலம் அவை ஜனாதிபதியின் தலையீடு இன்றி, சுதந்திரமாகச் செயல்படும்.

இத்தகைய மாற்றங்கள் சில 2015 ஆம் ஆண்டில் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்டது. அதுவே 19ஆவது திருத்தம் என அழைக்கப்படுகின்றது. தற்போது ராஜபக்ஷ அரசாங்கத்தின் சார்பாக விஜேதாச முன்வைத்துள்ள திருத்தங்கள் 19ஐ மீண்டும் திருத்துவதன் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மீளவும் அதிகரித்து ஜே.ஆர். யுகத்திற்கு நாட்டை இட்டுச் செல்வதற்கு முயற்சிப்பதாகும். அவர் 21, 22 ஆகிய இரு சட்ட மூலங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். அவை அடங்கிய விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளமை திரைமறைவுக்குப் பின்னால் நிகழும் ஒரு அரசியல் சூழ்ச்சித் திட்டத்தினை வெளிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, விஜேதாசவினால் முன்வைக்கப்பட்டுள்ள இத்திருத்தங்கள் சிறுபான்மை சமூகங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சிறுபான்மைக் கட்சிகளின் பாராளுமன்றப் பிரவேசத்தைத் தடுக்கும் கபட நோக்கம் கொண்டவை என கடும் விமர்சனம் எழுந்துள்ளது. அரசியலமைப்பின் 15 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்யும் வகையிலேயே விஜேதாச 21 ஆவது திருத்தத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

1978 இல் ஜே.ஆர். கொண்டு வந்த விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையின்படி ஒரு மாவட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரைத் தேர்தெடுப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட கட்சியொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வாக்கு சதவீதம் 12.5 ஆக நிர்ணயிக்கப்பட்டது. அதன் மூலம் சிறிய கட்சிகள் -குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகள் பாராளுமன்றம் நுழைவது மிகப் பெரும் சவாலாக விளங்கியது.

இதனை உணர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப், இம்முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு கடும் பாடுபட்டார். 1988 இல் நடைபெற்ற ஜனாதி பதித் தேர்தலில் ஆர். பிரேம தாஸ வேட்பாளராகக் களமிறங்கினார். அப்போது அரசியலமைப்புச் சட்டத்தின் 15 ஆவது திருத்தத்தில் உள்ள அங்கீ கரிக்கப்பட்ட கட்சியொன்று பெற்றுக் கொள்ள வேண்டியெ 12.5 வீத வெட்டுப் புள்ளியை 5 வீதமாகக் குறைப்பதற்கு உடன்பட்டால் முஸ்லிம் காங்கிரஸ் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் என்று சாமர்த்தியமான முறையில் சமரசம் செய்தார் அஷ்ரப்.

விளைவாக அது 12.5 வீதத்திலிருந்து 5 வீதமாகக் குறைக்கப்பட்டது. சிறு கட்சிகளுக்கும் சிறுபான்மைக் கட்சிகளுக்கும் பாராளு மன்றம் நுழையும் வாய்ப்பு வாய்த்தது. அஷ்ரபின் இந்த அரசியல் சாதனையால் சின்னஞ் சிறு தமிழ் கட்சிகள் கூட குறைந்த வாக்குகளோடு பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. இன்று மீன்பிடி அமைச்சராக உள்ள டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் இம்முறை மாற்றப்பட்டதன் மூலமே பாராளுமன்றத்தைக் காணும் வாய்ப்பைப் பெற்றனர்.

விஜேதாச, மஹிந்த அரசாங்கம் சார்பில் முன்வைத்துள்ள 21 ஆவது திருத்தம் 15 ஐ மாற்றி பழைய யுகத்திற்கு நாட்டை இட்டுச் செல்லும் நோக்கிலானது. 12.5 என வெட்டுப் புள்ளி அதிகரிக்கப்பட்டால் அதாவது 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் சிறிய கட்சிகள் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வது பெரும்பாலும் இல்லாமல் போய்விடும். இது சிறுபான்மைச் சமூகங்களை பாராளுமன்ற அரசியலில் இருந்து முற்றாகவே ஒதுக்கும் உள் நோக்கம் கொண்டது.

21 நடைமுறைக்கு வந்தால் தற்போது மஹிந்த அணிக்கு ஆதரவளிக்கும் சில சில்லறைக் கட்சிகள் கூட பாராளுமன்றப் பதவி நிலைகளை இழக்க நேரிடும். மாற்றீடாக மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியிலேயே போட்டியிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும். எப்படியோ சிறுபான்மைச் சமூகங்களை அரசியல் பலமற்றவர்களாகவும் பேரம் பேசும் ஆற்றல் அற்றவர்களாகவும் ஆக்குவதே இதன் இறுதி நோக்கம். ஆனால், இதை நிறைவேற்றுவதற்குத் தேவையான மூன்றில் இரண்டை சிறுபான்மையினரின் பங்கேற்பு இன்றி பெற்றுக் கொள்வதுதான் அரசாங்கத்திற்குள்ள அடுத்த சவால்.

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தமும் மிகுந்த சர்ச்சைக்குரியது. அதன் பிரகாரம் உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்கும்போது அரசியலமைப்புப் பேரவையின் அனுமதிக்குப் பதிலாக நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டு ஜனாதிபதியினால் நீதிபதிகளை நியமிக்க முடியும் என்று கூறப்படுகின்றது.

ஏற்கனவே 2015 இல் கொண்டு வரப்பட்ட மாற்றத்தின்படி அரசியலமைப்புப் பேரவையின் அனுமதியின்றி உயர் நீதிமன்ற நீதிபதியை ஜனாதிபதியால் நியமிக்க முடியாது. விஜேதாசவின் திருத்தப் பிரேரணை வெறும் நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஆலோசனையைப் பெறுவது போதுமானது என வாதிடுவதன் மூலம் நீதித் துறையின் சுயாதீனம் இழக்கப்படுவதோடு, தனது கட்டளைக்குப் பணியாத ஒரு நீதிபதியை பதவியிலிருந்து தூக்கி வீசும் அதிகாரத்தையும் ஜனாதிபதி தன் வசம் எடுத்துக் கொள்கின்றார்.



அதேபோன்று சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், பாராளுமன்ற செயலாளர், குறைகேள் அதிகாரி (Ombudsman) போன்ற பதவிகளுக்காக நபர்களை நியமிக்கும்போது அரசியலமைப்புப் பேரவையின் அனுமதி பெறப்பட வேண்டும் என 2015 இல் 19 ஆவது திருத்தம் கூறுகிறது. அதை மாற்றுவதற்குப் பரிந்துரைக்கப்படுகின்ற 22 ஆம் திருத்தம், பிரதமரின் கருத்தைக் கேட்டு ஜனாதிபதியால் நியமிக்க முடியும் என வாதிடுகின்றது.

எந்த அமைச்சும் ஜனாதிபதி வசம் இருக்க முடியாது என 19ஆவது திருத்தம் வலியுறுத்துகின்றபோது விரும்பும் அமைச்சுப் பதவியை ஜனாதிபதி தன் வசம் வைத்துக் கொள்ளலாம் என்று 22 பரிந்துரைக்கின்றது.

இவ்வாறு ஏற்கனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக் திகழும் ஒருவருக்கு மென்மேலும் அதிகாரத்தைக் குவிக்கும் 21, 22 திருத்தங்கள் ஜனநாயகத்தைப் புதைகுழிக்கு அனுப்பும் சதியாகும். ஜே.வி.பி. கட்சி விஜேதாச ராஜபக்ஷவின் தனிநபர் பிரேரணை அரசாங்கத்தின் முன்னோட்டம் என்றும் எதிர்வரும் பொதுத் தேர்தலை அடுத்து இந்த சூழ்ச்சியில் அரசாங்கம் ஈடுபடும் எனவும் அதை தாங்கள் கடுமையாக எதிர்ப்போம் என்றும் தெரிவித்துள்ளது.

தேர்தல் மேடைகளில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்குப் புறம்பாகவே அரசாங்கத்தின் அனைத்து நகர்வுகளும் உள்ளது என்று அவர் சாடியுள்ளார்.

''நாட்டு வளங்களை விற்க மாட்டோம் என ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் பிரச்சாரம் செய்தவர்கள் 2 மாதங்கள் முடிவதற்குள் கொழும்பு சாரணர் மாவத்தை, பேரே வாவி, மற்றும் சங்கரில்லா ஹோட்டலுக்கு இடைப்பட்ட மூன்று ஏக்கர் காணியை சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுக்குக் கொடுத்துவிட்டது'' என விமர்சித்துள்ளார் பிமல் ரத்நாயக்க.

எவ்வாறாயினும், மங்கள சமரவீர, தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடுவது போன்று அரசியலமைப்பை மாற்றுவதற்கு ஒரு தகாவழிச் சூழ்ச்சி நடக்கின்றது. பாராளுமன்றத்திற்கு வரும் புதிய கட்சிகள் புதிய, புரட்சிகர கொள்கையுடனும் எதிர்கால நோக்குடனுமே வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்கு விஜேதாச கொண்டுவந்துள்ள திருத்தம் பழங்குடிச் சிந்தனையையே பிரபலிப்பதாக விஜித ஹேரத் கூறியுள்ளமையும் கவனிப்புக்குரியது.

யார் என்ன சொன்னாலும் சர்வதிகாரத்தின் தெவிட்டாத சுவை ருசிப்பதற்கு இதமானது என்பதற்காய் நாம் மீண்டும் ஜே.ஆர்.இன் இருண்ட யுகத்தை நோக்கி நகராமல் இருக்கக் கடவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல தாய்நாடு 03



- ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி -

# அனைத்து தரப்புக்களையும் உள்ளடக்கிய தேசியவாதமே காலத்தின் தேவையாகும்

உலகில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு மாற்றங்கள் இடம்பெறும். அம்மாற்றங்களுக்கேற்ப நாமும் நடந்துகொள்ள வேண்டும். இரண்டாம் உலகப் போர் முடிவடையும் வரை ஐ.நா. சபை என்றொரு தாபனம் இருக்கவில்லை. சர்வதேச சட்டங்களும் காணப்படவில்லை. முன்பு அதிகாரம் யாரிடம் இருந்ததோ அவர்கள் நாடுகளைக் கைப்பற்றும் நிலையே காணப்பட்டது. சர்வதேச எல்லைகளும் அப்போது சரியாக வகுக்கப்பட்டிருக்கவில்லை. அவரவர் விரும்பியவற்றை செய்துகொண்டிருந்தார்கள். அப்போது கடைபிடிக்கப்பட்ட இஸ்லாமிய சட்டதிட்டங்களை இன்றைய காலத்திலும் அதேபோன்றே பின்பற்றுவது பிழையானது. அது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்.

12ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இஜ்திஹாதின் வாயில்கள் மூடப்பட்டு விட்டதாக எப்படிக் கூற முடியும்? உலகம் அழியும் வரை இஜ்திஹாத் செய்துகொண்டுதான் இருக்க வேண்டும் என்பது எனது கருத்து. உலகில் இடம்பெற்று வருகின்ற விஞ்ஞான அறிவியல் ரீதியான அபிவிருத்திகளுக்கு உட்பட்டதான சூழ்நிலையில் நாம் முஸ்லிம்களாக இஸ்லாத்தை காப்பாற்றிக் கொண்டு கண்ணியத்துடன் வாழ்வது எப்படி என்கின்ற விடயம் மிக முக்கியமானது. உதாரணத்திற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பு மரணித்த ஒருவரை தற்போது எழுப்பிவிட்டால் அவர் தற்காலத்தில் இடம்பெற்றிருக்கின்ற தொழில்நுட்ப ரீதியான மாற்றங்களைக் கண்டு வியப்படைவார். ஐம்பது வருட காலத்தில் உலகில் மிகப்பெரும் மாற்றங்கள் இடம்பெற்றிருக்கும் என்றிருந்தால் 1440 வருடங்களுக்கிடையில் எவ்வளவு பாரிய மாற்றங்கள் இடம்பெற்றிருக்கும்?

நாம் இஜ்திஹாத் செய்து தற்போதைய நவீன சூழலுக்கேற்றவாறு ஆய்வுகளை மேற்கொண்டு மார்க்கத்தை பின்பற்றுவது மிக முக்கியம். இஜ்திஹாத் மூடப்பட்ட காரணத்தைக் கொண்டே முஸ்லிம்கள் பின்தள்ளப்பட்டார்கள் என்பதே உண்மை.

இன்றைய உலகளாவிய போக்குகள் மிகவும் வித்தியாசமானவை. பத்து வருடங்களுக்கு முந்திய இந்தியாவின் ஜனாதிபதியாக அப்துல் கையும் மசாட் என்கின்ற முஸ்லிம் பதவி வகித்தார். அப்போது இந்திய சனத்தொகையில் முஸ்லிம்கள் 14 வீதமே காணப்பட்டனர். பிரதமராக சீக்கிய இனத்தைச் சேர்ந்த மன்மோகன் சிங் பதவி வகித்தார். அப்போது சீக்கியர்கள் இந்தியாவில் 1 வீதம். பல்கலாசாரம் (Multi culture) மிகவும் உச்சத்தில் இருந்த காலப்பகுதியே அது. அமெரிக்காவிலும் அப்போது ஒரு முஸ்லிமின் புதல்வரான கறுப்பினத்தைச் சேர்ந்த பராக் ஒபாமா ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார். ஆனால் இன்றைய நிலைமைகள் மிகவும் வித்தியாசமானவை. இன்று அமெரிக்காவில் வெள்ளை மேலாதிக்கவாதியான டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக உள்ளார். இந்தியாவிலும் தீவிர இந்துத்துவவாதியான மோடி பிரதமராக உள்ளார். இங்கிலாந்தில் வெள்ளை மேலாதிக்கவாதி மொரிஸ் ஜொன்சன் பிரதமராகத் தெரிவாகியுள்ளார். இலங்கையிலும் அதே போக்குத்தான் ஏற்பட்டிருக்கிறது. பெரும்பான்மையின மக்கள் முன்வந்து அவர்களுக்கான தலைவரை தெரிவுசெய்துள்ளார்கள்.

தேசியவாதம் (நாட்டுப்பற்று) இன்று மிகப்பெரியளவில் மேலெழுந்திருக்கிறது. நாட்டைக் காப்பாற்ற வேண்டும், ஊரைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற தேசியவாத அலை இன்று உருப்பெற்றிருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்பு டேவிட் கமரன் அலை, பராக் ஒபாமா அலை, மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் அலை என்பதாக பல்கலாசார அலை மேலோங்கிக் காணப்பட்டது. இன்று தேசியவாத சிந்தனை மேலெழுந்துள்ளது. இதை நாம் ஏற்றுக்கொண்டோமா? இல்லையா? என்பது ஒருபுறமிருக்க, இலங்கையில் தற்போது இந்த அலையே உருப்பெற்றிருக்கிறது. இவ்வலையில் நாமும் ஒரு பங்காளராவதா? அல்லது அதில் அடிபட்டுச் செல்வதா? என்கின்ற விடயமே எம் முன்னால் உள்ளது. இத்தேசியவாத அலையில் நாமும் பங்காளராவது எப்படி? இதற்கு நாம் ஒரு கருத்தியலை (Concept) அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அதாவது அனைத்து தரப்புக்களையும் உள்ளடக்கிய தேசியவாதம் (Inclusive Nationalism) சிங்கள, பௌத்த, முஸ்லிம், தமிழ், கிறிஸ்தவம் ஆகிய எல்லோரும் சேர்ந்து இலங்கையர் என்னும் அடையாளத்தை உருவாக்கிக் கொண்டு தேசியவாத அலையில் இணைந்து போக முடியும்.

இதுவல்லாமல் 'நாம் முஸ்லிம்கள், நாம் வித்தியாசமானவர்கள்' என்கின்ற தோரணையில் செல்லும் போது எவ்வாறு இணைந்த தேசியவாதத்தை உருவாக்குவது? இப்படியிருக்கின்ற போது நாம் சிங்களத் தேசியவாதத்தையே மேலெழுப்பிவிடுகிறோம். இந்தத் தெரிவு யாரிடம் உள்ளது? சிங்களப் பெரும்பான்மை மக்களுக்கு தமக்கானதொரு தலைமையை உருவாக்கும் தேவையுள்ளது. ஆனால் ஒரு நாட்டின் தலைவர் அல்லது அரசாங்கம் பெரும்பான்மையினுடைய அரசாங்கமாக இருக்க வேண்டுமா? அல்லது தாமும் பங்குகொள்ளும் அரசாங்கமாக இருக்க வேண்டுமா? என்பதைப் பற்றி சிறுபான்மையினரே தீர்மானிக்க வேண்டும். பெரும்பான்மையின மக்களோடு நாமும் சேர்ந்து எமக்கான அரசாங்கத்தைத் தெரிவுசெய்து கொண்டால் எமக்கும் எமது சிந்தனைகளைப் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.

ஆனால் நாம் ஒருபுறமிருக்க ஒரு கூட்டம் மாத்திரம் ஒரு நாட்டின் ஆட்சிபீடத்தை தெரிவுசெய்து கொண்டால் அவர்கள் எவ்வளவு தூரம் அவ்வாட்சியை தெரிவுசெய்யக் காரணமாக இருந்தார்களோ நாங்களும் அவர்களுடைய தெரிவுக்கு காரணமாக இருந்துவிடுகிறோம். எனவே இந்த யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் நாம் அனைத்து தரப்புக்களையும் உள்ளடக்கிய தேசியவாத சிந்தனையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். எமது சமய விடயங்களை விட்டுக்கொடுக்காமல் இந்நாட்டிற்கு உரியவாறு மற்றவர்களோடு இணைந்து பயணிப்பதில் எவ்விதக் குறைகளும் ஏற்படப்போவதில்லை. உலகில் பலவகையான நாடுகள் காணப்படுகின்றன. உலகில் 51 நாடுகள் முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளாகும். அவர்கள் ஒன்றிணைந்து OIC ஐ உருவாக்கியுள்ளனர். அந்நாடுகளில் வாழும் முஸ்லிம்களது வாழ்க்கை முறை வித்தியாசமானது. இன்னும் சில நாடுகள் பல்கலாசார வாழ்வு முறைகளை கொண்டுள்ளன. இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம். இன்னும் சில நாடுகள் தாராளவாத சிந்தனையுடையவை. இதற்குக் கனடாவை குறிப்பிடலாம்.

இன்னும் சில நாடுகள் கிறிஸ்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும். உதாரணமாக நோர்வே, பெல்ஜியம், ஜேர்மனி. இன்னும் சில நாடுகளில் நாத்திகர்களே அதிகம் உள்ளனர். இங்கிலாந்தில் 50 வீதம் நாத்திகர்கள். யப்பானில் 70 வீதம் நாத்திகர்கள். தென்கொரியாவில் 70 வீதம். சீனாவில் 90 வீதமானவர்கள். எனவே யாராவது இங்கு வாழ்வது போன்று இன்னுமொரு இடத்தில் வாழ முடியும் என்றாலோ அல்லது நான் எங்கு வாழ்ந்தாலும் ஒரே மாதிரிதான் வாழ்வேன் என்றாலோ அதில் ஒரு கேள்வி தொக்கி நிற்பதைக் காணலாம். இதனால் நாம் ஏதாவதொரு நாட்டில் வாழ்வது போன்று இங்கு வாழ முடியாது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். நாம் வாழ்வது இலங்கையில். எனவே நாம் இலங்கையை அறிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையின் சனத்தொகை, சூழமைவு, கலாசாரம், கல்வி மற்றும் வரையறைகள் என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். எனவே சர்வதேச ரீதியான போக்கில் அவதானம் செலுத்தி, சிந்தித்து இலங்கையின் சூழமைவையும் நன்றாக ஆராய்ந்து நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதே முக்கியம். இதில் கல்வி, மொழி, கீழ்ப்படிவு ஆகிய விடயங்கள் மிக முக்கியமானவை. இவ்விடயத்தில் சிந்தித்து நடந்துகொள்ள வேண்டும்.

# தேசிய கீதமும் விவசாய மீள்கட்டமைப்பும்

- விக்டர் ஐவன்

தமிழில்: ராஃபி சரிப்தீன்

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீது சிங்கள மக்கள் வைத்திருக்கின்ற எதிர்பார்ப்பானது தற்போதைய நிலையிலும் உயர்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. எனினும் ஜனாதிபதி பொறுப்பெடுத்துக் கொண்ட நாடு நல்ல நிலையில் இருக்கும் நாடொன்றல்லாது உச்ச அளவில் பிரச்சினைக்குள்ளாகியிருக்கின்ற நாடாகவே காணப்படுகின்றது. தற்போதைய நிலையில் கடன் பிரச்சினையானது மற்றைய அனைத்து பிரச்சினைகளையும் இன்னும் சிக்கலானவைகளாக மாற்றிக்கொண்டிருப்பதுடன் பிரச்சினைகளின் மூல காரணியாகக் கருதப்படுகின்ற சாதி, இன, மத ரீதியிலான வேறுபாடுகள் இன்னமும் அதே நிலையிலேயே காணப்பட்டு வருகின்றன.

சிங்கள பௌத்தர்களின் வாக்குகளினால் மாத்திரம் ஜனாதிபதி தெரிவாகியிருப்பதன் காரணமாக அரசாங்கத்தினது சிங்கள பௌத்தத் தன்மையில் மாற்றம் ஏதும் ஏற்படாத அடிப்படையில் தமது பணிகளை முன்னெடுக்க வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக நாட்டின் பிரச்சினைகளை நடுநிலையாக நின்று கையாளாமல் சிங்கள பௌத்தர்கள் பக்கம் நின்று அணுக வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. அடுத்த பொதுத் தேர்தலில் சிங்கள பௌத்த வாக்குகளின் மூலமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையினைப் பெற்றுக்கொள்ளும் கனவொன்று ஜனாதிபதிக்கு இருப்பதனால் சிங்கள பௌத்த எழுச்சியானது குறைந்து செல்லாமலிருப்பதனை உறுதி செய்துகொள்வதற்காக அவ்வப்போது அதற்குச் சாதகமான அடிப்படையிலான சமிக்ஞைகளை வெளிப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

வடக்கில் மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பான பிரச்சினையின் போது அதனை பிணக்கொன்றாக உருவெடுக்கவிடாமல் நிகழ்வுகளை நடத்துவதற்காக இடமளிக்கும் அடிப்படையிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் சிங்கள பௌத்தம் என்ற கொள்கையானது எந்த விதமான மாற்றத்திற்கும் உட்படுத்தப்படாமலிருக்கின்றது என்பது சிங்கள மொழியில் மாத்திரம் தேசிய கீதத்தினை பாட வேண்டும் என்ற நிலைப்பாடு உருவாக்கப்பட்டதன் ஊடாகத் தெரியவருகின்றது.

தேசிய கீதம் சிங்களத்தில் மாத்திரம் பாடுவதானது தமிழ் பேசும் மக்களுக்கு மகிழ்ச்சிகரமான ஒரு விடயமாக இருக்கப் போவதில்லை என்ற போதிலும் அது பண்டாரநாயக்கவின் சிங்களம் மட்டும் என்ற கொள்கையின் அளவுக்கு இந்த தேசியகீதப் பிரச்சினை அவர்களை அழுத்தங்களுக்கு உள்ளாக்குவதாக அமையாது. எனினும் இந்தக் கொள்கையானது ஜனாதிபதியின் நிலையை பலப்படுத்துவதற்கு காரணமாக அமையும் என்பதாகவும் கூறமுடியாது.

### தேசிய கீதம்

பேராசிரியர் கே.எம். டீ சில்வா அவர்களது ஜே.ஆர் ஜயவர்தன குறித்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற விபரங்களின் அடிப்படையில் 1949 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடாத்தப்பட்ட சுதந்திர நிகழ்வின் போது அதுவரை காலமும் இலங்கையில் பாடப்பட்டுவந்த "God save the king/Queen" எனும் ''கடவுள் அரசனைஃஅரசியை காப்பானாக'' என்ற பிரித்தானிய தேசிய கீதத்தை இனிமேலும் பாட முடியாது என்ற நிலையில் அது குறித்த அவசரத் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவேண்டிய அவசியம் 1948 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த டீ.எஸ். சேனாநாயக்க அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

1934 ஆம் ஆண்டு இலங்கை தேசிய நிகழ்வின்போது ஆனந்த சமரகோன் மற்றும் அவரது இசைக்குழுவினால் பாடப்பட்ட ''நமோ நமோ மாதா'' எனும் பாடல் குறித்து ஜே.ஆர். ஜயவர்த்தனவின் நினைவில் இருந்ததுடன் பொருத்தமான தேசிய கீதம் குறித்த அவரது முன்மொழிவு அன்றைய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஈ.ஏ.பீ விஜேரத்னவின் தலைமையில் அமைச்சரவையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஜே.ஆர்.ஜயவர்தன இந்தக் குழுவில் அங்கம் வகித்ததுடன் ஜீ.ஜீ. பொன்னம்பலம் மற்றும் சீ. திதம்பரம் ஆகியோரும் இந்தக் குழுவில் அங்கம் வகித்திருந்தனர்.

குறித்த குழு ஆனந்த சமரக்கோன் முன்னிலையில் கூட்டப்பட்டது. குறித்த கீதம் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்டிருந்ததாலும் நாடு தற்போது பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகியிருப்பதாலும் கீதத்தின் ''நவஜீவன தெமினே'' என்று வருகின்ற 10 ஆவது அடியை மாற்றியமைப்பது பொருத்தமாக அமையும் என்பதாக ஆனந்த சமரகோன் குறித்துத் தெரிவித்தார். அடிகளை மாற்றியமைப்பதற்காக விரும்பிய ஆனந்த சமரகோன் ''நவ ஜீவன தெமினே நிதின அப புபுது கரன் மாதா'' என்பதாக அதனை மாற்றியமைத்தார். கீதத்தின் தமிழ் பிரதியொன்றும் இருக்க வேண்டும் என்பதாக குழு தீரமானித்ததுடன் தமிழ் பிரதியை உருவாக்குவதற்காக தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி என்பவர் தெரிவுசெய்யப்பட்டார்.

1952 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி சிங்களம் தமிழ் ஆங்கில பத்திரிகைகளில் தேசிய கீதத்தின் சிங்கள தமிழ் பிரதிகள் அறிவித்தல் ஒன்றாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அதன் பின்னர் வடக்கு கிழக்கு பகுதிகளில் நடைபெற்ற அரச நிகழ்வுகளில் தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட்டு வந்தது. ரேடியோ சிலோன் நிறுவனம் சிங்களம் தமிழ் ஆகிய மொழிகளிலான தேசிய கீதம் இரண்டையும் இசைத்தட்டுகளாக வடிவமைத்தது. இங்கு தமிழ் தேசிய கீதத்திற்காக ஆனந்த சமரகோன் இசையமைத்த போதிலும் சங்கரி மற்றும் வீனா ஆகிய தமிழ் பாடகர்கள் தமிழ்த் தேசிய கீதத்தை பாடுவதற்காக தெரிவுசெய்யப்பட்டனர்.



1960 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்தின் போது தேசிய கீதத்தின் ஆரம்ப வரிகளின் அமைவில் பொருத்தமின்மை இருப்பதாக (அசுபமான வித்தத்தில் ஆரம்பம் அமைந்திருப்பதாக) குறிப்பிட்டு ஆனந்த சமரகோனின் எதிர்ப்புக்கு மத்தியில் ''நமோ நமோ மாதா'' என்பதற்கு பதிலாக ''சிறீலங்கா மாதா'' என்பதாக மாற்றியமையக்கப்பட்டது. ஆனந்த சமரகோன் தற்கொலை செய்து கொண்டதும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட பிணக்குகளின் காரணமாகவாகும். பிரபாகரன் வடக்கில் தேசிய கீதத்துக்குத் தடைவிதிக்கும் காலம் வரையில் வடக்கு கிழக்கு மக்கள் தமிழ் மொழியிலேயே தேசிய கீதத்தினை இசைத்து வந்தனர்.

தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவது பொருத்தமானதா என்ற பிரச்சினையானது யுத்த வெற்றியின் பின்னர் முதன் முதலாக 2010 ஆம் ஆண்டில் தோன்றியது. தேசிய கீதமானது சிங்கள மொழியில் மாத்திரமே பாடப்பட வேண்டும் என்பதாகவே மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணமாக இருந்தது. நல்லாட்சி அரசாங்கம் குறித்த தடையினை நீக்கிய போதிலும் இறுதியாக கோத்தாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததைத் தொடர்ந்து குறித்த தடையானது மீண்டும் புத்துயிர் பெறுகின்றது.

1956 ஆண்டு சிங்கள மொழிச் சட்டம் என்பது தற்போது அமுலில் இல்லை என்பதை தற்போதைய அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 18 ஆம் 19 ஆம் அத்தியாயங்களின் மூலமாக சிங்கள மொழிக்கு மாத்திரமன்றி தமிழ் மொழிக்கும் தேசிய மொழி என்ற நிலை வழங்கப்பட்டிருக்கின்றது. சட்ட உருவாக்கம் மாத்திரமன்றி அரசின் அனைத்து கருமங்களுக்கும் இந்தக் கொள்கை ஏற்புடையதாகவும் இருந்து வருகின்றது.

தமிழ் மொழி மூலமாக தேசிய கீதம் இசைக்கப்படுவதனால் சிங்களத்துக்கோ அல்லது பௌத்தத்திற்கோ எந்த விதமான பாதிப்புக்களும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. சிறுபான்மையினர் நடத்தப்படுகின்ற விதத்தின் ஊடாக பெரும்பான்மையினது தன்மையினை மட்டிடலாம் என்ற மகாத்மா காந்தியின் கூற்றுக்கு அமைய இவ்வாறான நடவடிக்கைகள் சிங்கள இனத்தின் மதிப்பினை பாதிப்பதாக அமையக் கூடும்.

### விவசாய மீள்கட்டமைப்பு

வன விலங்குகள் ஊடாக கிராமிய விவசாயத்துக்கு பாரிய அளவிலான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. தற்போது வனவிலங்குகளினால் ஏற்படுகின்ற பாதிப்புக்களை விவசாயிகளால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. குரங்குகள், முள்ளம்பன்றிகள், மயில்கள், மரஅணில்கள் போன்ற விலங்குகள் பல்கிப் பெருகுவதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது அவை பெருகுவதற்கு இடமளிக்கப்படுமாயின் இன்னும் ஐந்து வருடங்கள் கழியும்போது மிகச் சிக்கலான பிரச்சினை ஒன்றாக இது மாறிவிடலாம்.

இலங்கையின் தீர்வுகாணப்பட வேண்டிய பிரச்சினைகள் அனைத்துமே உரிய நேரங்களில் மாற்றுநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் பிரச்சினைகள் வளர்ந்து பிரமாண்டமானவையாக மாறியிருக்கின்றன என்பதாகக் குறிப்பிட வேண்டும்.

இலங்கை தற்போது இருக்கின்ற பொருளாதார நெருக்கடி நிலையினை சீர்செய்ய வேண்டுமெனில் கிராமிய விவசாயத் துறையில் புத்துணர்வு ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்று அமைக்கப்பட்டால் மாத்திரமே அந்த நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியும்.

குறித்த துறையின் ஊடாக மீள்எழுவதற்கான சந்தர்ப்பமாகக் கருதி இளைஞர்களின் கவனம் திரும்புகின்ற அடிப்படையில் கவர்ச்சிகரமான வருமானங்களை ஈட்டிக்கொள்ளும் அடிப்படையிலான நவீன விவசாய முறையாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இந்த நிலையை அடைவதற்காக வன விலங்குகள் கட்டுப்படுத்தப்படுவது இன்றியமையாத ஒன்றாக கருதலாம்.

வன விலங்கு பிரச்சினைகனைகளில் மதச் சிந்தனை சார்ந்துள்ளமையால் எந்த அரசாங்கமுமே அதற்கு தீர்வு காண்பதில் பின்வாங்குகின்றன. ஆட்சி முறைகளில் தேவைக்கு அதிகமாக மத விடயங்களைச் சேர்த்துக் கொள்ளும்போது சிறந்ததொரு ஆட்சிக்கான வாய்ப்புக்கள் இல்லாமலாவதுடன் ஆட்சியாளர் நகைப்புக்கு உட்படுத்தப்படும் நிலையும் ஏற்படலாம். இலங்கையை பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நாடாக மாற்றியமைக்க முடியாமல் இருப்பதற்கும், ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட அடிப்படையில் கிராமிய விவசாயத்தினை மாற்றியமைப்பதற்கும் முடியாமல் இருப்பதற்கும் மத நம்பிக்கைகள் சார்ந்த பிற்போக்கு கொள்கைகளே காரணமாகின்றன.

### நெற்செய்கை

நெல் உற்பத்தி தொடர்பில் நாட்டில் நிலவுகின்ற தவறான நம்பிக்கைகள் விவசாயத் துறையிலும் கிராமப் பகுதிகளில் காணப்படுகின்ற வறுமை நிலையிலும் செல்வாக்குச் செலுத்துவதாக காணப்படுகின்றது. இலங்கையில் மேற்கொள்ள முடியுமான அனைத்து பயிர்ச்செய்கைகளிலும் ஆகக் குறைந்த வருமானத்தைப் பெற்றுத் தருகின்ற பயிர்ச்செய்கையாக நெற்பயிர்ச்செய்கையினைக் குறிப்பிடலாம்.

நெற்பயிர்ச் செய்கைக்கும் அதற்கான நீர்த்தேவை குறித்தும் பராக்ரமபாகு காலத்தில் சிந்தித்தது போன்றே இலங்கை இன்றும் சிந்தித்துக்கொண்டிருக்கின்றது. பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிக்கு அதிர்ஷ்டம் இருக்குமாயின் வயல் நிலமொன்றின் ஊடாக ஒரு போகத்தில் ஒரு ஏக்கருக்காக ரூபா 40,000 இலாபமாக பெற்றுக்கொள்ளலாம் என்பதாக விவசாயத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆண்டொன்றிற்கு மூன்று போகங்கள் பயிரிடமுடியுமாயின் விவசாயியினால் 120,000 ரூபா ஆண்டு வருமானமாக ஈட்டிக்கொள்ள முடியும். அந்த அடிப்படையில் மாதமொன்றிற்கான வருமானம் ரூபா 10,000 கிடைக்கப்பெறும். எனினும் ஒரு ஏக்கர் நிலத்தில் மிளகாய் பயிரிடப்படுமிடத்து ஒரு போகத்தில் மூன்று இலட்சம் ரூபா இலாபத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காஸிம் சுலைமானியின் படுகொலையும் கொந்தளிக்கும் மத்திய கிழக்கும்

• கலாநிதி றவூப் ஸெய்ன்

ஈரானின் புரட்சிப் படையின் வெளிநாட்டுப் பிரிவான குத்ஸ் படைப் பிரிவுக்கு தலைமை தாங்கி வந்த காஸிம் சுலைமானி (62) அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்டமை மத்திய கிழக்கில் ஓர் அரசியல் கொந்தளிப்பை உருவாக்கி வருகிறது. மத்திய கிழக்கிலுள்ள அரசியல் முகாம்களுக்குள் இப்படுகொலை ஏற்படுத்தவுள்ள எதிர்மறைத் தாக்கங்கள் குறித்து முற்கூட்டியே எச்சரிக்கைகள் வெளியாகியுள்ளன. கடந்த 04 ஆம் திகதி சுலைமானின் ஜனாஸா நல்லடக்கத்தில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பக்தாதிலுள்ள பசுமை சதுக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போதே சுலைமானி கொல்லப்பட்டார். மத்திய கிழக்கில் ஈரானின் இராணுவ விரிவாக்கத்திற்குப் பொறுப்பாக இருந்தவர் என்ற வகையில் ஈரானுக்கு இது மிகப் பெரிய இழப்பாகும். அவரோடு சேர்த்து ஈராக்கிய படைத் தளபதி முஹன்திஸ் மற்றும் வேறு சிலரும் கொல்லப்பட்டுள்ளனர்.

லெபனான், சிரியா, யெமன் போன்ற நாடுகளில் ஈரானின் சார்பாகப் போராடி வரும் ஆயுதக் குழுக்களுக்கு சுலைமானியே பொறுப்பாக இருந்தார் என்ற வகையில் சவூதி அறேபியா மற்றும் அறபு அமீரகம் என்பன சுலைமானியின் கொலை குறித்து உள்ளூர திருப்தியடைந்துள்ளதாக அறபு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வொஷிங்டன் நேரடியாகவே இத்தாக்குதலில் ஈடுபட்டமை ஈராக்கின் இறைமை குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது. இறைமையுள்ள ஒரு நாட்டின் அனுமதியைக் கோராமல் தான்தோன்றித்தனமாக ஈராக் மண்ணில் அமெரிக்க விமானப் படை நடத்திய தாக்குதல் சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயல் மட்டுமன்றி, ஈராக்கின் பாராளுமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் என ஈராக்கியர்கள் கூறி வருகின்றனர்.

சுலைமானி ஈரானுக்கு வெளியே பரந்தளவில் பிரபல்யமானவர் அல்ல. எனினும், ஈரானின் இராணுவ விஸ்தரிப்பு வாதத்திற்கு துணைபோனவர் என ரியாத் குற்றம் சாட்டியுள்ளது. இத்தாக்குதலினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் நன்மை அடைந்த நாடு இஸ்ரேல் தான் என்பதில் சந்தேகமில்லை.

லெபனானைத் தளமாகக் கொண்ட ஹிஸ்புல்லாஹ் இயக்கத்தின் தலைவர் ஹஸன் நஸ்ருல்லாஹ் தாக்குதல் குறித்து வொஷிங்டனையும் டெல்அவிவையும் கடுமையாகச் சாடியுள்ளார். மத்திய கிழக்கிலுள்ள அமெரிக்க இராணுவத்தினர் பிரேதப் பொதியாக அனுப்பி வைக்கப்படுவர் என்று நஸ்ருல்லாஹ் சூளுரைத்துள்ளார்.



உடனடியாக இஸ்ரேல் விரைந்த அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ இஸ்ரேலில் தங்கியுள்ள அமெரிக்கப் பிரஜைகள் நாட்டை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் எந்த வேளையிலும் ஈரான் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல்களை ஆரம்பிக்கலாம் எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது உண்மையில் நடக்கப் போகும் காரியமா. அல்லது பொம்பியோவின் பூச்சாண்டியா என்பதைப் பொறுத்தே பார்க்க வேண்டும்.


தாக்குதலின் மிக முக்கிய எதிர்வினை என்னவெனில், அணுசெறிவாக்கத் திட்ட உடன்படிக்கையிலிருந்து முழுமையாகவே வெளியேறிவிட்டது என அறிவித்துள்ளது. இது மத்திய கிழக்கின் இராணுவச் சமனிலையில் எவ்வாறான மாற்றத்தைக் கொண்டு வரப் போகின்றது என்பதை இஸ்ரேலிய மற்றும் சவூதி அறேபிய அதிகாரிகள் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

சுலைமானியின் படுகொலை ஈராக்கிலும் ஒரு முக்கிய எதிர்வினையை ஆற்றியுள்ளது. ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினர் அனைவரும் அங்கிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் எனக் கோரும் தீர்மானமொன்றை ஈராக்கிய பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது. அமோக ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ள இத்தீர்மானம் குறித்து பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன், தான் கவலை கொள்வதாக அறிவித்துள்ளமை ஈராக்கியர்களை அவமானப்படுத்தும் செயலாகும் என முன்னாள் பிரதமர் நூரி மாலிகி தெரிவித்துள்ளார். 2003 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 18 ஆண்டுகளாக ஈராக்கின் இறைமையை எள்ளிநகையாடும் வகையிலேயே வொஷிங்டன் மத்திய கிழக்கில் தனது ஆட்டத்தைத் தொடர்கிறது என அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

ஹஸன் ரூஹானி ஈரான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் ஈரான்-ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையிலான இராணுவ மற்றும் ராஜதந்திர உறவுகள் வலுவடைந்துள்ளன. அமெரிக்க ஆதிக்கமும் செல்வாக்கும் ஈராக்கில் படிப்படியாகக் குறைந்து வருவதையே அந்நாட்டுப் பாராளுமன்றத்தின் துணிகரமான தீர்மானம் எடுத்துக் காட்டுகின்றது.

அதற்குப் பதிலளித்துள்ள ட்ரம்ப், ஈராக்கை இராணுவ ரீதியாக மிரட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மத்திய கிழக்கு இஸ்ரேல் தலைமையிலும் ஈரான் தலைமையிலும் துருவமயமாகியுள்ள நிலையில், ஈரானின் முக்கிய படைத் தலைவரான காஸிம் சுலைமானி கொல்லப்பட்டுள்ளமை இம்முகாம்களுக்கிடையிலான மோதலை மென்மேலும் கூர்மைப்படுத்தலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இஸ்ரேல் தலைமையில் இயங்கும் சவூதி அமீரகம் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகள் ஒரு புறமாகவும், ஈரான் செல்வாக்கின் கீழ் ஈராக், லெபனான், கட்டார் ஆகிய நாடுகள் இன்னொரு முகாம் ஆகவும் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில், ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இம்முறுகல் நிலை மத்திய கிழக்கு முகாம்களுக்கு இடையிலான மோதலை கூர்மைப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் துருப்பினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று ஈராக்கிய பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானம் அமெரிக்க இராஜதந்திரத்திற்கு பேரிழப்பாகும் என்று அவதானிகள் நம்புகின்றனர். ஈரான், காஸிம் சுலைமானியின் படுகொலைக்குப் பழிதீர்க்குமாயின், அடையாளம் காணப்பட்ட 52 இற்கு மேற்பட்ட கேந்திர நிலையங்கள் மீது தமது இராணுவம் தாக்குதல் நடத்தும் என்று ட்ரம்ப் அச்சுறுத்தி வருகின்றார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு சவால்களை நாம் எதிர்கொண்ட போதும், அமெரிக்கப் படை வெளியேறுவது முக்கியமான ஒன்று என ஈராக்கிய பிரதமர் ஆதில் அப்துல் மஹ்தி தெரிவித்துள்ளார். முகாம்களில் சம்பந்தப்படாத குவைத், ஜோர்தான், ஓமான் ஆகிய நாடுகள் ட்ரம்பின் சுயநலத்திற்காக மத்திய கிழக்கு நெருக்கடிக்குள் தள்ளப்படுகின்றது என கவலை வெளியிட்டுள்ளது.

# இந்திய முஸ்லிம்களின் நிலை குறித்து ஆராய இஸ்லாமிய ஒத்துழைப்பு அமையம் முன்வருமா?

இந்திய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ள காஷ்மீர் மற்றும் புதிய குடியுரிமைச் சட்டத்தின் மூலம் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ள அஸ்ஸாம் மாநிலம் குறித்து கலந்துரையாடுவதற்கும் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு மாநாட்டை அவசரமாகக் கூட்டுமாறு ரியாத் அதன் செயலாளருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இஸ்லாமாபாத்தின் அரசியல் அழுத்தத்தின் விளைவாகவே ரியாத் இத்தீர்மானத்திற்கு வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும், இது துணிகரமான எந்தத் தீர்மானத்திற்கோ இந்தியா மீதான அழுத்தத்திற்கோ இட்டுச் செல்லாது என மத்திய கிழக்கு அரசியல் அவதானிகள் நம்புகின்றனர். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. கடந்த வாரம் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் 92 வயதான பிரதமர் மஹாதிர் முஹம்மத் தலைமையில் உச்சமாநாடொன்று நடைபெற்றது. துருக்கிய பிரதமர் அர்துகான், கட்டார் அமீர், ஈரான் ஜனாதிபதி உள்ளிட்ட பல இஸ்லாமிய நாட்டுத் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

முஸ்லிம் உலகம் எதிர்கொள்ளும் சவால்களைக் கையாள்வதற்கான புதிய தந்திரோபாயங்கள் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இம்மாநாட்டை சவூதி அறேபியா பகிஷ்கரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

துருக்கிய மற்றும் ஈரானிய தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றார்கள் என்பதினோலேயே ரியாத் இதனைப் பகிஷ்கரித்தது. அத்தகைய தலைவர்களை முகங்கொடுக்க முடியாத நிலைக்கு சவூதி ஆட்சியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புக்குப் புறம்பாக அல்லது அதனைப் புறக்கணித்து இவ்வாறான மாநாடு நடத்தப்பட்டதாகவும் அதனாலேயே ரியாத் அதனைப் பகிஷ்கரித்ததாகவும் நியாயம் முன்வைக்கப்பட்டது.



இஸ்லாமிய ஒத்துழைப்பு மாநாட்டை நடத்துவதற்கு வேண்டுகோள் விடுத்துள்ள ரியாத் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இது தனது ராஜதந்திர மூலோபாயத்திற்குக் கிடைத்த வெற்றி என்று தெரிவித்துள்ளார். ஆனால், ரியாத் கோரும் மாநாடு எந்த செயல் விளைவையும் தரப் போவதில்லை என்று இப்போதே எதிர்வுகூறப்படுகின்றது. அதற்கான இரண்டாவது காரணம், சவூதி அறெபியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருக்கிய தொடர்பாகும். மோடி சவூதிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையில் இராணுவ மற்றும் பொருளாதார ஒப்பந்தங்கள் பலதில் ஈடுபட்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான அதியுச்ச மூலோபாய சபையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் முதலீடு செய்வதற்கு சவூதி அறேபியா இணக்கம் தெரிவித்துள்ளதோடு, இந்தியாவிலிருந்து ஆயுதங்கள் கொள்வனவு செய்வதற்கும் ரியாத் இணக்கம் தெரிவித்துள்ளது. இது குறித்த ஒப்பந்தம் [illegible]னுக்கு நரேந்திர மோடிக்கும் 2019 ஒக்டோபரில் நடைபெற்றது.

சவூதி அறேபியாவோடு அரசாங்க ரீதியில் இப்படிப்பட்ட ஒரு பங்காளர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும் நான்காவது நாடு இந்தியாவாகும். ஜேர்மன், ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளோடு சவூதி அறேபியா இவ்வாறான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. சவூதியுடன் நெருங்கி செயற்படும் இந்தியா இஸ்ரேல் மற்றும் வொஷிங்டனுடன் மிக வலுவான தொடர்புகளை வைத்துள்ளது.

இந்நிலையில் இந்துத்துவ இந்தியாவை உருவாக்கும் மோடியின் திட்டத்தை ரியாதினால் தடுத்து நிறுத்த முடியாது. மதச்சார்பற்ற அரசியல் யாப்பை மீறி தூய இந்துக்களுக்கான மத சாம்ராஜ்யம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் அரசியல் அமைப்பில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ள மோடிக்கு எதிராக ரியாத் எதுவும் செய்யப் போதில்லை.

இந்தியக் குடியுரிமைச் சட்டத்தை மோடி பின்வாங்குவதற்கு ஏதேனும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் ஆற்றவல்சவூதி அறேபியாவுக்கு இருக்குமா [illegible] ரிஷாரா.


இந்நிலையில் இஸ்லாமிய ஒத்துழைப்பு மாநாட்டைக் கூட்டுங்கள் என்று கோஷமிடும் ரியாதினால் எதனையும் சாதிக்க முடியாது. காஷ்மீருக்கான சிறப்புரிமைகளை ரத்துச் செய்து, ஜம்மு காஷ்மீர் பிராந்தியங்களை வெறும் யூனியன்களாகப் பிரகனம் செய்துள்ள மோடி, சுமார் இரண்டு மில்லியன் முஸ்லிம்களின் குடியுரிமையைப் பறிக்கும் சட்டமொன்றை கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார். மலேசியத் தலைவர் மஹாதிர் மற்றும் துருக்கிய தலைவர் ரஜப் தலைவர் அர்தூகான் ஆகியோர் மோடியின் இந்த அரசியல் சித்து விளையாட்டை வன்மையாகக் கண்டித்துள்ளதோடு, அது சர்வதேச சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயல் எனவும் சாடியுள்ளனர்.

இந்திய முஸ்லிம்களின் இப்பரிதாப நிலை குறித்து 56 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ள OIC மிகத் துணிகரமான முடிவுகளை எடுக்க முடியும். இந்தியாவுக்கு எதிரான பொருளதாரத் தடையை விதித்து சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் பின்வாங்கச் செய்ய முடியும். அதற்குப் பெற்றோலியத்தை ஒரு பெரும் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்த முடியும்.

அறபு முஸ்லிம் நாடுகளில் பணியாற்றும் மில்லியன் கணக்கான இந்தியர்கள் குறித்து எச்சரிக்கை விடுப்பதன் மூலம் மோடியைப் பணியவைக்க முடியும். ஆனால், நண்பனின் நண்பனாக உள்ள (இஸ்ரேலின் நண்பனான) இந்தியாவை சவூதி பகைத்துக் கொள்ளப் போவதில்லை. இஸ்லாமிய உலகின் தலைவர்கள் என்றும் இரு ஹரம்களின் காவலர்கள் என்றும் தம்பட்டமடிக்கும் ரியாத் மன்னர்கள் வேண்டுமானால் ஒரு கண்டன அறிக்கை வெளியிடலாம். அதையே காலா காலகமாகச் செய்து வருகிறார்கள். அது இந்திய முஸ்லிம்களின் பிரச்சினைக்குத் தீர்வாகுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹஜ்ஜுக்கான செலவை 6 லட்சத்தை விட குறைக்க முடியாது



## அல்ஹாஜ் அஸ்செய்யத் அஹமத் நகீப் மௌலானா
ஹஜ் குழு உறுப்பினர்

அல்ஹாஜ் அஸ்ஸெய்யத் அஹமத் நகீப் மௌலானா அவர்கள் கொழும்பு மாவட்டத்திலுள்ள தெஹிவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை கொ/சாஹிரா கல்லூரியிலும் இரண்டாம் நிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை கொ/அலெக்சாண்டர் கல்லூரியிலும் கற்றுள்ளார். இஸ்லாமியக் கற்கைத்துறை மற்றும் பௌதீகவியல் துறையில் உயர்கல்வியை மேற்கொண்டுள்ள அல்ஹாஜ் அஹமத் நகீப் மௌலானா அவர்கள் தந்தையாரின் அரசியல் பாசறையில் கற்று இது வரை காலமும் இலைமறைகாயாக சமூகத்திற்கு பல்வேறு சேவைகளை ஆற்றி வந்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் நியமிக்கப்பட்ட 2020ஆம் ஆண்டிற்கான ஹஜ் குழுவில் மூத்த உறுப்பினர் ஒருவராகச் செயற்பட்டு வரும் இவர், முஸ்லிம் சமூக, அரசியல் சார்ந்த பல்வேறு விவகாரங்கள் தொடர்பில் அரைநூற்றாண்டு கால அனுபவங்களைக் கொண்டுள்ளார். ஹஜ் விவகாரம் உள்ளிட்ட முஸ்லிம் சமூக அரசியல் தொடர்பில் மீள்பார்வை பத்திரிகைக்கு அவர் வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

- **பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களால் நியமிக்கப்பட்ட 2020ஆம் ஆண்டிற்கான ஹஜ் குழுவின் முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுங்கள்.**

இலங்கை ஹஜ் யாத்ரீகளுக்கான நியாயமான ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு சவூதி அரேபிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்துதல் மற்றும் ஒவ்வொரு யாத்ரீகருக்கும் முழு சேவையும் வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்காக தொடர்புடைய அனைத்து அதிகாரிகளுடனும் தொடர்புகொள்ளல், குறிப்பாக சரியான நேரத்தில் போக்குவரத்து வசதிகளையும் மினா, அரபா தங்குமிடங்கள் மற்றும் மருத்துவ வசதிகளை செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற விடயங்களை முக்கிய அம்சங்களாகக் கொண்டு ஹஜ் குழு செயற்பட்டு வருகிறது.

ஹஜ்ஜுடைய விடயங்கள் சவூதி அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் சிறந்த முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே பிரதமரின் எதிர்பார்ப்பாக உள்ளது. இது விடயம் தொடர்பில் பிரதமர் அவர்களுக்கு சரியான முறையில் ஆலோசனை வழங்கும் பொறுப்பு ஹஜ் குழுவைச் சார்கிறது.

- **சவூதி அரசாங்கம் இம்முறை இலங்கைக்கு எத்தனை ஹஜ் கோட்டாக்களைத் தருவதாக வாக்குறுதியளித்திருக்கிறது?**

சவூதி அரேபிய அரசாங்கம் இதுவரை இலங்கைக்கு 2850 ஹஜ் கோட்டாக்களையே வழங்கி வந்தது. இம்முறை சுமார் 5000 ஹஜ் கோட்டாக்கள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இதில் 3500 கோட்டாக்களை சவூதி அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வழங்கும். அதனைத் தொடர்ந்து எமது அரசாங்கம் மேன்முறையீட்டை (Appeal) வழங்கியதும் 1500 கோட்டாக்களை வழங்கும் என நினைக்கிறேன்.

- **சவூதி அரேபிய அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படுகின்ற ஹஜ் கோட்டாக்கள் பகிர்ந்தளிக்கப்படும் முறை பற்றிக் குறிப்பிட முடியுமா?**

முஸ்லிம் சமய விவகார அமைச்சு பிரதமரின் கீழ் உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைய சமய விவகார அமைச்சிடமிருந்து கோட்டாக்கள் பெறப்பட்டு பதிவுசெய்யப்பட்டுள்ள முகவர் நிறுவனங்களுக்கு வழங்கப்படும். இலங்கையில் 93 முகவர் நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அம்முகவர் நிறுவனங்களில் எத்தனை யாத்ரிகர்கள் பதிவு செய்கின்றார்களோ அவ்வெண்ணிக்கைக்கு அமைய கோட்டாக்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். உதாரணமாக ஒரு குழுவில் 75 பேர் பதிவுசெய்துள்ளார்கள் எனில், 75 வீசாக்கள் வழங்கப்பட வேண்டும்.

- **இம்முறை ஹஜ் விடயத்தை எவ்வாறு செய்து கொள்வது என்கின்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டதா?**

தற்போது நியமிக்கப்பட்டுள்ள ஹஜ் கமிட்டி பிரதமரிடம் அனுமதி பெற்றதன் பின்னர் ஹஜ் இயக்குநர்களையும் முகவர்களையும் அழைத்துச் சென்று பிரதமரைச் சந்திக்கும் தீர்மானத்தில் உள்ளது. பெரும்பாலும் இச்சந்திப்பு எதிர்வரும் வாரங்களில் இடம்பெறலாம். அப்போது ஹஜ் இயக்குநர்களும் முகவர்களும் ஹஜ் விடயத்தை மேற்கொள்வதில் உள்ள பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவார்கள். அப்போது ஹஜ் விடயத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளைப் பிரதமர் ஓரளவுக்கு விளங்கிக் கொள்வார். அதன் பிறகே இம்முறை ஹஜ் விடயங்களை எப்படி செய்துகொள்வதென்கின்ற முடிவுகள் எட்டப்படும்.

- **ஹஜ்ஜுக்கான கட்டணம் கூடிக் குறைவதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்த முடியுமா?**

ஹஜ்ஜுடைய விடயம் நிறைவாகவும் குறைந்த கட்டணத்திலும் செய்துகொடுக்கப்பட வேண்டும் என்பதே பிரதமரின் கருத்தாக உள்ளது. ஆனால் ஹஜ்ஜுக்கான கட்டணத்தை அதிகளவில் குறைப்பதென்பதும் கடினம்தான். ஏனெனில், அங்கு முஅல்லிம் கட்டணம், டிக்கட் கட்டணம், ஹஜ் வரிக் கட்டணம் என்றெல்லாம் உள்ளன. இம்மூன்று கட்டணங்களுமே கிட்டத்தட்ட 4 லட்சம் ரூபா வருகிறது. இதுதவிர ஒரு மாத காலத்திற்கான உணவு, தங்குமிட வசதிகள், ஹோட்டல் கட்டணங்கள் எல்லாம் செலுத்தப்பட வேண்டும். இவையனைத்துக் கட்டணங்களையும் கூட்டிப் பார்க்கின்ற போது 6 லட்சத்தை விட குறைவாக ஹஜ்ஜுக்கான செலவை குறைத்துவிட முடியாது என்றே நினைக்கிறேன்.

இதுவல்லாமல் வசதிபடைத்தவர்கள் மக்கா, மதீனா நகரங்களில் சிறந்த ஹோட்டல்களைப் பதிவுசெய்து ஹஜ் கடமையைச் செய்வார்கள் என்றால் கட்டணம் இன்னும் அதிகமாகும். எனவே ஹஜ் கடமையை எப்படிச் செய்யத் திட்டமிடுகிறோமோ அதற்கமைய கட்டணங்களும் கூடிக் குறையும். குறைவான கட்டணத்தில் ஹஜ் கடமையை மேற்கொள்வதாயின் மக்கா பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்திலிருந்து ஒன்றரை கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள ஹோட்டல்கள் மற்றும் தங்குமிடங்களை நாட வேண்டும். மக்கா பள்ளிவாசலுக்கு அருகாமையில் ஹோட்டல்களைப் பதிவதாக இருந்தால் கட்டணங்கள் இன்னும் அதிகமாகும். ஹஜ் செய்பவர்கள் தான் இவற்றைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அவர்களுடைய முடிவுகளுக்கமையவே கட்டணங்களும் அமையும்.

- **அரசாங்கம் இம்முறை ஹஜ் கட்டணங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் கட்டணத்தைக் குறைத்தால் ஹாஜிகளுக்கு ஓரளவு நிவாரணத்தை வழங்க முடியும் என்பது பிரதமரின் எதிர்பார்ப்பு. சாதாரணமாக மக்கா பயணிப்பதற்கு ஒன்றரை லட்சம் போல் செலவாகும். ஹஜ் காலத்தில் அக்கட்டணம் இன்னும் 70 வீதத்தால் அதிகரிக்கும். எனவே அரசாங்கம் இக்கட்டணத்தைக் குறைப்பதாயின் சிறியதொரு தொகையை மாத்திரமே குறைக்க முடியும்.

ஒருவர் மக்காவிலுள்ள ஹில்டன், தல்லா அஜ்யாத் போன்ற சொகுசு ஹோட்டல்களில் தங்கி நின்று ஹஜ் கடமைகளை மேற்கொள்ள விரும்பினால் அவருக்கு அதிக பணத்தொகை செலவாகும். மற்றுமொருவரிடம் அதற்கான வசதிகள் இல்லாவிட்டால் அவரது வசதிக்கேற்ற தங்குமிடங்களுக்கான கட்டணங்களே அறிவிடப்படும். யாத்ரிகர்களின் தேவைகளுக்கேற்ப விடயங்களை செய்துகொடுக்கவே முகவர்கள் உள்ளனரே ஒழிய முகவர்கள் சொல்வது போன்று ஹஜ் செய்ய வேண்டுமென்பது அவசியமில்லை. இங்கு ஒழுங்கான முறையில் ஹோட்டல் அறைகளை பதிவு செய்துகொள்ளாமல் அங்கு சென்று சரியாக ஒன்றும் தரப்படவில்லை என்று கூறுவதில் அர்த்தமில்லை.

- **கடந்த காலங்களில் சில முகவர் நிலையங்கள் ஹஜ் யாத்ரிகர்களை சரியான முறையில் கவனிக்கவில்லை என்கின்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இம்முறை இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படுமா?**

திணைக்களம் என்ற வகையில் அதன் பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் இது விடயத்தில் கவனம் செலுத்துவார்கள் என நான் நினைக்கின்றேன். ஹஜ் யாத்ரிகர்களுக்கு அப்படி அநியாயம் செய்யப்படுமாக இருந்தால் முகவர் நிறுவனங்களை கறுப்புப் பட்டியலில் இடுவதற்கான உரிமை அமைச்சுக்கு உள்ளது. ஹாஜிகள் உரிய முறையில் கவனிக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டு மக்காவில் வைத்து முறைப்பாடு செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட முகவர்களை அவர்கள் பிடித்து வைப்பார்கள். அரசாங்கம் என்ற வகையிலும் கோட்டாக்கள் வழங்கப்படுகின்ற முகவர் நிறுவனங்களை கண்காணிக்கும் நடவடிக்கையையும் மேற்கொள்கிறது.

- **2020ஆம் ஆண்டிற்கான ஹஜ் குழுவில் நீங்கள் மூத்த உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கின்றீர்கள். உங்களது அனுபவத்தின் படி இதுவரை காலமும் ஹஜ்ஜுடைய விடயத்தில் இடம்பெற்று வந்துள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்ட முடியுமா?**

சிலர் ஹஜ்ஜுக்காக வேண்டி பணத்தை பெற்றுக் கொண்டு அனுப்பாமல் விட்டதாகவும், ஹஜ்ஜுக்கு அனுப்பிய ஹாஜிகளுக்கு வசதிகள், வழிகாட்டல்கள் செய்துகொடுக்கப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. இவற்றை நாம் முற்றாக நிறுத்திவிட வேண்டும். இதனை திணைக்களத்திற்கு செய்ய முடியும் என்று நான் நினைக்கிறேன். இம்முறை ஹஜ் விவகாரத்தை முறையாகச் செயற்படுத்துவதில் பல்வேறு திட்டங்களையும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- **ஹஜ்ஜுடைய விவகாரத்திற்கு அப்பால் இலங்கை முஸ்லிம் சமூகம் பற்றிய உங்களது அவதானங்களை சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

இற்றைக்கு 25,30 வருடங்களுக்கு முன்னர் பள்ளிவாசல்களில் கந்தூரி கொடுக்கப்பட்டது. மீலாத் தினத்தையொட்டி பெரும்பாலான பள்ளிவாசல்களில் கந்தூரி வழங்கப்பட்டது. ரபீஉல் அவ்வல் மாதம் முழுவதும் வெலிகமையில் 60 இற்கும் மேற்பட்ட கந்தூரி நிகழ்வுகள் நடைபெறும். கந்தூரி வைபவங்களில் சிங்கள மக்களும் பங்குபற்றி அதற்கான உதவிகளை செய்தார்கள். இன்று சிலர் அந்நிகழ்வை ஷிர்க், பித்அத் என்று கூறி நிறுத்திவிட்டார்கள். இதனால் எமக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் நிலையேற்பட்டிருக்கிறது. முன்னர் வெலிகமையில் முஸ்லிம்களும் சிங்களவர்களும் ஒன்றாகத்தான் பொதுவேலைகளைச் செய்து வந்தார்கள். ஆனால் இன்று அத்தகைய நிலைமைகள் இல்லை. மேலும் முஸ்லிம் சமூகத்தில் இன ரீதியான கட்சிகள் உருப்பெற்றதும் எமக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகள் தூரமாவதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

நாம் சிறியவர்களாக இருந்தபோது சுதந்திரக் கட்சியில் Islamic Socialist Front (ISF) இயங்கி வந்தது. ஐதேகவிலும் முஸ்லிம் லீக் செயற்பட்டு வந்தது. இவையிரண்டு அமைப்புக்களும் பிரதான இரு கட்சிகளுக்குள்ளாலேயே உருவாக்கப்பட்டிருந்தன. ஆனால் இன்று முஸ்லிம்களுக்கென்று தனித்துவமான கட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதுவரை காலமும் சிங்கள மக்களுக்கு தனித்துவமான கட்சிகள் இருக்கவில்லை. முஸ்லிம்கள் தனித்துவமான கட்சிகளை உருவாக்கியிருப்பதைப் பார்த்தே அவர்களும் தமக்கென தனித்துவக் கட்சிகளை உருவாக்கினர். முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள கிழக்கு மாகாணம் போன்ற பிரதேசங்களுக்கு தனித்துவக் கட்சிகள் பொருத்தமெனினும் கண்டி, நீர்கொழும்பு, குருநாகல் போன்ற இதர பகுதிகளுக்கு இக்கட்சிகள் பொருத்தமில்லை. ஏனெனில் பெரும்பான்மைச் சமூகத்தோடு ஒட்டி வாழும் முஸ்லிம் மக்கள் இக்கட்சிகளை ஆதரிப்பது அவர்களுக்கே பிரச்சினையாக அமைந்துவிடும். இனவாதக் கட்சிகள் இனவிரிசலுக்கு வலிகோலிவிடும் என்பதே யதார்த்தம்.

1977ஆம் ஆண்டு பலாங்கொடை தொகுதியில் அபூ சாலிஹ் பெரும்பான்மை சிங்கள மக்களது வாக்குகளை பெற்று வெற்றியீட்டவில்லையா? பேருவலை தொகுதியில் ஐ.ஏ காதர் வெற்றிபெறவில்லையா? கொழும்பில் ஏ.எச்.எம். பௌசி வெற்றிபெறவில்லையா? இவர்கள் அனைவரும் சிங்கள மக்களது வாக்குகளையும் பெற்றதனாலேயே வெற்றியீட்டினர். இன்று ஒரு சிங்களவர் முஸ்லிம் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்க முடியாத ஒரு நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் சிங்கள மக்கள் எம்முடன் கோபமில்லை. நாம் தான் அவர்களை...

(பக்.14)




உலகின் எந்தப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டாலும் நிலக்கரி பல மாசுகளைக் கொண்ட நிலையிலேயே காணப்படும். மின்னுற்பத்தி ஆலையிலிருந்து புகையை வெளியேற்றக் கூடிய புகை போக்கிகளில் தங்கியிருக்கும் கந்தகம், பாதரசம், பிற கன உலோகங்கள் அனைத்தும் வெளிவரும் வாயுக்களையும் உலோகங்களையும் தக்க வைக்கும். பின்னர் அவை ஆலையை குளிர்வடையச் செய்யும். சூழல் கட்டமைப்பில் நீர் நிரந்தரமாகத் தங்கி விடும். ஏற்கனவே வெளியிடப்பட்ட கழிவுகளுடன் மேலும் கழிவுகள் சேர்ந்து நிறைந்து விடும். இதற்கான நிரந்தரத் தீர்வு எதுவும் இல்லை.

500 மெகாவாட் தூய்மையான நிலக்கரி மின்னுற்பத்தி நிலையம், மேலே உள்ள உயர் அழுத்தங்களுடனும் வெப்ப நிலையுடனும் இயங்கினாலும் கூட அது சுற்றுப் புறச் சூழலுக்கு ஆண்டு தோறும் மாசுகளைக் கொண்டு வந்து சேர்க்கும். இந்தக் கழிவுகள் சூழலில் என்றும் தங்கியிருக்கும்.

அமெரிக்காவின் சூழல் பாதுகாப்பு நிறுவனத்தின் தகவல்படி சாதாரண மாசுவகைகளாக வருடாந்தம் கந்தகம் 10,000 தொன் அளவிலும், சகதி 193,000 தொன் அளவிலும், சாம்பல் 125,000 தொன் அளவிலும், விஷமுள்ள உலோகங்களான ஈயம் 770 கிலோகிராம், பாதரசம் 410 கிலோகிராம், குரோமியம் 400 கிலோகிராம், நிக்கல் 385 கிலோகிராம் அளவிலும் சூழலிலே சேருகின்றன.

மின்னுற்பத்திக்காக எரிசக்தி மூலங்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை நாட்டில் தற்போது நிலவுகின்ற போதிலும், மக்களுக்குத் தீங்கின்றிய வகையிலேயே உற்பத்திகள் இடம் பெற வேண்டும். புதிப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களான சூரிய சக்தி, காற்று, உயிர்த்திண்மக் கழிவு போன்றவற்றின் பயன்பற்றி நிரூபிக்க முடியுமான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டு வரும் வேளையில் அவற்றைப் பயன்படுத்துவதில் நாங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையில் மின்னுற்பத்தியினால் சூழல் மாசடைவதற்கு எதிராக நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கிறிஸ்தவ சமயத் தலைவர் கருதினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்த தகவல்கள் இவை. நுரைச்சோலை அனல் மின்னுற்பத்தி நிலையத்தினால் சூழலுக்கு ஏற்படும் மாசு தொடர்பில் அவர் தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகிறார். விளைவாக மின்னுற்பத்தியினால் வரும் சூழல் மாசடைதல் தொடர்பில் ஆராய்வதற்கான குழுவில் அவர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரும் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை அரசாங்கம் வழங்கியிருக்கிறது.

சமயத் தலைவர்களுடைய பணி இப்படித் தான் அமைய வேண்டும். மனித குலத்தைக் காப்பதற்கு அவர்கள் குரல் கொடுக்க வேண்டும். மனித இனத்திற்கு எதிரான எந்தச் செயற்பாடுகளையும் அவர்கள் எதிர்க்க வேண்டும். இது தான் சமயத் தலைவர்களின் பணியாக இருக்க வேண்டும். மக்கள் அழிவுக்குள்ளாகி வரும் சமயங்களில் சமயங்களை மட்டும் பாதுகாக்க முனைவது சமயத்துக்குப் பொருத்தமில்லாத சமயோசிதமற்ற செயற்பாடாகவே அமையும். அந்த வகையில் கிறிஸ்தவ மதத் தலைவரின் முன்னெடுப்பு வரவேற்கத்தக்கதாகும்.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தினால் வரக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் அதனைச் சூழவுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் இணைந்து வந்து கருதினாலிடம் முன்வைத்த முறைப்பாட்டை அடுத்தே அவர் இதற்கான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றார். மத வழிபாட்டுத் தலம் என்பதற்கும் அப்பால் சமூகப் பிரச்சினைகளில் அக்கறை காட்டும் நிலையங்களாக மதத் தலங்கள் இயங்குவது சிறந்த முன்மாதிரியாகும். மக்கள் தங்களது பிரச்சினைகளை தமது மதஸ்தலத்தில் தமது சமயத் தலைவர்களிடம் முறையிடுகிறார்கள். அவர்கள் அதனை உரிய இடத்துக்கு நகர்த்தி மக்களின் நலனைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கிறார்கள். போற்றத்தக்கதொரு ஒழுங்கு முறையில் சமூகம் முன்னகர்ந்து செல்கிறது.

மக்களின் பிரச்சினைகளில் தலையிடாத மக்கள் நிலையங்கள் காலப்போக்கில் மக்களாலேயே புறக்கணிக்கப்படுகின்றன. மதச் சடங்குகளுக்கு மட்டும் தான் மதஸ்தலங்கள் என்று வருகின்ற போது மக்கள் தமது பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு மதஸ்தலங்களை ஒதுக்கி விட்டே தீர்வை நாடுகிறார்கள். காலப்போக்கில் மக்களது பிரச்சினைகள் அதிகரிக்க அதிகரிக்க மக்கள் மதஸ்தலங்களை விட்டும் தூரமாகிறார்கள்.

மற்றொரு வகையில் சமயத் தலைவர்களிடம் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லை என்று வரும் போது மக்களால் அவர்கள் புறமொதுக்கப்படுகிறார்கள். சமய அனுஷ்டானங்களுக்கென மட்டுமே அவர்களை ஒதுக்கிக் கொள்கிறார்கள். இதனால் மக்கள் மத்தியில் சமயத் தலைவர்களின் செல்வாக்கு ஒழிந்து போகிறது. இந்த இடத்தை வேறு சக்திகள் நிரப்பத் தொடங்கினால் மதங்களுக்கும் மதத் தலைவர்களுக்கும் உரிய இடம் கிடைக்காமல் போகிறது.

இலங்கை மதங்களை முன்னிறுத்தி இயங்கும் நாடு. இங்கு மதங்கள் தத்தமது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கான போட்டித் தன்மை நிலவுகிறது. மக்களிடம் இருந்து தூரமாகி எந்த மதத்தையும் தக்க வைத்துக் கொள்ள முடியாது. அந்த வகையில் மதஸ்தலங்கள் மக்களைத் தம்முடன் இணைத்துக் கொள்ளும் வகையில் மக்களின் விவகாரங்களில் கவனம் செலுத்த வேண்டும். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குகின்ற மையங்களாக மதஸ்தலங்கள் அமைய வேண்டும்.

மக்களின் விவகாரங்களில் பங்கெடுக்கக் கூடிய அறிவு படைத்தவர்களாக மதத் தலைவர்கள் இருக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களால் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைக்க முடியும். சமய அறிவுக்கப்பால் குறித்த சமயத்துக்கான அறிவைப் பெற்றிருப்பதே தற்சமயத்தில் சமயோசிதமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• வை.எல்.எஸ். ஹமீட்

# சிறுபான்மையை வெட்டும் புள்ளி 12.5

மாவட்ட வெட்டுப்புள்ளி வீதத்தை 5 இலிருந்து 12.5 ஆக உயர்த்துவதற்கு விஜேதாச ராஜபக்ஷ பிரேரணை கொண்டு வந்துள்ளார். 5 ஆசனங்களைப் பெற்று 100 ஆசனங்கள் பெறுகின்ற கட்சியை ஆட்டிப் படைத்து அதிக அமைச்சுக்களைப் பெறுவது நிறுத்தப்பட வேண்டும். ஆட்சியைத் தீர்மானிப்பவர்களாக சிறுபான்மைகள் இருப்பதைத் தடுக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி தனது பாராளுமன்ற உரையில் (03/01/2020) தேர்தல் முறைமை கட்டாயம் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலிலும் 70% இருக்கின்ற பெரும்பான்மையினர் சிறுபான்மையின் தயவின்றி தாமே ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய வேண்டும் என்ற பெரும்பான்மையின் இலக்கு 2015 இல் தோல்வியுற்றபோதும் இம்முறைய ஜனாதிபதித் தேர்தலில் ஓரளவு வெற்றிபெற்றிருக்கிறது. பாராளுமன்றத் தேர்தலிலும் இதே இலக்கை அடைவதற்கான திட்டமாகவே இம்முயற்சி அமைகின்றது.

எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சியாளர்களாக வருவது இயல்பானதே! ஜனநாயகத் தத்துவம் அதுவாக இல்லாதபோதிலும் கூட. ஆனால் அந்த ஆட்சியாளரைத் தீர்மானிப்பதில் கூட சிறுபான்மைக்குப் பங்கு தரமாட்டோம் என்பதுதான் இந்த வெட்டுப் புள்ளி உயர்த்தல் திட்டத்தின் பின்னணியாகும்.



### சிறுபான்மைக் கட்சிகள் ஆட்சியைத் தீர்மானிக்கின்றனவா?

இந்நாட்டில் இதுவரை இரு பிரதான தேசியக் கட்சிகள் இருந்து வந்திருக்கின்றன. தற்போது அது மூன்றாகிய போதிலும் யதார்த்தத்தில் இன்னும் அது இரண்டுதான். இந்த இரண்டையும் பெருவாரியாக பெரும்பான்மை மக்களே தெரிவுசெய்கிறார்கள். ஆனாலும் விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் அதிகமான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு அறுதிப் பெரும்பான்மைக்குச் சற்றுக் குறைவு ஏற்படுகின்றது. அந்தக் குறையை நிரப்புகின்ற பணியைத்தான் சிறுபான்மைக் கட்சிகள் செய்கின்றன.

இக்குற்றச்சாட்டை முன்வைக்கின்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டிய விடயம் சிறுபான்மைக் கட்சிகள் சுயமாக ஆட்சியைத் தீர்மானிப்பதில்லை என்பதாகும். உதாரணமாக, சிறுபான்மைக் கட்சிகள் விரும்பினால் ஜே.வி.பி.யை ஆட்சிக்குக் கொண்டு வரமுடியுமா? அவ்வாறு முடியுமென்றால் பெரும்பான்மைச் சமூகம் நிராகரித்த ஒரு கட்சியை சிறுபான்மைக் கட்சிகள் ஆட்சிக்கு கொண்டு வருகிறார்கள். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறலாம்.

மாறாக பெரும்பான்மைச் சமூகம் அண்ணளவாக சமமான முறையில் இரு பிரதான கட்சிகளுக்கும் வாக்களிக்கின்றபோது அவற்றில் ஒன்றிற்குத்தான் சிறுபான்மைக் கட்சிகள் ஆதரவு வழங்கி ஆட்சிபீடமேற்றுகிறார்கள். உதாரணமாக, ஒரு கட்சி 105 ஆசனங்களையும் இன்னுமொரு கட்சி 95 ஆசனங்களையும் பெறும்போது அவற்றில் ஒன்றிற்குத்தான் சிறுபான்மைக் கட்சிகள் ஆதரவு வழங்குகின்றன.

இவை இரண்டும் பெரும்பான்மைச் சமூகத்தின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற கட்சிகள் இல்லையா? பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவைப் பெற்ற ஒரு கட்சிக்கு சிறுபான்மைக் கட்சிகளும் ஆதரவு வழங்குவதன் மூலம் அவ்வாட்சியில் அவர்கள் பங்காளர்களாகக் கூடாதா? இந்த உரிமை கூட சிறுபான்மைகளுக்கு இல்லையென்றால், அரசு என்பது 'மக்களுக்காக மக்களால் தெரிவுசெய்யப்படும் மக்களாட்சி' என்பதற்குப் பதிலாக 'பெரும்பான்மைச் சமூகத்திற்காக, பெரும்பான்மைச் சமூகத்தால் தெரிவுசெய்யப்படும் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆட்சி' என்றா வரைவிலக்கணப்படுத்துவது?

ஒரு நாட்டின் அரசைத் தீர்மானிப்பது என்பதே 'இறைமை' என்ற தத்துவத்தில் இருந்துதான் பிறக்கிறது. இல்லையெனில் பலம் கூடிய நாடு பலம் குறைந்த நாட்டை வரித்துக் கொள்வதில் தடையேது? ஐ.நா. சபையே இறைமைத் தத்துவத்தின் அடிப்படையில்தானே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு முன் பலம் பொருந்திய நாடுகள் பலம் குன்றிய நாடுகளை கையகப்படுத்தவில்லையா?

அந்த இறைமை மக்களுடையது என்பது சரியா? அல்லது பெரும்பான்மைச் சமூகத்தினுடையதா? மக்களுடையது எனில், அங்கு சிறுபான்மையும்தானே இருக்கிறார்கள். அந்த இறைமையுடைய சிறுபான்மைக்கு அரசை தீர்மானிப்பதில் பங்கு இருக்கக் கூடாதா? விஜேதாச ராஜபக்ச போன்ற படித்தவர்களும் ஏன் இவ்வாறு பிழையாகச் சிந்திக்கின்றார்கள்?

இங்கு கவனிக்க வேண்டிய இன்னுமொரு விடயம் ஒரு கட்சி 105 உம் இன்னுமொரு கட்சி 95 உம் பெறும்போது சிறுபான்மைக் கட்சிகள் ஒருபோதும் 95 ஆசனங்களைப் பெற்ற கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவரவில்லை. மாறாக 105 பெற்ற கட்சியையே வரலாற்றில் எப்போதும் ஆட்சிக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

விகிதாசாரப் பொதுத் தேர்தல் முதலாவது நடைபெற்றது 1989 இல்.

- 1989- ஐதேக தனிப்பெரும்பான்மை, தனியாட்சி
- 1994- அதிகூடிய ஆனால் 113 இற்கு குறைந்த ஆசனம் பெற்ற PA ஆட்சி
- 2000- மீண்டும் அதிகூடிய ஆனால் 113 இற்கு குறைவான ஆசனம் பெற்ற PA ஆட்சி
- 2001- அதிகூடிய ஆனால் 113 இலும் குறைவான ஆசனம் பெற்ற ஐதேக ஆட்சி
- 2004- அதிகூடிய ஆனால் 113 இலும் குறைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி
- 2010 ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனிப்பெரும்பான்மை, தனியாட்சி
- 2015- அதிகூடிய ஆனால் 113 குறைந்த ஐதேக ஆட்சி

இங்கு தெளிவாவது, பெரும்பான்மைச் சமூகம் முதலாவதாகத் தெரிவுசெய்த தேசியக் கட்சிதான் எப்போதும் ஆட்சியமைத்திருக்கிறது. சிறுபான்மைக் கட்சிகள் ஒருபோதும் ஆட்சியைத் தெரிவுசெய்யவில்லை. மாறாக, அவ்வாறு பெரும்பான்மைச் சமூகம் முதலாவதாகத் தெரிவுசெய்த கட்சிக்கு ஏற்பட்ட ஆசனக் குறைவை நிவர்த்தி செய்யவே சிறுபான்மைக் கட்சிகள் உதவி செய்திருக்கின்றன. இது குற்றமா?

### பேரம் பேசுதல்

அவ்வாறு சிறுபான்மைக் கட்சிகள் செய்கின்ற உதவிக்குப் பகரமாக தான் சார்ந்த சமூகத்தின் சில நியாயமான குறைபாடுகளை முன்வைத்து தீர்வினை வேண்டுவது குற்றமா? துரதிஷ்டவசமாக மறைந்த தலைவருக்குப் பின் முஸ்லிம் கட்சிகள் சமூகத்திற்காகப் பேரம் பேசவுமில்லை, அவ்வாறு பேசி எதையும் சாதிக்கவுமில்லை. ஆயினும் அவ்வாறு பேரம் பேசுவது தவறா? தேசியக் கட்சிகள் சிறுபான்மைகளை நியாயமாக நடாத்தியிருந்தால், அவர்களது பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்கியிருந்தால் ஏன் பேரம் பேச வேண்டும்?

முஸ்லிம்களுக்காக அரசியல்வானில் ஒரு முஸ்லிம் கட்சி கால்பதிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன், தமது சமூகத்தில் சகலருக்கும் வாக்குரிமை கிடைப்பதற்கு முன் அமரர் தொண்டமான் கட்சி தொடங்கியிருந்தாரே! ஏன்? அவரது சமூகம் நியாயமாக நடாத்தப்பட்டிருந்தால் தொடங்கியிருப்பாரா? வடகிழக்கு பிரச்சினை தொடர்பாக இந்திய அரசுடன் பேசிய போது முஸ்லிம்கள் உள்வாங்கப்பட்டார்களா? ஏன் உள்வாங்கப்படவில்லை? வட்டமேசை மாநாட்டில் முஸ்லிம்கள் ஒரு தனிக்கட்சி இல்லை என்பதால் அவர்களுக்கு இடம் மறுக்கப்படவில்லையா? இந்நாட்டில் சமூக விகிதாசாரத்திற்கேற்ப அரச உத்தியோகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றனவா? மறைந்த தலைவரின் முயற்சியால் சந்திரிக்காவின் ஆட்சியில் இன விகிதாசாரத்திற்கேற்ப தொழில் வழங்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அவரின் மறைவிற்குப் பின் அத்தீர்மானம் காற்றில் பறக்கவிடப்படவில்லையா? ஏன்? இவை தொடர்பாக பேரம்பேசுவது தவறா? ஒரு சமூகம் தனது குறைகளை அரசிடம் பேசி நிவர்த்தி செய்ய முற்படுவது தவறா? அதற்காக அவர்களுக்கு கட்சிகள் இருக்கக் கூடாதா? கட்சிகள் இருக்கும்போதே இத்தனை குறைபாடுகள் என்றால் கட்சிகள் இல்லாதபோது ஆட்சியாளர்களே சிறுபான்மைகளின் குறைபாடுகளை சுயமாக தீர்த்து வைப்பார்களா?

சிறுபான்மைக் கட்சிகள் குறைவான ஆசனங்களை வைத்துக்கொண்டு கூடுதலான அமைச்சுக்களைப் பெறுவது நிறுத்தப்பட வேண்டும் என்கின்றார் விஜேதாச ராஜபக்ஷ. இதன் மூலம் முஸ்லிம் கட்சிகள் சமூகத்திற்காக எந்தப் பேரம் பேசலையும் செய்யவில்லை; அரசும் அமைச்சுப் பதவிகளைத் தவிர முஸ்லிம்களுக்கு வேறு எதையும் செய்யவில்லை என்பதை மறைமுகமாக ஏற்றுக்கொள்கின்றார். மாறாக சமூகத்திற்காகப் பேரம் பேசி எதையாவது அவர்கள் சாதித்திருந்தால் அமைச்சுப் பதவிகளையே பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் அவற்றைப் பொறுத்திருப்பார்களா? அவ்வாறாயின் சிறுபான்மை சமூகங்களது எதிர்கால நிலையென்ன?

இந்நாட்டில் சகல சமூகங்களும் நியாயமாக நடாத்தப்பட வேண்டும் அவர்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என நினைக்கின்ற எவரும் அவர்களது கட்சிகளை இன்னும் எவ்வாறு பலப்படுத்த உதவ முடியும்? அதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்? அவர்களின் குறைபாடுகளைப் பற்றி பேசித் தீர்வு வழங்கப்படுகின்றபோது சகல சமூகங்களும் இந்நாட்டில் சந்தோசமாக வாழும் நிலை உருவாகும். அவ்வாறான சூழ்நிலையில் யாரும் பிழையான வழியில் போக மாட்டார்கள். நாடு ஸ்திரமாக இருக்கும் என்றுதான் சிந்திப்பார்கள். மாறாக, அவர்களது பிரதிநிதித்துவங்களை இல்லாமலாக்கி அவர்களின் குரல்களை நசுக்க முனையமாட்டார்கள்.




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# புதிய வருடத்தில் நல்ல செய்திகளையே எதிர்பார்ப்போம்

புதியதோர் வருடம் பிறந்திருக்கும் இத்தருணத்தில் கடந்த காலப்பகுதியை மீட்டிப்பார்க்கின்றபோது எமக்கு செவிமடுக்கக் கிடைக்கின்ற விடயங்கள் என்ன? உலகம் பூராகவும் இடம்பெற்று வருகின்ற பிரச்சினைகளை எமக்கு அறிந்துகொள்ள முடிகின்றது. கடந்த தினம் பாப்பரசரின் கைகளை ஒரு பெண் பிடித்திழுத்ததற்கு அவர் உடனடியாக கைகளை உதறித் தள்ளி கோபாவேசப்பட்டார். மறுதினம் அவர் இச்சம்பவத்திற்காக வேண்டி மன்னிப்புக் கோருகிறார். இது மிக முக்கியமானதொரு நிகழ்வு.

அவசரமாக கோபப்படுவது மனிதர்களது இயல்பு. இது மனிதனது எண்ணத்தின் வெளிப்பாடு. ஆனால் சிலபோது உடனடி எண்ணம் மனிதர்களுக்கு கோபத்திற்கும் தீய செயற்பாடுகளுக்கும் வழிகோலிவிடும். இதனைவிட அதிகமாகச் சிந்தித்து அடுத்த சிந்தனையின் மூலம் உடனடி சிந்தனையைத் தோற்கடித்து விட வேண்டும். பாப்பரசரின் சம்பவத்தின் மூலம் இப்படிப்பினையை நாம் பெற வேண்டும்.

இன்று உலகம் முழுவதும் மனிதனுக்குள் காணப்படும் உடனடி எண்ணத்தை வெளிப்படுத்தியதன் மூலம் இடம்பெற்ற அழிவுகளையே காண முடிகின்றது. இன்று அவுஸ்திரேலியாவில் காட்டுத் தீயினால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் அழிவுகளை மட்டிட முடியாதுள்ளது. மெல்போனில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த குடும்பம் ஒன்று என்னுடன் தொலைபேசியில் உரையாடிய போது "மெல்போன் நகரத்திற்கு எவ்விதப் பாதிப்புக்களும் இல்லை. ஆனால் 50, 60 கிலோ மீற்றருக்கு அப்பால் தீப்பற்றுகிறது. பலர் உயிரிழந்துள்ளார்கள். விக்டோரியா பிராந்தியமும் தீயினால் கருகிப் போயுள்ளது. பல ஏக்கர் நிலங்கள் அழிந்து போயுள்ளன. சில இடங்களில் மக்கள் கப்பல்களில் ஏறி வேறு இடங்களுக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்" என்றனர்.

மனிதன் சிறுகச் சிறுக சூழலுக்குச் செய்யும் அழிவுகளால் இன்று முழு உலகும் அல்லோலகல்லோலப்படுவதைக் காண முடிகின்றது. இது போன்ற சம்பவம் இன்று வறிய நாடொன்றில் இடம்பெற்றிருக்குமாயின் அவ்விடயம் பெரியளவில் பேசப்பட்டிருக்காது. பெரிய நாடுகளில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்ற போதே அது மிகப்பெரிய அளவில் பேசுபொருளாகிறது.

மறுபுறத்தில் எமது வீட்டிற்கு, எமது கிராமத்திற்கு, எமது நாட்டிற்கு, இந்த உலகிற்கு எம்மால் எப்படியான நற்செயல்களைச் செய்ய முடியும் என்கின்ற எண்ணத்திலேயே ஒரு நாளை ஆரம்பிக்க வேண்டும். எல்லோராலும் இப்படியான எண்ணத்தில் ஒவ்வொரு நாளையும் ஆரம்பிக்க முடியுமாக இருந்தால் சிறந்ததொரு உலகை எம்மால் கட்டியெழுப்ப முடியும். உலகில் சிறந்ததொரு சூழல் உருவாகும். எனினும் இன்று உலகில் இடம்பெற்று வருகின்ற விடயங்களை அவதானிக்கையில் கவலையும் வேதனையுமே ஏற்படுகிறது.

இன்று ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் யுத்தமொன்று ஆரம்பமாகும் நிலையுள்ளது. முழு உலகும் இதில் அவதானமாக உள்ளது. பல தசாப்த காலமாக அமெரிக்கா மத்திய கிழக்கில் பல்வேறு யுத்தங்களில் தொடர்புபட்டுள்ளது. வளங்களால் நிரம்பப்பெற்ற மத்திய கிழக்கில் எண்ணெய் அரசியலுக்காக வேண்டியா அல்லது வேறு ஏதும் நோக்கத்துக்காக வேண்டியா அமெரிக்கா மூக்கு நுழைக்கிறது என்பது தெரியவில்லை. ஒரு புறத்தில் 16 வருடங்களாக ஆப்கானிஸ்தானில் யுத்தம் செய்கிறது. 14 வருடங்களாக ஈராக்கில் யுத்தம் செய்கிறது. இவற்றால் அமெரிக்காவுக்கு என்ன இலா[illegible] அமெரிக்க துருப்புக்களை [illegible]ருக்கும் தருணத்தில் ஈரானுடன் மற்றுமொரு யுத்தத்துக்குத் தயாராகிறது அமெரிக்கா.

இது ஈராக்குடனும் தொடர்புபடும். இவை தவிர லிபியா உள்ளிட்ட இதர இடங்களிலும் அமெரிக்கா நேரடியாக தொடர்புபடாவிட்டாலும் அல்கைதா, ஐஸிஸுக்கு எதிராக செயற்படும் பாணியில் தனது யுத்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது. ஈரானுடன் உருவாக்கியிருக்கும் யுத்தம் எங்கு ஆரம்பித்து எங்கு போய் முடிவடையும் என்று கூற முடியவில்லை. ஈரானின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் காணப்படும் எண்ணெய்க் கிணறுகளுக்கு அழிவுகளை ஏற்படுத்தி விடுமா? அல்லது உலகம் பூராகவும் உள்ள அமெரிக்க வர்த்தக நிலையங்கள், தூதுவராலயங்கள் உள்ளிட்ட இடங்களுக்கு அழிவுகளைக் கொண்டு வந்து சேர்த்து விடுமா? இது எங்கு போய் முடிவடையும் என்கின்ற அச்சம் இன்று முழு உலகையும் வாட்டிக் கொண்டுள்ளது.

மறுபுறத்தில் ரோஹிங்கிய அகதிகளின் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவுகாணப்படாத நிலை உள்ளது. இன்னுமொரு புறத்தில் சிரியாவில் நாளாந்தம் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். இது தவிர காஷ்மீரில் பெரும் பான்மை மக்களுக்கு சுதந்திரமாக வாழ முடியாத நிலை காணப்படுகிறது. இந்தியாவிலும் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராகப் போராடும் முஸ்லிம்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. ஹொங்கொங் நாட்டிலும் சுதந்திர உரிமைகளுக்கான போராட்டம் வலுத்து வருவதை காண முடிகிறது. இவ்வாரத்தில் மாத்திரம் அங்கு சுமார் 400 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

இவைதவிர இன்று உலகில் ஊழல் ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்திருப்பதை காண முடிகிறது. தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி [illegible] எதிராக ஊழல் குற்றச்சாட்டு [illegible]ள்ளது. ஒரு பக்கத்தில் சுரண்டல்களை நோக்காகக் கொண்டு மோதல்கள் உருவாக்கப்படுகின்றன.

மறுபக்கத்தில் மேலாதிக்கவாத மனோநிலையில் தாமே மேலாதிக்கவாதிகள், சிறுபான்மையை நாமே ஆள வேண்டும் என்ற உணர்வில் இனரீதியான மோதல்களை உருவாக்கிவிடுகின்றனர். இவையனைத்து விடயங்களும் எமக்கு படிப்பினைகளைத் தருகின்றன. எம்மால் எமது வீட்டையும், எமது சமூகத்தையும் சரியாக வடிவமைத்துக்கொள்ள முடியும் என்றிருந்தால் இவ்வாறான பிரச்சினைகளை தவிர்த்துக்கொள்ள முடியுமாகிறது. மனிதர்களாகிய -எமது உள்ளத்தில் உருவாகும் தீய எண்ணத்தைக் களைந்து எமது உள்ளத்தில் நல்ல எண்ணங்களை விதைத்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் எமது சமூகத்துக்கும், நாட்டிற்கும், உலகிற்கும் நல்லவற்றைச் செய்ய வேண்டும். இதனால் நாடு முன்னேற்றம் கண்டு உலகம் நல்லெண்ணங்களால் வளம் பெறும். இஸ்லாமும் எமக்கு இவ்வாறான முன்மாதிரிகளையே காட்டித் தந்துள்ளது.

கடந்த வாரம் நான் முன்னாள் சபாநாயகர் வி.ஜே.மு. லொகுபண்டார அவர்களை நலம் விசாரிக்கச் சென்றேன். அப்போது அவர் பௌத்த சமயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு விடயத்தை பற்றி என்னுடன் கலந்துரையாடினார். அவர் "நாம் பொய்யான உலகத்திலேயே வாழ்கின்றோம். எமது கண்களிலிருந்து கபம் வெளியாகிறது. காது மற்றும் மூக்கிலிருந்து அசுத்தங்களே வெளியாகிறது. எமது உடலும் அசுத்தங்களையே வெளியாக்குகிறது. நினைக்கும் அளவுக்கு முழு உடம்பும் இனிமையானதல்ல. இதனை நாம் புரிந்துகொண்டு வாழ வேண்டும்" என்றார். இவ்விடயங்கள் தொடர்பாக இஸ்லாத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் என்பதை தோற்கடிக்க வேண்டும். அதற்கு மேலாகச் செல்லக்கூடாது. நாம் அடுத்தவர்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும். எல்லா சமயங்களிலும் இதன் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மலந்திருக்கும் இப்புதிய வருடத்தில் எமக்கு செவிமடுக்கக் கிடைக்கின்ற மோசமான செய்திகளற்ற உலகினை கட்டியெழுப்புவதற்கு நாம் எமது எல்லைக்குள் நின்று நல்ல விடயங்களை செய்யும் எண்ணத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பிரதிநிதித்துவம் - கண்டி

• எஸ்.என்.எம். சுஹைல்





கண்டி மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு திறைமறைவில் சதித்திட்டம் தீட்டப்படுகின்றதா? அதற்கு முஸ்லிம் சமூகத்தில் சிலரே உடைந்தையாக இருக்கின்றனரா? என்கின்ற சந்தேகம் நீடிக்கிறது. சரி இம்முறை கண்டி மாவட்டத்தில் தேர்தல் முடிவுகள் குறித்த சில அனுமானங்களை பார்ப்போம்.

2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் பொதுஜன பெரமுன 7 ஆசனங்களும் ஐக்கிய தேசியக் கட்சி 5 ஆசனங்களும் பெரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனது கணிப்பின் அடிப்படையில் சிலவேளை பொதுஜன பெரமுன 8 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையுமே பெற வாய்ப்பு இருக்கிறது.

பொதுஜன பெரமுனவில் ஒருவர் பிரதிநிதியாவதற்கு கிட்டத்தட்ட 80 ஆயிரம் வரையிலான வாக்குகளைப் பெற வேண்டி ஏற்படும். ஐக்கிய தேசியக் கட்சியில் ஒருவர் பிரதிநிதித்துவம் பெற கிட்டத்தட்ட 65 ஆயிரம் வாக்குகளைக் கட்டாயம் பெற வேண்டியிருக்கும்.

பொதுஜனபெரமுனவில், 'சிறந்த எதிர் காலத்திற்கான தொழில்சார் நிபுணர்கள்' (வியத்கம) அமைப்பின் வேட்பாளர்கள் மூவர் அல்லது இருவர் போட்டியிடுவர், அவர்களை வெற்றி பெறச் செய்வதற்கு ஜனாதிபதி பிரயத்தனம் எடுப்பார், இது தவிர திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்த ஆகியோர் அதிகப்படியான வாக்குகளை பெறுவர், மஹிந்தானந்த அளுத்கமகேயின் வாக்கு வங்கியில் கொஞ்சம் சரிவு இருந்தாலும் அவர் வெற்றி பெறலாம். இதற்கடுத்தபடியாக கெஹெலியவும் தெரிவாவார்.

அடுத்தபடியாக எஸ்.பி.திஸாநாயக்க, அனுராத ஜயரத்ன ஆகியோருக்கிடையே கடும் போட்டி நிலவும். சரத் அமுனுகம பொதுத் தேர்தலில் போட்டியிட்டால் அவரும் முன்னிலை வகிப்பார். ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பொதுஜன பெரமுனவுடன் இணைந்த ஆனந்த அளுத்கமகே பிரதிநிதித்துவத்தை இழப்பார்.

விருப்புவாக்குகளின்படி,

01. லொஹான் ரத்வத்த

02. திலும் அமுனுகம

03. வியத்கம உறுப்பினர் 01

04. வியத்கம உறுப்பினர் 02

05. மஹிந்தானந்த அளுத்கமகே

06. கெஹெலிய ரம்புக்வெல

07. அனுராத ஜயரத்ன

08-09 எஸ்.பி. திசாநாயக்க அல்லது சரத் அமுனுகம

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் இம்முறை கண்டியில் போட்டியிடும் முன்னணி வேட்பாளர்களாக கிரியெல்ல, மயந்த திஸாநாயக்க, லக்கி, ஹலீம், ஹக்கீம் இருப்பர். இவர்கள் தவிர கண்டியில் சுஜீவ சேனசிங்க களமிறங்க வாய்ப்பு இருக்கிறது. அத்துடன், திலின பண்டார தென்னகோனும் போட்டியிடுவது உறுதியாகியிருக்கிறது. திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் தேர்தலில் போட்டியிடலாம். வேலுகுமாருக்கும் பட்டியலில் இடமளிக்கலாம். இவர்கள் அனைவரும் போட்டியிடுகின்றனர் என வைத்துக்கொள்வோம்.

லக்ஷ்மன் கிரியெல்ல தான் முன்னிலை வகிப்பார். சுஜீவ சேனசிங்கவுக்கு புதிய வாக்குகள் அதிகப்படியாக கிடைக்கும். ஹலீம் சிங்கள வாக்குகளை இழப்பார். ஹக்கீம் சிலவேளை கண்டியில் களமிறங்காமலும் இருக்கலாம். ஆனால் அவர் கண்டியில் போட்டியிடுவதாகவே வைத்துக்கொள்வோம்.

கண்டி பட்டியலின் படி ஐ.தே.க.வில்

01. லக்ஷ்மன் கிரியெல்ல

02. சுஜீவ சேனசிங்க

03. ரவூப் ஹக்கீம்

04. அப்துல் ஹலீம்

05. திலின பண்டார தென்னகோன்

---------------------

06. மயந்த திஸாநாயக்க

07. வேலுகுமார்

08. லக்கி ஜயவர்தன

இப்படி பட்டியல் செல்லும் என எதிர்பார்க்கலாம்.

பொதுஜன பெரமுனவில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர் அதிகப்படியாக 30 ஆயிரம் வாக்குகள் வரை செல்லலாம். அதுவும் பாரிஸ் ஹாஜியார் வேட்பாளராக வருவார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இவருடன், அக்குறணை பிரதேச சபை தவிசாளர் போட்டியிட்டாலே 30 ஆயிரம் வாக்கு வரை செல்லலாம். உண்மையில் 70 வீதமான முஸ்லிம் வாக்குகள் பொதுஜன பெரமுனவுக்கு திருப்ப முடிந்தால் பொதுஜன பெறமுனவின் ஊடாக பிரதிநிதி உறுதிசெய்யலாம். ஆனால், 1989 ஆம் ஆண்டு விகிதாசார தேர்தலுக்கு பின்னர் முஸ்லிம் வாக்குகள் எப்படி பிரிந்திருக்கிறது என்பதை நோக்குமிடத்து பொதுஜன பெரமுன அல்லது சுதந்திரக் கட்சி ஊடாக கண்டியில் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதென்பது குதிரைக்கொம்பான கதையே.

பொதுஜன பெரமுனவில் கேட்கும் வேட்பாளருக்கு வாக்குகள் அதிகரிக்க அதிகரிக்க ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்களின் வெற்றி வாய்ப்பு குறைந்து கொண்டே செல்லும்.

ஏனெனில் கண்டி மாவட்டத்தில் 1 இலட்சம் முஸ்லிம் வாக்குகள் அளிக்கப்படும் என கணிக்கலாம். அதில் 30 ஆயிரம் வாக்குகள் என்பது 30 வீத முஸ்லிம் வாக்குகள். எனவே ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளருக்கு 70 வீத வாக்குகள் கட்டாயம் கிடைத்தாக வேண்டும். இல்லையேல் 1956 இலிருந்து கண்டியில் பாதுகாக்கப்பட்டு வரும் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இம்முறை இல்லாமல் போய்விடும்.

1956, 1960 ஆகிய தேர்தல்களிலும் 2010 பொதுத் தேர்தலிலும் மாத்திரமே சுதந்திரக் கட்சி ஊடாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் கிடைத்தது. 1956, 1960 களில் தொகுதி முறைத் தேர்தல். அப்போது முஸ்லிம்கள் இனவாதிகளாக பார்க்கப்படவில்லை. கண்டி முஸ்லிம்களுக்கு கௌரவமும் மகத்தான வரவேற்பும் இருந்த காலம். இன்று அந்நிலைமை இல்லை. 2010 ஆம் ஆண்டில் பைஸர் முஸ்தபா அதிகப்படியான சிங்கள வாக்குகளையும் கணிசமான அளவும் முஸ்லிம் தமிழ் வாக்குகளையும் பெற்றதால் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் 8 ஆவது பிரதிநிதியாக பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். 25 வருட காலம் பாரளுமன்ற பிரதிநிதித்துவம் பெற்ற அப்துல் காதர் ஹாஜியார் 2015 கண்டியில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிட்டு வெறுமனே 7500 வாக்குகள் வரை மாத்திரமே பெற்றார். மறுபுறம் சிம்சான் 4500 வாக்குகளே பெற்றார் என்பதை கவனத்திற் கொள்ளலாம்.

கண்டிக்கு இன்னொரு தலையிடி வரலாம். அ.இ.ம.கா. தனது பிரதிநிதியை களமிறக்க ஐ.தே.க.விடம் கோரலாம். வாய்ப்பு கிடைப்பது மிகவும் அரிது. சிலபோது தனித்து ரிஸாடின் அ.இ.ம.கா. களமிறங்குவதால் 10 ஆயிரம் வரை மாவட்டம் முழுக்க ஒடித்திரிந்து வாக்குகள் எடுக்கலாம். இதனால், கண்டி மாவட்டத்தில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகலாம். அத்துடன் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கண்டியில் போட்டியிட்டு 3000 வாக்குகள் வரை பெற்று முஸ்லிம் வாக்குகளை சிதறடிக்க முயற்சிக்கலாம். இந்த முன்னெடுப்புகள் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளாகவே அமையும். சிலபோது முஸ்லிம் சுயேட்சை அணிகளும் களமிறங்கலாம் என்பதை முஸ்லிம் சமூகம் மனதில் கொள்ள வேண்டும்.

# அமெரிக்க ஈரான் மோதல் இலங்கையை பாதிக்குமா?

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி உக்கிரமடைந்துள்ளது. அமெரிக்கா பாரிய 6 விமானங்களை இந்து சமுத்திரத்தில் உள்ள தியேகோ கார்சியா (Diego Garcia) தீவிற்கு அனுப்பியுள்ளமையே இந்த அபாய நிலைக்குக் காரணமாகும்.

இந்து சமுத்திரத்தில் மாலைத்தீவு, சீஷெல்ஸ் மற்றும் மொரிசியஸூக்கு அருகில் உள்ள தியேகோ கார்சியா தொடர்ந்தும் பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் உள்ள வலயமாகும். நீண்டகால குத்தகை அடிப்படையில் பிரித்தானியா அதனை அமெரிக்காவிற்கு வழங்கியுள்ளது. 2016 ஆம் ஆண்டு இந்த குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வளைகுடா நாடுகளில் யுத்தம் ஏற்பட்டபோதும் ஈராக் ஆக்கிரமிக்கப்பட்ட போதும் லிபியா ஆக்கிரமிக்கப்பட்டபோதும் அமெரிக்கா இந்த தீவில் உள்ள முகாம் மூலம் பாரிய விமானங்களை ஈடுபடுத்தி இருந்தது. தற்போது ஈரான், அமெரிக்க பிரச்சினை உக்கிரமடையும்போது அமெரிக்கா இந்த தீவில் விமானங்களை தரையிறக்கியுள்ளது. 'தாக்குதல் விமானங்களை நிறுத்தி வைக்கும் கப்பல்' என்றே சர்வதேச சமூகம் இந்தத் தீவை அடையாளப்படுத்துகின்றது.

தியேகோ கார்சியாவை அமெரிக்க முகாமிற்கு வழங்கும்போது பிரித்தானியா கையாண்ட செயற்பாடுகள் தொடர்பில் கடந்த காலங்களில் மொரிசியஸ், சர்வதேச நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்குட்படுத்தப்பட்டது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியைக் கைவிடும் பொழுது தியேகோ கார்சியா மற்றும் Chagos தீவுகளை பிரித்தமை ஐக்கிய நாடுகளின் கொள்கைகளை மீறும் செயல் என அதன்போது தெரிவிக்கப்பட்டது. இதனை சர்வதேச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு தீர்ப்பை வழங்கியிருந்தது.

பிரித்தானியா மற்றும் அமெரிக்கா இதனைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் செயற்பட்டாலும், இந்தப் பிரச்சினை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

ரஷ்யா, கிரைமியா, சீனா, தென் சீனா ஆகிய நாடுகளின் கடற் பிராந்தியங்களில் முன்னெடுக்கப்படும் கொள்கைகளை கடுமையாக விமர்சிக்கும் அமெரிக்கா தியேகோ கார்சியாவில் தங்கியிருப்பது சரியான செயற்பாடு அல்ல என சர்வதேச சமூகம் குற்றம் சுமத்துகின்றது.

சிலவேளை அமெரிக்கா, தியேகோ கார்சியாவை கைவிட்டால், நீண்ட தூரம் பயணிக்க முடியுமான விமானங்களைக் கையாள முடியுமான மிக அண்மித்த சிறந்த பகுதியாக இலங்கையே காணப்படுகின்றது.

அமெரிக்கப் படையினர் ஈராக்கில் நடத்திய தாக்குதலில் ஈரான் இராணுவத் தளபதி கொல்லப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை [illegible] தேச அரசியல் நெருக்கடி[illegible] டுத்து வருகிறது.

இந்தக் கொலையை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க ட்ரம்ப் நிர்வாகத்திற்கு CIA அமைப்பு வழங்கிய தகவலே காரணமானது. தற்போது ஜனாதிபதி ட்ரம்ப் கடுமையான நிலைப்பாட்டில் இருந்து ஈரானுக்கு தாக்குதல் மேற்கொள்வதாக முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்.

[illegible] தேச சமூகம் கேள்வி எழுப்புகின்றது.

தனது பிரதிவாதியான ஜோ பைடன் தொடர்பில் உக்ரைன் ஜனாதிபதியுடன் மேற்கொண்ட தொலைபேசி உரையாடல் காரணமாக ட்ரம்ப் நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் CIA அமைப்பின் தகவல்களை நம்ப முடியாது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறு இருக்கும்பொழுது ஈரான் மீது தாக்குதல் மேற்கொள்ள CIA தகவல்களை அவர் நம்பியமை சர்வதேச சமூகத்தின் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு ஈராக்கை ஆக்கிரமித்ததன் பின்னர் தகவல்களை அடிப்படையாக வைத்து ஈராக்கை ஆக்கிரமிக்க முடியாது என அவ்வேளையில் பிரித்தானியாவின் பிரதமராக இருந்த டொனி பிளேயர் குறிப்பிட்டிருந்தார். அவர் அது தொடர்பில் சர்வதேச சமூகத்திடம் மன்னிப்புக் கோரியிருந்தார்.

அவ்வேளையில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த கொலின் பவல் மற்றும் இராஜாங்க செயலாளர் கொன்டலிசா ரைசும் பின்னர் இவ்வாறான கருத்தைத் தெரிவித்திருந்தனர்.

தற்போது ஈரான் தொடர்பில் கிடைக்கும் தகவல்களை அடிப்படையாக வைத்து மோதலை ஆரம்பித்து அதற்கு இலங்கை போன்ற தரப்பினரை இணைத்துக் கொண்டு பின்னர் தகவல்கள் பிழையானது என கூறினால் என்னவாகும்?

இலங்கை இவ்வாறான மோதல்களுடன் தொடர்புபட வேண்டுமா?



## 'அக்சா உடன்படிக்கை காரணமாக பாதிப்பு ஏற்படலாம்'



வைத்தியர் வசந்த பண்டார - தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம்

ஈரான் அமெரிக்க மோதல் இலங்கைக்கு அபாயமான நிலைமை ஏற்படுகின்றது. இலங்கை அக்சா Acquisition and Cross-Servicing Agreement (ACSA) உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளமையால் அமெரிக்காவுக்கு ஒருதலைப்பட்சமாக எவ்வேளையிலும் விமானங்கள் அல்லது கப்பல்களை எமது கடற் பிராந்தியத்தில் நிறுத்துமாறு கோரிக்கை விடுக்க முடியும்.

தற்போதும் கூட 'ஜோன்ஸ் டீட் டொனிஸ்' கப்பல் திருகோணமலைக்கு அப்பால் நங்கூரமிடப்பட்டுள்ளது. சிலவேளை மூன்றாம் தரப்பிற்கு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால் அல்லது இலங்கையின் கடற் பிராந்தியம் விமான நிலைய வளாகத்தினை பயன்படுத்தினால் இலங்கையும் அதனால் பாதிக்கப்படும். இலங்கையின் விமான நிலையங்களையும் துறை முகங்களையும் தாக்குதல்களை மேற்கொள்வதற்காக அமெரிக்காவிற்கு வழங்கி னால் இந்நிலைமை ஏற்படலாம்.

# 2020 இல் அனைவரையும் பல்கலையில் சேர்க்க விஷேட குழு




உயர் கல்வியை மேம்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுக்கள் இன்னும் 60 நாட்களில் அறிக்கை சமர்ப்பிக்குமென்றும் அதனை அடிப்படையாகக் கொண்டு வெகு விரைவில் விசேட வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுமென்றும் உயர் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வருடாந்தம் உயர்தரத்தில் சித்தியடையும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்கப்படாமல் கைவிடப்படுகின்றனர். எனினும் 2020 இல் எந்தவொரு மாணவரும் உயர் கல்வியின்றி கைவிடப்படக்கூடாது என்பதற்காகவே இவ்விஷேட குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் உயர் கல்வியமைச்சர் கூறினார்.

கடந்த அரசாங்கத்தில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் சுமார் ஒன்றரை வருடங்களாக பல்கலைக்கழகங்களுக்கு செல்ல முடியாமல் காத்திருக்க வேண்டிய நிலை உருவானது. இந்நிலை மேலும் தொடர இந்த அரசாங்கத்தில் இடமளிக்க மாட்டோம். பெறுபேறுகள் வந்து ஆறு மாத காலத்துக்குள் மாணவர்கள் தமது உயர் கல்வியை ஆரம்பிக்கும் வகையில் அனைத்து நடைமுறையிலும் மாற்றங்கள் கொண்டு வருமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழகங்களின் கல்வித் தரத்தை மெருகூட்டுதல், வெளிவாரி பல்கலைக்கழத்தை மேம்படுத்தல், பல்கலைக்கழக கல்லூரிகளை உருவாக்குதலென உயர்கல்வி தொடர்பான ஒவ்வொரு அம்சத்துக்கும் கல்விமான்களைக் கொண்ட வெவ்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இக்குழுக்களின் அறிக்கை இன்னும் 60 நாட்களில் கிடைக்குமென்றும் அவர் மேலும்தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 மாவட்டங்களில்... (01 ஆம் பக்கத் தொடர்)

அழுத்தங்களுக்கு தொடர்ந்தும் கீழ்ப்படியும் நிலையற்றதொரு பாராளுமன்றம் ஒரு நாட்டிற்குப் பொருந்தாது.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துகளை வலுப்படுத்துவது போல ஆளுந்தரப்பை ஆதரிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷவும் தேர்தல் முறை தொடர்பில் மாற்றங்களைக் கோரும் தனிநபர் பிரேரணையொன்றை சமர்ப்பித்துள்ளார். இதன் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான வெட்டுப்புள்ளியை 5 வீதத்திலிருந்து 12.5 வீதமாக மாற்றியமைக்க அவர் பிரேரித்துள்ளார்.

நாட்டினது பன்மைத்துவத்தையும், அர்த்தபூர்வமான ஜனநாயகப் பண்புகளையும் பேணிப் பாதுகாக்கும் வகையிலேயே தேர்தல் முறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதற்கு மறுதலையாக, பெரும்பான்மைவாத மனோநிலையோடு வெளிவரும் இவ்வாறான ஒருதலைப்பட்சமான திருத்த யோசனைகள் நிராகரிக்கப்பட வேண்டும். அவை நாட்டின் நீண்டகால நலன்களுக்கும் நிலைபேறான அபிவிருத்திக்கும் பரஸ்பர நல்லிணக்கத்திற்கும் பாதகமாக அமைந்துவிடும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை கொழும்பில் கூடிய கட்சியின் தேசிய செயற்குழு இது தொடர்பில் ஆராய்ந்து, புதிய பாராளுமன்றத்தை ஜனநாயக ரீதியிலும், நாட்டின் அரசியல் சமநிலையைப் பேணும் வகையிலும் பலப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தது. எந்தவொரு கூட்டணியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளாத வகையில் புதிய பாராளுமன்றம் அமைவதே நாட்டுக்கு ஆரோக்கியமானதாகும் என ந.தே.மு. மேலும் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு, கம்பஹா, கண்டி, குருநாகல், திருகோணமலை, புத்தளம், மட்டக்களப்பு, பொலன்னறுவை, வன்னி, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் போட்டியிட வேண்டுமெனவும் கட்சி தீர்மானித்துள்ளது. அதற்கான முன்னேற்பாடுகளை ந.தே.மு தற்போது செய்துவருகிறது.

## நான்கு பாரிய... (01 ஆம் பக்கத் தொடர்)

அவர் அதிகாரகளைக் கேட்டுக் கொண்டார். அம்பாறை மாவட்ட கைத்தொழில் பேட்டையின் நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக அவர் மேற்கொண்ட விஜயத்தின் போது, இந்தக் கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதில் ஆர்வம் காட்டும் பலர் இதனை ஆரம்பிப்பதில் உள்ள குறைபாடுகளை ஆளுநரிடம் தெரிவித்தனர்.

நீண்ட காலக் குத்தகைக்கு காணியைப் பெற்றுக் கொள்வதிலுள்ள சிரமங்களை முன்வைத்தபோது, குறித்த காணியின் குத்தகை உரிமையை உறுதிப்படுத்தும் பத்திரமொன்றை கையெழுத்திட்டு வழங்குமாறு வேண்டிக் கொண்டார். அடிக்கடி மின்சாரம் தடைப்படுதல் தொடர்பிலும் ஆளுநரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தக் கைத்தொழிற்பேட்டையை ஆரம்பிப்பதற்கான தேசிய உற்பத்தியாளர்களை தேடிக் கண்டறியுமாறும் ஆளுநர் மாவட்டச் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

## தேர்தல் விதிகளை... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்த இரண்டு அரச தொலைக்காட்சி அலைவரிசைகளினதும் தலைவர்கள் தற்போது விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல்களின் போது, அரச தொலைக்காட்சிகள் தேர்தல் விதிகளை மீறி பக்கச் சார்பாக நடந்து கொள்வதாகவும், தேர்தல்கள் முடிந்த பின்னர் அவற்றுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியா தெரிவித்திருந்தார். அதே நேரம் இன்னும் சில தனியார் தொலைக்காட்சிகளும் தேர்தல் விதிகளை அதிகளவு மீறியதாக அவர் அப்போது சுட்டிக் காட்டியிருந்தார்.

## புதிய அரசியல்... (01 ஆம் பக்கத் தொடர்)

இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்படவுள்ளன. இலங்கையில் இது வரை பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் 70 க்கு மேல உள்ளன. இதேவேளை 2019 க்கான வாக்காளர் பட்டியல் 24 ஆம் திகதி இறுதிப்படுத்தப் படும் எனவும், முன்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இந்தத் தேர்தல் இடாப்பே பயன்படுத்தப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

## தேசிய கீதமும்... (01 ஆம் பக்கத் தொடர்)

மக்கள் விடுதலை முன்னனியின் அனுர குமார திஸாநாயக்க சந்திரிக்கா குமாரதுங்கவின் அரசாங்கத்தில் விவசாய அமைச்சராக பதவி பெற்றுக்கொண்டதன் பின்னர் அவர் நெற்பயிர்ச் செய்கை தொடர்பாக வெளியிட்ட கூற்று ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு ''வறுமையைப் பயிரிடும் நெற்செய்கை'' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தேன். நெற்செய்கைக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுவதானது இலங்கையின் வறுமையை ஒழிக்கக் காரணமாக அமையாது என்பதுடன் அது மேலும் வறுமையை அதிகரிப்பதாகவே அமையும் என்பதனை தெளிவுபடுத்தியிருந்தேன்.

நான் அதனூடாகக் குறிப்பிட முனைவது நெற்செய்கையானது முற்று முழுதாக கைவிடப்பட வேண்டும் என்பதனையல்ல. சோறு என்பது எமது பிரதான உணவாக இருப்பதன் காரணமாக நெற்செய்கையினை முற்றுமுழுதாக நீக்கிவிட முடியாது. எனினும் எமக்குச் சோறு உண்ணும் அளவினை குறைத்துக் கொள்ளலாம். மூன்று வேளைகளும் சோறு உண்பது நாட்டு மக்கள் நோய்வாய்ப்படுவதற்குக் காரணமாக அமைகின்றது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் உலக நாடுகளில் மக்கள் சோறு உண்ணும் அளவைக் குறைத்துக் கொண்டு இறைச்சி வகை, மரக்கறி வகை, பழவகைகள் என்பவற்றை உணவில் சேர்த்துக்கொள்ளப் பழகினர். ஜப்பான் நாட்டவர்கள் சிறிய கோப்பை ஒன்றின் அளவே தற்போது சோறு உண்கின்றனர். ஜப்பான் அபிவிருத்தி அடைவதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணமாக அமைந்திருக்கின்றது.

இலங்கைக்கு சோறு உண்ணும் அளவினை 50 வீதத்தினால் குறைத்துக் கொள்ளலாம். இறைச்சி, மரக்கறி, பழவகைகளை உட்கொள்வதன் ஊடாக அந்த இடைவெளியினைப் பூரணப்படுத்தலாம். இவ்வாறான ஒரு கொள்கை உருவாக்கப்படுமாயின் இலங்கைக்குத் தேவையான அரிசி உற்பத்திக்காக உலர் வலய நிலங்களை மாத்திரம் பயன்படுத்திக் கொள்ளலாம். பொருளாதார ரீதியில் நலன்களைத் தராத அமைப்பில் இருக்கின்ற ஈர வலய நிலங்களில் பொருளாதார ரீதியில் அதிக பயன்களைத் தருகின்ற பயிர்களைப் பயிரிடலாம். குறைந்த அளவில் சோறு உட்கொள்வதானது சிறந்த ஆரோக்கியத்திற்குக் காரணமாக அமைவதுடன் நாட்டின் அபிவிருத்திக்கும் கிராமிய விவசாயத்தின் அபிவிருத்திக்கும் காரணமாக அமையும்.

### ஈர வலய வயல் நிலங்கள்

தேயிலை, தென்னை, இறப்பர் போன்ற பொருளாதாரப் பயிர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலங்களிலும் பார்க்க கூடிய அளவிலான நிலப்பகுதி நெற்செய்கைக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாக விவசாய திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. நெற்செய்கைக்காக 922,151 ஹெக்டயர் அளவு நிலம் ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில் தேயிலைச் செய்கைக்காக 227,262 ஹெக்டெயார்களும், தென்னை செய்கைக்காக 245,552 ஹெக்டயார்களும் இறப்பர் செய்கைக்காக 207,628 ஹெக்டயர்களும் ஏனைய பொருளாதாரப் பயிர் செய்கைகளுக்காக 146,181 ஹெக்டயர்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஈர வலயத்தில் அதிக அளவிலான வயல் நிலங்களில் நெற்செய்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. இது 40 வீதம் அளவிலானதாக இருக்கலாம். விவசாயத் திணைக்களம் 10 வருடங்களுக்கு ஒருமுறை கணக்கெடுப்புக்களை மேற்கொண்டு தகவல்களை வெளியிட்டு வந்தபோதிலும் 1981 ஆம் ஆண்டின் பின்னர் கணக்கெடுப்புக்கள் மேற்கொள்வதனை நிறுத்திக் கொண்ட காரணத்தினால் பயிரிடப்படாத நிலத்தின் அளவினை சரியாகக் குறிப்பிட முடியாமலுள்ளது. நான் அறிந்தமட்டில் களுத்துறை மாவட்டமானது 1948 ஆம் ஆண்டு முதலே நெற்செய்கை ஊடாக அதிக நட்டத்தைப் பெறுகின்ற மாவட்டமாக இருந்து வருகின்றது. களுத்துறை மாவட்டத்தில் நெற்செய்கை ஊடாக ஆகக் குறைந்த அளவிலான வருமானமே ஈட்டப்படுகின்றதாயின் அந்த மாவட்ட மக்களை நெற்செய்கையில் ஈடுபடுவதற்காக ஊக்குவிப்பதில் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை.

ஈர வலயங்களில் நெற்செய்கை கைவிடப்பட்டிருக்கின்ற வயல் நிலங்களில் எந்தவிதமான மாற்றுப் பயிர்ச்செய்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. வயல் நிலங்களுக்காக விதிக்கப்பட்டிருக்கின்ற இறுக்கமான சட்டங்கள் காரணமாக மாற்றுப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாத நிலையே காணப்படுகின்றது. அவ்வாறு பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் கைவிடப்பட்ட ஈரவலய நிலங்களின் அளவு இலட்சக்கணக்கான ஏக்கர்களாக இருக்கலாம். நெற்செய்கை மேற்கொள்ளுமிடத்து போதிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதனாலேயே இவைகள் பொருளாதார ரீதியில் எந்தப் பயன்களும் பெற்றுக்கொள்ளப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் இருக்கின்றன.

### நிலப் பயன்பாடு

நிலம் என்பது ஒரு நாட்டின் அருமையானதும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையானதுமான ஒரு வளமாகும். இருக்கின்ற நிலங்களை பொருளாதார ரீதியில் பயன்களைப் பெற்றுத் தரும் அடிப்படையில் வினைத்திறனாக பயன்படுத்திக்கொள்ளாத நாடு வறுமைக்குள்ளாவது ஆச்சரியமான விடயமொன்றல்ல. ஈர வலய நிலங்களை பொருளாதார பயன் பெற்றுத் தரும் அடிப்படையில் பயன்படுத்தாது அதனை பொருளாதார ரீதியில் பயன் பெற்றுத்தரும் அடிப்படையில் சிறிய, நடுத்தர, பாரிய அளவுகளிலான பண்ணைகளை அமைக்கலாம். அதற்கு ஏற்றவகையில் வயல் நிலங்கள் குறித்த சட்டங்கள் மாற்றப்பட வேண்டியதுடன் அரசின் திட்டங்களும் செயற்படுத்தப்பட வேண்டும்.

அதன் ஊடாக தற்போது கைவிடப்பட்டிருக்கின்ற வயல் நில உரிமையாளர்களுக்கு தமது நிலங்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அல்லது குத்தகைக்கு வழங்குவதன் ஊடாக வருமானம் ஈட்டிக்கொள்வதற்கான சந்தர்ப்பம் அமையலாம். அந்த நிலங்களை நன்னீர் இறால்கள், மீன்கள் என்பன வளர்க்கின்ற பண்ணைகளாக மாற்றியமைக்கலாம். இந்திய எருமை மாடுகள் அல்லது ஏற்றுமதிக்கான வாத்துக்கள் வளர்க்கின்ற பண்ணைகளாகவும் மாற்றியமைக்கலாம்.

## அரசியல் பழி... (01 ஆம் பக்கத் தொடர்)

துமிந்த சில்வாவை பழிவாங்குவதற்காகவே சிறையிலடைக்க நினைக்கிறார்கள். இந்த வழக்கின் குற்றவாளிகளை விடுவித்து விடுதலை செய்யுமாறு நீதிபதிகள் சபையின் தலைமை நீதிபதி தீர்ப்பு வழங்கும் போது, நீதிபதி பத்மினி ரணவக்க ரஞ்சன் ராமநாயக்கவுடன் நடத்திய உரையாடல் தொடர்பில் சந்தேகம் எழுகிறது. இதனால் இந்த வழக்கை மீள விசாரணைக்கு அழைக்குமாறு நான் துமிந்த சில்வாவின் குடும்பத்தினரைக் கேட்டுக் கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

## 21/4 தாக்குதல்... (01 ஆம் பக்கத் தொடர்)

திரட்டியுள்ளனர். இந்தப் பிரதேசத்துக்குப் பொறுப்பாகவிருந்த பொலிசார் தொடர்பிலும் அவர்கள் விசாரித்தறிந்துள்ளனர்.

வண்ணாத்திவில்லு லக்டோ தோட்டம் ஈஸ்டர் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் பயிற்சி எடுத்த இடமாகச் சந்தேகிக்கப்படுகிறது. 75 ஏக்கர் பரப்புள்ள இந்த இடத்தில் இருந்து 2019 ஜனவரி மாதம் வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக செய்திகள் வெளிவந்திருந்தன. இது தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## முஸ்லிம் அரசியல்... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்த 12.5% என்ற வெட்டுப் புள்ளி முறை 5% வீதமாக குறைக்கப்பட்டமையாகும். ஏற்கனவே அதுரலியே ரதன தேரரும் முஸ்லிம் தனியார் சட்டத்தை இல்லாதொழித்து முஸ்லிம்களையும் நாட்டின் பொதுவான சட்டத்தின் முன் சமம் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒரு தனிநபர் பிரேரணையையும் சமர்ப்பித்திருந்தார்.

ஆனாலும் புதிய ஜனாதிபதியால் பாராளுமன்ற கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டதால் அந்தப் பிரேரணை செல்லுபடியற்றதாகி இருக்கின்றது. இனவாதிகள் எத்தகைய பிரேரணைகளை கொண்டு வந்தாலும் அவை அரசாங்கத்தின் பிரேரணையாக சட்டத் திருத்த மசோதாவாக அமைச்சரவை அங்கீகாரத்துடன் பாராளுமன்றத்திற்கு வந்து பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே இவ்வாறான உரிமைகளை பறிக்க முடியும். அதற்கு இடமளிக்காது முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஒன்றிணைந்து கைகோர்த்துச் செயற்பட வேண்டும்.

தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்களுடன் சந்திப்புக்களை நடத்தி இதில் உள்ள சாதக பாதகங்களை அவர்களுக்கு எடுத்துக் கூறி, முஸ்லிம்களின் பக்கத்திற்கு அவர்களை சாதகமாகக் குரல் எழுப்புபவர்களாக மாற்றிக் கொள்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். ஏன் இந்த 5% முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்கு அவசியம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகின்றது. சில சந்தர்ப்பங்களில் பெரும்பான்மை அரசியல் கட்சிகளுடன் ஒட்டிக்கொண்டு அரசியல் நடத்தும் முஸ்லிம் தலைவர்கள் கூட இந்த வாய்ப்பை இல்லாதொழிப்பது நல்லது என்று வாதிட முடியும்.

விஜேதாச மற்றும் அதுரலியே போன்ற சந்தர்ப்பவாத அரசியல் செய்யும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நடித்து அப்பாவி சிங்கள பௌத்தர்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்லும் இனவாதிகளுக்கு தகுந்த பாடம் கற்பிப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். முஸ்லிம் சமூகம் சார்பாக அக்கறை செலுத்தும் சிங்கள அரசியல் தலைவர்களை சரியான முறையில் அணுகி அவர்களுக்கு எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டியது இன்றைய முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பாகும். இவ்வாறான ஒரு நிலையில் எமது தலைமைகள் சரியான முறையில் சிந்திக்காது பிரிந்து செயற்பட்டால் அது ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதிக்கக் கூடியதாக அமையும்.

## ஹஜ் யாத்ரிகர்களுக்கு... (07 ஆம் பக்கத் தொடர்)

தூரமாக்கி வைத்திருக்கிறோம். எமது சில நடவடிக்கைகளின் காரணமாகவே அவர்கள் எம்மை விட்டு தூரமாகியிருக்கிறார்கள். நான் யாரையும் குறைகூறவில்லை. ஆனால் யதார்த்தம் இதுதான் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமூகத்திற்கு நல்ல விடயங்களைச் செய்ய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. முஸ்லிம் சமூகம் நாட்டில் நிம்மதியாக வாழ வேண்டும். இதுவே முக்கியம். அண்மையில் இடம்பெற்ற 21/4 தாக்குதல் சம்பவத்திற்குப் பிறகு முஸ்லிம் சமூகம் மிகப்பெரும் சோதனைகளுக்கு உட்பட்டது. வீட்டுப் பாவனைக் குக் கூட ஒரு கத்தியை வைத்துக்கொள்ள முடியாத நிலையேற்பட்டது. மையவாடிகளை துப்புரவு செய்வதற்கு பள்ளிவாசல் களில் வைக்கப்பட்டிருந்த வீச்சு அரிவாள்களையும் கைப்பற்றிச் சென்றார்கள். சமுதாயம் அந்தளவுக்கு முஸ்லிம்களை கீழ்த் தரமாக நோக்கியது. அப்போது தேர்தல் நெருங்கிய காலப்பகுதியாக இருந்தமையால் ஓரளவுக்கு எம்மைப் பற்றிக் கவனித்தார்கள். தேர்தல் என்றொரு விடயம் இடம்பெற்றிருக்காவிட்டால் எமது நிலைமை படுமோசமானதாக இருந்திருக்கும்.

- **இலங்கை முஸ்லிம் சமூகம் இவ்வாட்சி குறித்து எப்படியான நம்பிக்கைகளை வைத்திருக்க வேண்டும் என நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள்?**

முஸ்லிம்கள் இவ்வாட்சி தொடர்பில் எவ்வகையிலும் அச்சப்படத் தேவையில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் முஸ்லிம்களது விவகாரங்களில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர். ஹஜ்ஜுடைய விடயத்தில் பிரதமர் அவர்கள் மேற்கொண்டிருக்கும் திட்டங்களை நோக்குகின்றபோது இதனை எமக்குப் புரிந்துகொள்ள முடியும். எனவே நாம் தொடர்ந்தும் ஐ.தே.க.வை மார்க்கமாகக் கொண்டு பின்பற்றிக்கொண்டிருக்காமல் நாட்டு நலனைக் கருத்திற் கொண்டும் சமூகத்தின் விடிவுக்காக வேண்டியும் எதிர்வரும் பொதுத் தேர்தலிலாவது ஆளும் தரப்புக்கு ஆதரவை நல்க வேண்டும்.

கடந்த 21/4 தாக்குதலுக்குப் பின்னர் இலங்கை முஸ்லிம் சமூகம் எவ்வளவோ கஷ்டங்களையும் இன்னல்களையும் எதிர்கொண்டது. எம்மை நோக்கித் தொடுக்கப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் எம்மால் தனித்து நின்று பதிலளிக்க முடியாத நிலையேற்பட்டது. எனவே நாம் இணைந்து பயணிக்க வேண்டிய கட்டாய கடப்பாட்டில் உள்ளோம். இவ்வளவு காலமும் ஐ.தே.க.வை ஆதரித்ததால் சமூகத்திற்கு என்ன பெரிய இலாபம் கிடைத்துவிட்டது. எனவே எமது சமூகம் சிந்தித்து செயற்படும் பட்சத்தில் எமக்கு இந்நாட்டில் கண்ணியமாகவும் மற்ற சமூகத்துக்கு மத்தியில் கௌரவமாகவும் வாழ முடியும் என்பதே எனது கருத்து.

- **இலங்கைச் சிறுபான்மை முஸ்லிம்களாகிய நாம் இந்நாட்டில் எப்படி மற்ற சமூகத்தவர்களோடு நடந்துகொள்ள வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

'First Knowledge Best Knowledge' என்பதாக எனது தாயார் அடிக்கடி சொல்வார். முதலில் என்னைப் பற்றி நான் அறிந்து கொள்ள வேண்டும். என்னால் 100 கிலோ சுமையை தூக்க முடியும் என்று கூறினால் நீங்கள் நம்புவீர்களா? இல்லை. ஏனெனில் என்னால் 10 கிலோவையேனும் தூக்க முடியாது. அதுவே யதார்த்தம். எனவே எங்களைப் பற்றி அறிய வேண் டும். இந்நாட்டில் நாம் அரசியல் ரீதியாக சிறுபான்மை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் சிறுபான்மையாக இருந்து கொண்டு பெரும்பான்மையிடம் பங்கு கேட்டால் என்ன நடக்கும்? நாட்டில் எமக்கு இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிவாசல்களை வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதே. அதற்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். பல்வேறு கொலைக் குற்றச்சாட்டுக்களையும் ஊழல் குற்றங்களையும் சுமத்தினார்கள். ஆனால் கடந்த அரசாங்கக் காலப்பகுதியில் ஒருவரும் கைதுசெய்யப்படவில்லையே ஏன்? இல்லாத பொல்லாத குற்றச்சாட்டுக்களை எல்லாம் ராஜபக்ஷ குடும்பத்தின் மீது சுமத்தினார்கள். ஆனால் அதன் விளைவை இன்று இவர்களே அனுபவிக்கிறார்கள் என்றுதான் கூற வேண்டும்.


மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 |
| 12 இதழ்கள் | ரூபா 600.00 |
| 24 இதழ்கள் | ரூபா 1200.00 |

இந்தியா

| | |
|---|---|
| தனிப் பிரதி | ரூபா 100.00 |
| ஒரு வருடம் | ரூபா 3500.00 |

| | |
|---|---|
| மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 |
| மலேசியா | 4000.00 |
| ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 |
| ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| அமெரிக்கா | 6500.00 |
| அவுஸ்திரேலியா | 4700.00 |
| சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்.

Focus Media # 255 H-1/1, Dr. Danister De Silva Mawatha, Baseline Road, Colombo 09, Sri Lanka. Hotline: 0777 581 661

People's Bank A/c: 056100153978154 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# Madeena National School

# மதீனா தேசிய பாடசாலை

## சியம்பலாகஸ்கொடுவ

2019 க.பொ.த (உ/த) பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகம் தெரிவான அனைத்து மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.

- அதிபர், ஆசிரியர்கள்
- பாடசாலை அபிவிருத்தி சங்கம் (SDS)
- பழைய மாணவர் அமைப்பு (MOBA)
- அன்ஸாருல் மதீனிய்யீன் அமைப்பு (AMS)
- Village Improwment Social Association (VISA)

## மதீனாவின் வரலாற்றுச் சாதனை

**விஞ்ஞானப் பிரிவு:**
பல்கலைக்கழக நுழைவு 06
மருத்துவ பீடம் 03
பொறியியல் பீடம் 03
அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றோர் 21

**தொழில்நுட்பப் பிரிவு:**
பல்கலைக்கழக நுழைவு 04
அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றோர் 14

**வர்த்தகப் பிரிவு:**
பல்கலைக்கழக நுழைவு 02
அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றோர் 08

**கலைப் பிரிவு:**
பல்கலைக்கழக நுழைவு 15
அனைத்துப் பாடங்களிலும் சித்தி பெற்றோர் 43

S.M.Arshad 3A
Engineering



M.S.M.Faseeh 3A
Engineering



M.J.M.Nifras A,2B
Engineering



M.R Aasif 2A,B
Medicine



A.F.Afra 2A,B
Medicine



M.M.F.Maheesha A,2B
Medicine



அல்லாஹ்வின் அருளால் பாடசாலையில் இடம்பெற்ற கற்பித்தல் நடவடிக்கைகளிலும் பாடசாலையுடன் இணைந்து நடாத்தப்பட்ட MOBA Project வகுப்புக்களிலும் மாத்திரம் கலந்து கொண்டோம். பாடசாலைக்கு வெளியே எந்த பிரத்தியேக வகுப்புக்களுக்கும் செல்வதில் நாம் காலத்தை வீணாக்கவில்லை. எனவேதான் எம்மால் இந்தப் பெறுபேற்றைப் பெற முடிந்தது. Ansarul Madeenians அமைப்பு கலைத்துறைக்கும் VISA அமைப்பு வர்த்தகத் துறைக்கும் பிரத்தியேகமான Project வகுப்புக்களை நடாத்தி வருகின்றமையால் உயர் தரத்தின் அனைத்துத் துறையையும் பாடசாலைச் சூழலிலேயே பயிலும் வாய்ப்பு எமது பாடசாலையில் உள்ளது.

- 2020 க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவு Repeat வகுப்புக்கள் 11.01.2020 ஆரம்பிக்கப்படவுள்ளது.
- 2022 க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவு Project வகுப்புக்கள் 15.01.2020 ஆரம்பிக்கப்படவுள்ளது.
- 2022 கலை, வர்த்தகம், தொழிநுட்பப் பிரிவுகளுக்கான வகுப்புக்களும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு:
0372247530, 0778959790
0777401235, 0773632634,
0774639793, 0779126103,
0776534310

Printed and Published by Focus Media (Pvt) Ltd. # 255 B-1/1, Dr. Danister De Silva Mawatha, Colombo-09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கன் பயணிகளுக்கு இனி இலங்கைக் கோப்பையில் தண்ணீர்



ஸ்ரீலங்கன் விமானத்தில் பறக்கும் பயணிகளுக்கு வழங்கப்படும் சிறிய ரக பிளாஸ்டிக் தண்ணீர் கோப்பைகளை டுபாய் நிறுவனத்திடம் இருந்து வாங்குவதை நிறுத்துவதற்கு விமானப் போக்குவரத்து அமைச்சு தீர்மானித்திருக்கிறது.

தண்ணீர் நிரப்பிய பிளாஸ்டிக் கோப்பையொன்று 7.80 டொலருக்கு டுபாய் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு வந்தது. வருடத்துக்கு இரண்டு தடவைகள் 3 மில்லியன் கோப்பைகளை ஸ்ரீலங்கன் வாங்கிவந்தது.

ஸ்ரீலங்கனில் இனிமேலும் பிளாஸ்டிக் கோப்பைகள் பயன்படுத்துவதில்லை என்றும், தேவையான தண்ணீரையும் கோப்பையையும் இலங்கையிலிருந்தே பெற்றுக் கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 2020 தேசிய விளையாட்டு விழா செம்டம்பரில்

வெள்ளி விழா

விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் பிரதான விளையாட்டு விழாவான வருடாந்த தேசிய விளையாட்டு விழா இம்முறை 46 ஆவது தடவையாக நடைபெறவுள்ளது. வீண் விரயங்களைக் குறைக்கும் வகையில் இவ்விழா மூன்று கட்டங்களாக நடைபெறும்.

இதன் முதலாவது கட்டம் கொழும்பிலும் இரண்டாவது கட்டம் அனுராதபுரம், பொலன்னறுவையை மையப்படுத்தி வட மத்திய மாகாணத்திலும், இறுதிக் கட்டம் கொழும்பு சுகததாச அரங்கிலும் நடைபெறும்.

தேசிய மட்டத்திலான போட்டியாளர்களைத் தெரிவு செய்வதற்கான மாகாண மட்டப் போட்டிகளை ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் முடிப்பதற்கும், தேசிய விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வுகளை செப்டம்பர் இறுதிப் பகுதியில் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இறுதி நாள் நிகழ்வுகளில் வழமையாக இடம்பெறும் தடகளப் போட்டிகளுக்கு மேலதிகமாக இம்முறை நீச்சல் போட்டிகளும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

வார இறுதிகளில் போட்டிகளை நடத்துவதால் ஏற்படும் காலவிரயத்தையும் நிதி விரயத்தையும் தவிர்ப்பதற்காகவே இம்முறை மூன்று கட்டங்களாகப் போட்டிகள் நடக்கவுள்ளன என விளையாட்டு அமைச்சின் பணிப்பாளர் தம்மிக முதுகல தெரிவித்தார். மழையினால் போட்டிகளுக்கு ஏற்படும் தடங்கல்களைக் கருத்திற் கொண்டே இம்முறை போட்டிகள் செப்டம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளன.

# கந்தளாய் சீனித் தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்கிறது



கந்தளாய் சீனித் தொழிற்சாலையை மீளவும் இயங்க வைப்பதற்கு அரசாங்கம் காட்டும் அக்கறையின் வெளிப்பாடாக சீனித் தொழிற்சாலைக்குச் சென்று நிலைமைகள் தொடர்பில் அறிக்கையிடுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத்தைப் பணித்துள்ளார்.

இதனையடுத்து சீனித் தொழிற்சாலைக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர், புதியதொரு முதலீட்டாளர் மூலமாக இன்னும் மூன்று மாத காலத்தில் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார்.

இந்தத் தொழிற்சாலை சீனி உற்பத்தியைக் கைவிட்டு 25 வருடங்களுக்கும் மேல் ஆகிறது. ஐந்து பில்லியன் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியுள்ள இதனுடைய சொத்துக்கள் அழிவடையும் நிலையில் இருக்கின்றன.

இந்தத் தொழிற்சாலையை மீள இயங்க வைப்பதனூடாக ஐயாயிரம் பேருக்கு தொழில் வழங்க முடிவதோடு, சீனி இறக்குமதிக்காகச் செலவிடப்படும் 4 பில்லியன் ரூபாவை சேமிக்க முடிகிறது. செக்கோஸிலாவக்கியாவின் நன்கொடையாக வழங்கப்பட்ட இந்தச் சீனித் தொழிற்சாலை 1960 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போது நாட்டின் சீனித் தேவையில் 8.5 வீதத்தை அது பூர்த்தி செய்தது.

# புலமைப் பரிசில் உதவுத் தொகை இணைய வழியில்



ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான உதவு தொகைக் கொடுப்பனவுகள் இம் மாதம் முதல் இணையவழியில் வழங்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதி இணைய வழி மூலமாக தமது கணக்குப் புத்தகத்தில் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதற்கென சகல பாடசாலைகளில் இருந்தும் உதவுத் தொகை பெறும் மாணவர்களின் விபரம் சேகரிக்கப்பட்டுள்ளது. உதவித் தொகையைப் பெற்றுக் கொள்வதற்காக மாணவர்கள் மாதாந்தம் வவுச்சர் மூலம் விண்ணப்பிக்கும் முறை இதன் மூலம் இலகுவாக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் இருந்து சித்தியடைவோரில் மாதாந்தம் 15,000 ரூபாவுக்குக் குறைந்த வருமானம் உடைய 20,000 மாணவர்களுக்கு உதவுத் தொகை வழங்கப்படும். தரம் ஆறில் தொடங்கி தரம் 13 வரை இந்த உதவுத் தொகை வழங்கப்படுகிறது.

# ஜனாதிபதித் தேர்தல் ஊழியர்களுக்கு வழங்கப் பணமில்லை



நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றிய அரச ஊழியர்களின் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு திறைசேரியில் நிதி இல்லை எனத் தெரியவருகிறது. இதனால் தேர்தல்கள் ஆணைக்குழு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

3000 நிறுவனங்களில் இருந்து 1800 பட்டியல்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் எதனையுமே செலுத்த முடியாத நிலைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு தள்ளப்பட்டுள்ளது.

தேர்தல் செலவுகளுக்கென தேர்தல்கள் ஆணைக்குழு 2 பில்லி யன் ரூபா கேட்டிருந்த போதும் டிசம்பர் 16 வரை 50 மில்லியன் மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 600,000 அரசாங்க ஊழியர்கள் கடமையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

# உயர்தரப் பரீட்சை பெறுபெற்றுப் பத்திரங்கள் தயார்

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றுப் பத்திரங்களை தற்போது பரீட்சைத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக மாணவர்கள் திணைக்களத்தின் இணையத்தளமான doenets.lk ஊடாகவும் சான்றிதழுக்கு விண்ணப்பித்து பெறுபேற்றுப் பத்திரங்களைக் கோர முடியும்.

உரிய கட்டணங்களை கடனட்டை மற்றும் பண அட்டைகள் மூலமாகவும் செலுத்த முடியும். பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழுக்கு 600 ரூபாவும் தபால் கட்டணமாக 200 ரூபாவும் அறவிடப்படுகின்றன. விண்ணப்பித்து 48 மணித்தியாலங்களில் பெறுபெற்றுப் பத்திரம் மாணவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# சுற்றி வளைப்பதற்கு ஆட்கள் போதாது



கலால்வரித் திணைக்களத்திடம் உள்ள 1111 சுற்றி வளைப்பு அதிகாரிகள் நாட்டின் தேவைக்கேற்ற வகையில் இல்லாதிருப்பதாக கலால்வரித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சட்டவிரோதமான மதுபானச் சாலைகளையும் மதுபானம் தயாரிக்கும் இடங்களையும் சுற்றிவளைப்பதற்கென 1254 பேர் கொண்ட ஆளணியை அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. ஆனாலும் பிரதான பரிசோதகர் முதல் சாரதி வரையான மொத்த ஊழியர் எண்ணிக்கை 1111 பேராகவே உள்ளது. இவர்களே கலால்வரித் திணைக்களத்தின் கீழுள்ள 104 நிறுவனங்களுக்கும் பிரிந்து செல்கின்றனர். மேலும் 143 பேர் பற்றாக்குறையாக உள்ளனர்.

# HND பாடநெறிக்கு 30,000 பேர் அனுமதி



இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு உள்ளீர்க்கப்படும் மாணவர்களின் தொகை 30,000 ஆக அதிகரிப்படவிருப்பதாக தொழில்நுட்பம் மற்றும் புதிய உற்பத்திகள் ராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள 19 தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் வருடாந்தம் 10,000 பேர் உள்வாங்கப்பட்டு வருகின்றனர். இவற்றில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் டிப்ளோமா சான்றிதழ் பட்டதாரிச் சான்றிதழ் வரை உயர்த்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# இலங்கையில் 700 இந்திய பியூட்டி சலூன்



இந்தியாவின் பியூட்டி சலூன்கள் இலங்கையில் இயங்குவதற்கு இலங்கை முதலீட்டுச சபை அனுமதி அளித்துள்ளது. இதற்கெதிராக இலங்கை பியூட்டி சலூன்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. நச்சுரல் சலூன் என்ற பெயரில் இலங்கையில் 700 பியூட்டி சலூன்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது.

இதில் 8 பியூட்டி சலூன்கள் இயங்க ஆரம்பித்திருக்கின்றன. 700 உம் இயங்கத் தொடங்கினால் இந்தத் துறையில் தொழில் புரியும் நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் தொழிலிழந்து போவார்கள் எனவும், இதனால் இந்திய பியூட்டி சலூன்களை நிறுத்தும்படியும் இலங்கை ஒப்பனையாளர் மற்றும் சிகை அலங்காரிகள் சங்கம், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மற்றும் கைத்தொழில் அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் சிகையலங்காரம் மற்றும் ஒப்பனைக் கலைஞர்கள் சர்வதேச அளவில் புகழ் வாய்ந்தவர்களாகவும் இருக்கும் நிலையில், தேசிய கலைஞர்களுக்கு பொறுப்புக் கூறக்கூடிய, அவர்களது செயற்பாடுகளை கண்காணிக்கக் கூடிய நிறுவனமொன்று உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் விமல் வீரவன்ச, ஒப்பனைக் கலையில் இந்தியப் பிராந்தியத்தில் இலங்கை முன்னணி வகிக்கிறது எனவும், இவர்களுடைய பிரச்சினை தொடர்பில் அமைச்சரவையில் தாம் முன்வைப்பதாகவும் தெரிவித்தார்.

# நாய்களின் சனத் தொகைப் பெருக்கம்



நாட்டில் நாய்களின் எண்ணிக்கை முப்பது இலட்சமாக அதிகரித்துள்ளதாக ஆய்வறிக்கைகள் தெரிவிப்பதாக பொதுச் சுகாதாரம் மற்றும் மிருகநல சேவைகள் பணிப்பாளர் டொக்டர் எல்.டி. கித்சிரி தெரிவித்தார்.

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் 61000 பெட்டை நாய்கள் வருடந்தோறும் கருத்தடை செய்யப்படுவதாகவும் இந்த வருடம் (2019) இதற்கென 10 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நாய்க்கடிக்கு இலக்காகி இந்த வருடம் 250,000 பேர் பாதிக்கப்பட் டுள்ளதாகவும் இதற்கென 35 கோடி ரூபா செலவழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நாய்க் கடியினால் இலங்கை யில் வருடாந்தம் 26 பேர் உயிரிழக்கின்றனர்.

அதிகமான நாய்கள் மேல் மாகாணத் திலேயே காணப்படுகின்றன. கிழக்கு மாகாணம் நாய்கள் குறைந்த மாகாண மாகும். கட்டாக்காலி நாய்களைப் பராமரிப்பதற்கு சப்ரகமுவ மாகாணத்தில் பராமரிப்பு நிலையம் ஒன்று உருவாக்கப் படவிருப்பதாகவும் இதனால் நாய்க்கடியின் பாதிப்பைக் குறைத்துக் கொள்ளலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உதைபந்தாட்ட அணியின் முகாமையாளராக கேர்ணல் பத்மநாதன்



சாக் போட்டிகளில் இலங்கை அடைந்த தோல்விகளுக்குப் பின்னர் முகாமையாளர் பதவியிலிருந்து விலகிய சுனில் சென வீரவின் இடத்தை நிரப்புவதற்காக முன்னாள் முகாமையாளர் கேர்ணல் பி. பத்மநாதன் மீளவும் அழைக்கப்பட்டுள்ளார். பங்களாதேஷில் நடைபெறவுள்ள பங்கபந்து கிண் ணத்துக்கான போட்டிகளுக்கான முகாமை யாளராக கேர்ணல் பத்மநாதன் கலந்து கொள்வார்.

பங்கபந்து கிண்ணத்துக்காக இலங்கை அணியுடன் பங்களாதேஷ், கிர்கிஸ்தான், மொங்கோலியா, லாஓஸ், கம்போடியா அணிகள் மோதுகின்றன. போட்டிகள் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. சாக் போட்டிகளில் வெற்றி பெறத் தவறிய அணித் தலைவர் மொஹமட் பஸால் தலைமையிலிருந்து நீக்கப்பட்டு புதிய தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச உதைபந்தாட்ட தரப்படுத்தலில் இலங்கை 205 ஆவது இடத்தில் இருக்கிறது. ஆசிய தரப்படுத்தலின் அடிப்படையில் இலங்கை இறுதி ஸ்தானத்தில் (45) நிலைத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• சூழலியலாளர் திலக் கந்தேகம

# பள்ளிக் கூடத்தின் பள்ளிப் பாடம்

இந்தியாவில் பாலியல் கல்வி தொடர்பான கதையாடல்கள் நடந்து கொண்டிருந்த போது வெளிவந்த தமிழ்த் திரைப் படமொன்றில் கமலஹாசனிடம் அவரது பள்ளிக் குழந்தை செக்ஸ் என்றால் என்ன அம்மா? என்று வினவுகிறது. அதற்கு தந்தையும் தாயும் அடித்துப் பிடித்துக் கொண்டு திருமணம் ஆனது முதல் குழந்தை உருவாகும் வரையான எல்லா விடயங்களையும் அரை மணித்தியாலத்துக்கு மேலாக பிட்டுப் பிட்டு வைக்கிறார்கள். அத்தனையும் முடிந்த பின், பள்ளிக் கூடத்துல வழங்கிய போர்மிலே செக்ஸ் என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு இத்தனை விடயங்களையும் எழுத வேண்டுமா என்று குழந்தை கேட்கிறது.

பாலியல் கல்வி தொடர்பான நமது நிலைமை இப்படித்தான் இருக்கிறது. பாலியல் என்றவுடனேயே அது அதுதான் என்ற நினைப்புத் தான் பலருக்கும் வந்து விடுகிறது. அந்த வகையில் திருமண வாழ்க்கையையே வெறுத்தொதுக்கிய துறவிக்கு இந்த மாதிரியான நினைப்பு வருவது ஆச்சரியப்படக் கூடியதல்ல. இலங்கையில் இது தான் நடக்கிறது. ஒரு அதுரலியே ரதனஹிமி என்கின்ற துறவி விவாகச் சட்டம் பற்றிப் பேசும் பொழுது பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ ஹிமி எனும் துறவி பாலியல் கல்விப் பற்றிப் பேசும் வினோதம் யார் எதனைப் பேச வேண்டும் என்ற வரையறையைத் தாண்டிச் செல்கிறது. அதிலும் எடுத்ததையெல்லாம் அரசியலாக்கும் பிக்குக் கலாச்சாரம் பிக்குகளின் பாத்திரம் தொடர்பில் கேள்வியை எழுப்புகிறது.

கல்வி அமைச்சினால் 07 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கெனத் தயாரிக்கப்பட்ட ஹத்தே அபே பொத்த என்ற நூல் சர்ச்சைக்குரியதாக்கப்பட்டிருப்பதை விளங்கிக் கொள்வதற்கு முதலில் பாலியல் கல்வி என்பதன் மூலம் நாடப்படுவது என்ன என்பது தொடர்பில் தெளிவு பெற வேண்டியிருக்கிறது. கலவியில் ஈடுபடுவதைச் சொல்லிக் கொடுப்பது தான் பாலியல் கல்வி என்று பலரும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பொதுவான வழக்கில் சிறுவர் ப்ாலியல் சுரண்டல் (Child Sex Exploitation - CSE) பற்றிச் சிறுவர்களுக்கு அறிவூட்டுவதுதான் பாலியல் கல்வி எனப்படுகிறது.

மேற்கு நாடுகள்தான் பெரும்பாலும் இந்தப் பகுதியினை தமது பாடசாலையின் பாடப் பரப்பில் உள்வாங்கியிருக்கின்றன. கிழக்கு நாடுகளில் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் இந்தப் பட்டியலில் அடங்கினாலும் மலேசியாவும் பங்களாதேஷும் மட்டுமே பாலியல் கல்வியைப் பாடத்திட்டத்தில் உள்வாங்கியிருக்கின்ற முஸ்லிம் நாடுகளாகக் காணப்படுகின்றன.

முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் இறுதிக் காலத்தில் இது வெளியிடப்பட்டது தான் பிக்குமாரின் எதிர்ப்புக்குக் காரணமாகியிருக்கிறது என்று தான் கருத வேண்டியிருக்கிறது. ஏனெனில் இலங்கையில் பாலியல் கல்வி தொடர்பில் மாணவர்களை அறிவூட்டுவது இதுதான்



முதல் சந்தர்ப்பமல்ல. பருவ வயதை அடைதல் தொடர்பான வழிகாட்டி நூலொன்று ஏற்கனவே 1990 களின் நடுப் பகுயில் உதாவூ யௌவனய (உதயமாகும் வாலிபப் பருவம்) என்ற பெயரில் 10 - 15 வயது வரையான மாணவர்களை இலக்காகக் கொண்டு வெளியிடப்பட்டிருக்கிறது. பருவ வயது மாற்றங்கள் தொடர்பில் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர பெண்கள் மற்றும் பாலினம் தொடர்பிலான பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவினால் விரிவான பாலியல் கல்வி (Comperehensive Sexuality Education - CSE) தொடர்பிலான பாடத்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஹத்தே அபே பொத்த, பருவ வயதை அடையும் போது ஏற்படும் உடல் ரீதியான, நடத்தை ரீதியான மாற்றங்களைப் பேசுகிறது. ஆண்களின் உடம்பில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றிச் பேசுவது போல பெண்களின் உடம்பில் ஏற்படும் மாற்றங்களையும் அது பேசுகிறது. குறிப்பாக பெண்களின் மாதவிடாய் தொடர்பிலும், அதனைக் கையாளும் முறை தொடர்பிலும், குறித்த சந்தர்ப்பத்தில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் தொடர்பிலும் இது தொடர்பான மூட நம்பிக்கைகள் பற்றியும் விளக்குகிறது.

தூக்கத்தில் விந்து வெளியேறுதல், சுய இன்பம் காணுதல் தொடர்பிலும் இந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவற்றுக்கு மேலாக இந்த வயதுக்கே உரித்தான குழூஉ உணர்வு, எதிர்ப்பால் கவர்ச்சி, தொற்றா நோய்களில் இருந்தும் அதிகமான உடற் பருமனில் இருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கான உணவுப் பழக்கங்கள், உடற் பயிற்சிகள், உடலுக்குத் தீங்கு தரும் புகைத்தல் உள்ளிட்ட போதைப் பொருட்களில் இருந்து தவிர்ந்து கொள்ளுதல், உடலைச் சுத்தமாக வைத்திருத்தல், பாலியல் சுரண்டலில் இருந்து பாதுகாப்புப் பெறுதல் போன்ற பல விடயங்கள் இந்த 27 பக்க நூலில் அடங்குகின்றன. கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, குடும்பச் சுகாதாரப் பணியகம், தேசிய பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆகியன இணைந்து இந்த நூலைத் தயாரித்திருக்கின்றன.

இலங்கையில் ஒவ்வொரு நான்கு மணித்தியாலங்களிலும் ஒரு கற்பழிப்புக் குற்றம் நடக்கிறது என முன்னாள் சப்ரகமுவ மாகாண ஆளுநர் ஜனாதிபதி சட்டத்தரணி மஹேஷ் பெரேரா 2017 இன் ஆடை மற்றும் வர்த்தகக் கண்காட்சி ஆரம்ப விழாவின் போது தெரிவித்திருந்தார். 2018 இல் 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்கள் மீதான 1196 கற்பழிப்பு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 248 முறைப்பாடுகள் பாதிக்கப்பட்டவரின் உடன்பாடின்றி நடந்தவைகளாகப் பதியப்பட்டுள்ளன. இதற்கெல்லாம் காரணம் பாலியல் தொடர்பிலான போதுமான அறிவின்மை என அரசாங்கம் கருதுகிறது.

சிறுவர்கள் பாலியல் கல்வி பெற்றிருப்பதனூடாக பாதுகாப்பில்லாத பாலியல் செயற்பாடுகள், பதின்பருவ தாய்மை, தவறான பாலியல் செயற்பாடுகள் மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பில் அறிந்து கொள்ள முடிகிறது என முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் குறிப்பிடுகிறார். எதிர்ப்பால் கவர்ச்சியும் காம உணர்வும் முறையாக வழிநடத்தப் படாவிட்டால் அது பாலியல் தொற்று நோய் (STD) வரை இந்த கட்டிளமைப் பருவத்தினரை இட்டுச் செல்கிறது என பாலியல் தொற்று நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் டொக்டர் ரஸாஞ்சலி ஹெட்டியாரச்சி குறிப்பிட்டுக் காட்டுகிறார். சைல்ட் ப்ரொடக்ஷன் போஸ் ஸ்தாபகர் சட்டத்தரணி மிலானி சல்பிட்டிகோரல ஒருவாரத்தில் தன்னிடம் வரும் வாடிக்கையாளர்களில் நான்கைந்து பேர் தமது பிள்ளைகளின் பிறப்பைப் பதிவுசெய்வதற்காக வருகிறார்கள் என்று குறிப்பிட்டு, அவர்களில் பெரும்பாலானவர்கள் இது போன்ற செயற்பாடுகளினால் கர்ப்பமாவது தொடர்பில் அறியாதவர்களாக இருக்கிறார்கள் என்கிறார்.

இந்த வகையில் சிறுவர் பாலியல் சுரண்டல் தொடர்பில் முன்னைவிட அதிகமாகவே தற்பொழுது அறிவூட்ட வேண்டியிருக்கிறது. முன்பை விட இளவயதிலேயே பெண்கள் பூப்படைவதும், சமூக ஊடகங்கள் மற்றும் இணையம் வாயிலாகக் காணக் கிடைக்கின்ற மனதை விகாரப்படுத்தக் கூடிய காட்சிகள் இலகுவாகவும் அதிகமாகவும் கிடைப்பதாலும் பாடசாலைப் பருவத்திலேயே சிறார்களை விழிப்பூட்ட வேண்டியது அவசியமாகும் என கலாநிதி சுஜாதா கமகே தெரிவிப்பது நியாயமானது.

இருந்தாலும் பாலியல் கல்வி என்ற பெயரில் பயிரை மேயும் வேலிகள் பற்றிய அச்சமும் சமூகத்தில் இல்லாமலில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான வழிகாட்டல் வழங்குவதாகக் கூறி தெரியத் தேவையில்லாத பல விடயங்களும் பிள்ளைகளுக்கு ஊட்டப்படுகின்றன. இவற்றையெல்லாம் தாண்டி பருவ மாற்றத்தினால் வரும் உள்ளக் கிளர்ச்சிகள் பற்றியும் உடல், உணர்வு மாற்றங்கள் பற்றியும் முக்கியத்துவம் கொடுத்து பாலியல் கல்வி போதிக்கப்படுவது பயனுள்ளதாக அமையும்.

இந்த நூலில் அடங்குகின்ற விடயமொன்று தொடர்பில் மேற்கோள் காட்டிய பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ ஹிமி, சில ஆண் மாணவர்கள் சுயஇன்பம் அனுபவிக்கிறார்கள். இது சகஜமானது. ஆனால் இதற்கு அடிமையாகி மாணவர்கள் தமது படிப்பினை பாழாக்கிக் கொள்ளக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது போன்ற விடயங்கள் எமது கலாச்சார விழுமியங்களுக்கு குந்தகம் விளைவிப்பவை. இந்தப் புத்தகம் கிடைத்த உடனேயே என்னுடைய பிக்கு மாணவர்களுக்கு இது கிடைக்கா வண்ணம் நான் பூட்டி வைத்திருக்கிறேன் எனத் தெரிவித்திருக்கிறார்.

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் இது பள்ளிக் கூடத்தில் தொழுகை அடவிலிருந்து சொல்லிக் கொடுக்கப்படும் பாடம். பல ஆரம்ப குர்ஆன் மத்ரஸாக்களிலும் சுத்தம் பற்றிய, தொழுகை பற்றிய பாடங்களில் இவைகள் எல்லாம் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. பாடசாலையின் இஸ்லாம் பாட நூல்களை வடிவமைத்தவர்களும் 07 ஆம் தர இஸ்லாம் பாடத்திலிருந்தே மதி, வதி, பெருந் தொடக்கு, சிறு தொடக்கு, ஜனாபத்து, முழுக்கு போன்றவை தொடர்பில் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். மெதகொட அபயதிஸ்ஸ ஹிமி சுட்டிக் காட்டிய உரையாடலில் வரும் தூக்கத்தில் விந்து வெளியேறுதல் சம்பந்தமாக 09 ஆம் தரத்தில் மாணவர்களுக்கு ஜனாபத் என்ற பாடத்தின் மூலமாக விளக்கப்பட்டிருக்கிறது. ஸ்கலிதமாதல் என்ற சொல்லே மாணவர்களுக்கு சமய போதனைகளின் ஊடாக அறிமுகமாகிய ஒன்றுதான்.

இந்த வகையில் இந்த அறிவினை ஏனைய மாணவர்களும் பெற்றிருப்பது நல்லதாகவே அமைகிறது. ஆனாலும் பெண்கள் தொடர்பான விடயங்கள் இன்னும் கூடுதலாக அறிவூட்டப்பட வேண்டிய தேவை இருக்கிறது. அது ஹதே அபே பொத்தவில் உள்ளது போல இல்லாவிட்டாலும் மாதவிடாய் தொடர்பில் குழந்தை பெற்ற தாய்மாருக்கும் தெளிவில்லாத நிலையொன்று இருப்பதற்குக் காரணம் இது பற்றிய அறிவைப் பெறுவதற்கான இடம் கிடைப்பதில்லை என்பதாகும்.

புலமைப் பரீட்சைச் சுமைகளினால் மாணவர்கள் 08 அல்லது ஒன்பது வயதிலேயே குர்ஆன் பள்ளிகளில் இருந்து நின்று விடுகிறார்கள். ஆறாம் ஆண்டுக்குப் பின்னர் குறிப்பாக பெண்கள் மீண்டும் குர்ஆன் பள்ளிகளுக்குச் செல்வதில்லை. இதன் பின்னர் அவர்களுக்கு இவை தொடர்பிலான அறிவுகள் கிடைப்பதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு. பாடசாலை பாடவிதானத்தில் உள்ளடக்குவதென்றால் கலவன் பாடசாலைகளில் இதனை எப்படிக் கற்பிப்பது என்ற பிரச்சினை. விஞ்ஞானப் பாடத்தில் வரும் இனப்பெருக்கத் தொகுதியையே கற்பிப்பதில் சங்கடங்களை எதிர்நோக்கும் ஆசிரியர்கள் இந்தப் பாடங்களைத் தவிர்க்கவே நினைப்பார்கள்.

ஆசியர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களாகவே இருந்தாலும் அவர்களும் பாடப்புத்தகத்துக்கு மட்டும் தங்களை மட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். இஸ்லாம் பாடவிதானக் குழுவில் பெண்களின் எண்ணிக்கையையும் அதிகரித்து, இந்த விவகாரங்களை பாடநூல் மூலமாக எப்படி வழங்குவது என்று ஆராயலாம். பாடசாலை மாணவியர் தாயாக மாறும் சம்பவங்கள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளாலும் நடக்கின்றன. அந்த வகையில் நல்ல தொடுகை, மோசமான தொடுகை போன்ற விடயங்களும், மஹ்ரமியாக இருந்தாலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பிலான வழிகாட்டல்களும் பாடத்திட்டத்தினூடாக வழங்கப்பட முடியும். பெரும்பாலான பெற்றோர்களும் பாலியல் தொடர்பிலான விடயங்களை தமது பிள்ளைகளிடம் கலந்துரையாடுவதில் சங்கோஜப்படுவதுண்டு. குறிப்பாக தந்தையர். அவர்களுக்கும் இது போன்ற நூல்கள் ஆறுதலாக அமையும்.

• சூழலியலாளர் திலக் கந்தேகம

# பிளாஸ்டிக் வேண்டாம்

பிளாஸ்டிக்கின் வரலாறு 1800களின் மத்தியில் ஆரம்பமானது. உலகம் முழுவதும் இருந்த விஞ்ஞானிகள் இறப்பர் உற்பத்தியில் இருக்கும் இயற்கை லாடெக்ஸை அகற்றி, முழுவதும் செயற்கையான (Synthetic) ஒரு உற்பத்தியை மேற்கொள்ள ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர். இந்த புதிய உற்பத்தி பாரிய அளவில் உலகெங்கும் மேற்கொள்ளக் கூடியவாறு இருக்க வேண்டும் என்ற நோக்கமும் அவர்களிடம் இருந்தது. இதன் விளைவாக சில தசாப்தங்கள் கழித்து 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிளாஸ்டிக் உருவானது.

பிளாஸ்டிக் உற்பத்தி நடைபெறும் வரையில் மக்கள் தங்களுடைய பொருட்களை நீரில் இருந்தும், காலநிலை மாற்றத்தில் இருந்தும் பாதுகாக்க இயற்கை இறப்பரையே பயன்படுத்தி வந்தனர். தொடர்ந்து வந்த மனிதத் தேவைகளின் அதிகரிப்பால் இயற்கை இறப்பருக்கான கேள்வி (Demand) அதிகரித்தது. ஆனால் இயற்கை இறப்பரானது, இறப்பர் மரங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட இறப்பர் பாலால் உருவாக்கப்படுவது என்பதால் அதன் உற்பத்தியை அதிகரிப்பது கடினமாக இருந்தது. இதற்கு மாற்றாக முழுவதும் செயற்கை மூலக் கூறு களாலான ஒரு பொருளை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் விஞ்ஞானிகளுக்கு உருவானது. அக்காலத்தில் இயற்கை இறப்பரின் கட்டுமான மூலக்கூற்றை ஒரு விஞ்ஞானி கண்டறிந்தார். அவரின் உதவியுடன் முதன் முதலாக பிளாஸ்டிக் உருவாக்கப்பட்டது.

முதன் முதலாக ஆய்வுகூடத்தில் பிளாஸ்டிக் கைக்கண்டுபிடித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த உலோகவியலாளரும், கண்டுபிடிப்பாளருமான அலெக்சாண்டர்



பார்க்ஸ். அலெக்சாண்டர் தன்னுடைய வாழ்வின் பெரும் பகுதியை இறப்பர் சார்ந்த பொருட்கள் குறித்து ஆய்வுசெய்வதற்கு செலவழித்தார். இறுதியாக 1950 இல் செலுலோலஸ் (Cellulose) இல் இருந்து பெறப்பட்ட சில சேதன (Organic) மூலப் பொருட்களையும், வேறு சில கனியங்களையும் ஒன்றிணைத்து பார்க்சின் (Parkesine) என்ற முதல் பிளாஸ்டிக் உருவானது. பிளாஸ்டிக், இறப்பரை விட சில சிறப்பம்சங்களை பெற்றிருந்ததை அலெக்சாண்டர் கண்டறிந்தார்.

சில காலத்திலேயே அ[illegible] பிளாஸ்டிக் உற்பத்தி செய்யும் ஒ[illegible] சாலையை உருவாக்கினார். எனினும் அது மிகக் குறுகிய காலத்திலேயே முறிவடைந்தது. பிளாஸ்டிக் இற்கு சந்தையில் நிலவிய உயர்ந்த விலையால் மக்கள் அதனை கொள்வனவு செய்ய முன்வரவில்லை. மேலும் பார்க்சின் பிளாஸ்டிக் இலகுவில் உடையக் கூடியதாகவும், தீப் பற்றக் கூடியதாகவும் இருந்தது. இருந்த போதிலும் இவரின் முயற்சியின் விளைவால் பிளாஸ்டிக் உலக மக்களுக்கும், ஐரோப்பிய மற்றும் வடஅமெரிக்க விஞ்ஞானிகளுக்கும் அறிமுகமானது. இது [illegible] அதிகளமாக அமைந்தது.

### பௌதிகக் கட்டுமாண அலகு

70 ஆண்டுகால வரலாற்றின் அங்கமாக தற் போதைய உலகில் தவிர்க்க முடியாத ஒன்றாக பிளாஸ்டிக் பரிணமித்துவிட்டது. இன்றைய திகதியில் நாம் நம்மையே சுற்றியுள்ள சூழலை நோக்கும் போது பிளாஸ்டிக்கை நம் கண்களில் இருந்து விலக்கிவிட முடியாது. காலையில் எழுந்ததும் பல்துலக்கும் தூரிகையில் இருந்து, இரவு படுக்கைக்கு முன் பார்க்கும் கடிகாரம் வரையில் பிளாஸ்டிக்கால் சூழப்பட்டுள்ளவர்களாக உள்ளோம். நீண்ட வாழ்வுடையதாலும், இயற்கை மாற்றங்களுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியதாலும், இன்றைய திகதிக்கு மிக மலிவாகக் கிடைப்பதாலும் பிளாஸ்டிக்கின் பாவனை உலகம் முழுவதும் பரவியுள்ளது.

எனினும் முழு உலகுக்குமான பௌதீகக் கட்டுமாண அலகு என்ற அந்தஸ்தை பிளாஸ் டிக்கால் அடைய முடியாது உள்ளது. அதற்குரிய காரணம் அவற்றால் மொத்த உலகுக்கும் ஏற்படும் தீய விளைவுகள். இதன் விளைவாக பல அரசாங்கங்கள் தங்களுடைய நாட்டில் பிளாஸ்டிக் உற்பத்தி செய்வதற்கும், பயன்படுத்துவதற்கும், கழிவுகளை மீள்சுழற்சி செய்வதற்கும் அநேக கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

### நிலையான தன்மை

பிளாஸ்டிக் எடை குறைவானது, விரும்பிய வடிவத்திற்கு மாற்றப்படக்கூடியது, ஸ்திரமானது. மேலும் பல்வேறு நிலைகளுக்கு மாற்றப் படக்கூடியது. எனினும் அதன் நிலைத்திருக்கும் தன்மையே அதிகம் முக்கியத்துவம் பெற்றது. பிளாஸ்டிக் அடிப்படையில் செயற்கை பொலிமர் (Polymer) சேர்மானங்களால் உருவாக்கப்பட்டது. எனவே இவை சில நூறு ஆண்டுகளுக்கு நிலைத்திருக்கும் ஆற்றல் பெற்றவை. இயற்கையாக இவை பிரிகை அடைவதற்கு பல காலம் எடுக்குமெனிம், சில வகை பிளாஸ்டிக்குகள் முழுமையாக உக்குவதில்லை. மாறாக சிறு சிறு துண்டுகளாக மாத்திரமே உடைக்கப்படும். இந்த சர்ச்சைக்குரிய இயல்பு நம்மால் பெரிதும் வரவேற்கப்படுவதற்கு உரியது அல்ல.

இவற்றை தொடர்ச்சியாக நிலங்களிலும் நீர் நிலைகளிலும் விடுவதால் வருங் கால சந்ததியினருக்கு பாரிய நெருக்கடி நிலைகள் தோன்றும். பிளாஸ்டிக் அதீதமான நிலைத்திருக்கும் தன்மையைப் பெற்றுள்ள போதிலும் அவை அழிக்கப்பட முடியாதவையாக அடையாளப்படுத்தப் படுவதில்லை. இந்த நிலைத்திருக்கும் தன்மையே பிளாஸ்டிக்கை ஒரு பொதுவான பௌதிகக் கட்டுமாண அலகாக அமைவதைத் தடுக்கிறது.

### விஷ விளைவுகள்

1950 இல் இருந்து அதிகரித்து வரும் பிளாஸ்டிக் பயன்பாட்டால் நம் சூழலில் அதிகரித்து வரும் கழிவுகளின் அளவு மிகப் பெரியது. இவை இன்றைய நாட்களில் கணிசமான அளவில் பாதக விளைவுகளை உண்டாக்கி வருகிறது. பயன்படுத்தப்பட்டு பின்பு கழிவாக சூழலைச் சேரும் பிளாஸ்டிக் பொருட்கள் உக்குவதற்கு 400 முதல் 1000 ஆண்டுகள் வரை எடுத்துக் கொள்கின்றன. எனினும், இந்த காலப்பகுதிக்கு இடையே இவை காடுகளிலும் கடல்களிலும் சேர்வதால் விலங்குகள் அதிகம் பாதிப்பு அடைகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநலம் 43

# மனச் சிதைவு ஆளுமைக் கோளாறு

## (Schizoid Personality Disoder)



மனச் சிதைவு ஆளுமைக் கோளாறினால் பாதிக்கப்படுபவர்கள் ஏனைய மனிதர்களிலிருந்து தூரமாகி ஒதுங்கியிருக்கவே விரும்புகின்றனர். தமக்கு தவிர்க்க முடியாமல் கட்டாயம் இருக்க வேண்டிய சிலரோடு மாத்திரம் நெருங்கிய உறவைப் பேணுகின்றனர். இத்தகைய ஆளுமைக் கோளாறு உடையவன் தொழில்நுட்பம், கைப்பணி, கணிதம் போன்ற மனிதத் தொடர்புகள் அதிகம் இல்லாத துறைகளில் நாட்டம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

பொழுதுபோக்கு என்ற வகையிலோ அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானது என்ற வகையிலோ முக்கியத்துவம் மற்ற செயற்பாடுகளில் ஆழ்ந்து போகும் தன்மை இவர்களிடம் நிறைவாகக் காணப்படும்.

நட்பு பற்றி ஆர்வமின்றி மௌனமாகவும் நாணத்துடனும் நடந்துகொள்ளும் இவர்களின் அசாதாரண இயல்பு அவர்களது பிள்ளைப் பருவத்திலேயே ஓரளவு வெளிப்பட்டிருப்பதை குடும்பத்தினர் அவதானித்திருப்பர். மற்றவர்களுடன் கலந்துறவாடும் நாட்டமின்றி தனிமையான முயற்சிகளில் ஈடுபடும் போக்கு அப்பருவத்தில் தென்பட்டிருக்கும். இவர்களுக்கு நெருங்கிய நண்பர்கள் இருக்க மாட்டார்கள். பெரியவர்கள் ஆனதும் இக்குறைபாடு பற்றி உள்ளூர வேதனைப்பட்டுக் கொண்டிருப்பர்.

மனச் சிதைவு ஆளுமைக் கோளாறு உடையவர்கள் பார்வைக்கு விசித்திரமானவர்களாகவும் நகைப்புக்குரியவர்களாகவும் பொருத்தமற்ற முறையில் தனித்துப் போகும் சந்தர்ப்பங்களில் அளவுக்கு மீறி அந்தரங்கம் பேணுபவர்களாகவும் தோற்றமளிப்பார்கள். இவர்கள் தனித்து நன்றாக வேலை செய்தாலும் குழுவாக இயங்க வேண்டிய சந்தர்ப்பத்தில் திருப்திகரமாக செயற்படமாட்டார்கள். வெறும் நூல் அறிமுகமுடையவர்களாக, மற்றவர்களுடன் தொடர்பின்றி ஒதுங்கி வாழ்கின்ற, சமூக நடத்தை விழுமியங்களை உணர்ந்து கொள்ளத் தவறி விடுகின்ற இவர்களது வாழ்க்கை எவ்விதச் செழிப்பும் அற்றதாகவே இருக்கும்.

இவர்களது இத்தகைய புற இயல்புகள் சில வேளைகளில் உள்ளே இருக்கும் ஆழமான மனவெழுச்சிகளை வெளிக்காட்டி விடாது இவர்களைத் தடுக்கக் கூடும். எனினும் சிலர் தம் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக டயரி எழுதும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வர். அல்லது பகற் கனவு காண்பதில் திளைத்திருப்பர். சிலவேளைகளில் தமது உள்ளத்து உணர்ச்சிகளை ஓரளவுக்கெனும் வெளிப்படுத்தக் கூடிய ஏதேனும் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதும் உண்டு.

இவ்வகையான ஆட்கள் ஏனையவர்களின் உணர்வுகளையோ வழிகளையோ உணர்ந்து கொள்ள முடியாதவர்களாக இருப்பர். தம் உள்ளுணர்வின் அடிப்படையில் மற்றவர்கள் பற்றி இவர்கள் செய்யும் மதிப்பீடுகள் முற்றிலும் தவறானவையாகவே இருக்கும். சில சமயங்களில் மற்றவர்களை நம்ப மறுப்பார்கள். எல்லாவற்றிலும் ஏதோவோர் ஏமாற்றுவித்தை இருப்பதாக வீணே சந்தேகிப்பார்கள். தம்மை அடுத்தவர்கள் சுரண்டவும், தவறாகப் பயன்படுத்தவும் சிறுமைப் படுத்தவும் முயற்சிப்பதாக இவர்கள் நிதமும் நம்புவதால் எந்நேரமும் சந்தேகக் கண்கொண்டே எல்லோரையும் பார்ப்பர்.

இவர்கள் அடுத்தவர்களின் துக்கம் பற்றி கவலை கொள்ள மாட்டார்கள். மற்றவர்களிடம் தமக்குள்ள பகைமையை வெளிப்படையாகத் தெரிவிக்கவும் மாட்டார்கள். தம்மைப் புகழ்வதால் பெருமிதம் அடையவும் மாட்டார்கள். மாபெரும் அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபடும் அறிஞர்கள் சிலரிடம் இத்தகைய ஆளுமையைக் காணலாம். ஓரளவு தனிமை இருந்தால்தான் இவர்களில் ஏதாவது ஒரு அரும் செயலைப் புரியக் கூடியவர்களாக இருப்பர். இவர்கள் மனவிரிசல் நோயாளர்கள் போல் திரிபுணர்வு, இல்பொருள் உணர்வு போன்றன உடையவர்கள் என்று கொள்ளக் கூடாது. ஏனெனில், இவர்கள் உளச் சிதைவு ஆளுமைகள் உள்ளவர்களே ஒழிய உளச் சிதைவு நோயாளர்கள் அல்லர்.

---

## பிளாஸ்டிக்... (II ஆம் பக்கத் தொடர்)



ஏற்கனவே மனித நாகரிக வளர்ச்சியால் பாதிப்பு அடைந்து, வாழ்விடங்களை இழந்து வரும் விலங்குகள் தங்கள் அறியாமையால் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை உட்கொள்ளத் தொடங்கி விட்டன. இதன் விளைவாக பூமி தினந்தோறும் பல உயிர்களை இழந்து வருகிறது. பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் போது சூழலுக்கு வெளியிடப்படும் நச்சுவாயுக்களால் (Toxic Gases) வரும் இந்த விளைவுகளை தடுக்கும் முகமாக பிளாஸ்டிக்கை மீள்சுழற்சி செய்யும் முறையை அறிமுகம் செய்தனர் விஞ்ஞானிகள்.

எனினும் பிளாஸ்டிக் பொருட்களை மீள்சுழற்சி செய்யும் போதும் அதே வகையான டாக்ஸிக் வாயுக்கள் வளிமண்டலத்தில் சேர்ந்த வண்ணமே இருக்கின்றன. பிளாஸ்டிக் உற்பத்தியின் போது சேர்க்கப்படும் சில சேர்மானங்களால் மனித உடலின் அனுசேப தொழிற்பாடுகளை (Metabolism) மோசமாக பாதிப்படையச் செய்யும். தற்காலத்தில் குழந்தைகள் முதல் வேலைக்கு செல்லும் பெரியவர்கள் வரை அனைவருமே தண்ணீர் கொண்டு செல்ல பிளாஸ்டிக் போத்தல்களையே அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். எனினும் இந்த பிளாஸ்டிக் போத்தல்களுக்கு நிலைத்திருக்கும் ஆற்றலை வழங்குவதற்கு சேர்க்கப்படும் Phthalates மற்றும் BPA என்பவை ஆண், பெண் இரு பாலாரிலும் கணிசமான ஹோர்மோன் தாக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறான பிளாஸ்டிக் போத்தல்களை தொடர்ந்து பயன்படுத்தி வரும் போது ஆண்களின் விந்து எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைவடைவதுடன், பெண்கள் மிக இளவயதிலேயே பருவமடையும் (Premature Puberty) நிலையும் உருவாகும்.

பிளாஸ்டிக் இன்றைய கால கட்டத்தில் அநேகமாக பல்வேறு துறைகளில் மூலப் பொருளாக விளங்கி வருகிறது. அவற்றுள் மிகப்பெரிய துறைகளில் ஒன்று விளையாட்டு பொருட்கள். தவழ்ந்து திரியும் சிறு குழந்தைகளில் இருந்து பள்ளி செல்லும் மாணவர்கள் வரையில் அனைத்து சிறார்களுமே பிளாஸ்டிக் விளையாட்டு பொம்மைகளை தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாக வைத்துக்கொள்வார்கள். சிறிய அளவிலான உருவத்தை உடைய விளையாட்டு பொம்மைகளை குழந்தைகள் வாயிலோ அல்லது மூக்கிலோ உட்செலுத்துவதன் மூலம் பல துர்மரணங்கள் சம்பவித்தமை உலக அளவில் பல நாட்டு அரசாங்கங்களின் கண்டனத்துக்கு உரியதாக மாறியது. இதனைத் தொடர்ந்தே ஒவ்வொரு விளையாட்டு பொருள் உற்பத்தியிலும் அவற்றை பயன்படுத்தக்கூடிய ஆகக் குறைந்த வயது எல்லை அச்சிடப்பட்டது. இவற்றை விட பொலித்தீன் பைகள் குழந்தைகள் இடத்தில் மிகவும் ஆபத்தான பொருட்களாக மாறிவிட்டன. விளையாட்டாக பொலித்தீன் பைகளால் தலையை சுற்றிக் கொண்டு மூச்சுத் திணறலால் உயிரை விட்ட குழந்தைகள் பற்றி இந்நாட்களில் கூட செய்திகளை கேட்க முடிவது நம் சமுதாயத்தின் துர்பாக்கியமே.

ஒரு வருடத்தில் சராசரியாக 8 மில்லியன் டன்கள் பிளாஸ்டிக் கழிவுகள் கடலில் சேர்ந்த வண்ணம் உள்ளன. இக்கழிவுகளை உணவு என நினைத்து உட்கொள்வதால் அது கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கைக்கும் பறவைகளின் வாழ்க்கைக்கும் மாபெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. பிளாஸ்டிக் கழிவுகளை உட்கொள்ளும் மீன்களை மனிதர்கள் உட்கொள்வதால் மனித உணவுச் சங்கிலிக்குள் பிளாஸ்டிக் சேர்ந்து மோசமான உடல் உபாதைகளை ஏற்படுத்தும். மேலும் பிளாஸ்டிக் பொருட்கள் சூழலில் சேர்வதன் மூலம் நுளம்புகளுக்கு இனப்பெருக்கம் செய்வதற்கு அதிகமான இடம் கிடைக்கும். இதனால் டெங்கு முதலான ஆபத்தான நோய்கள் பரவுவதற்கு வாய்ப்பு அதிகரிக்கின்றது. மேலும் பிளாஸ்டிக் கழிவுகள் கடற்கரையோரம் சேர்வதன் விளைவாக கடல் சார்ந்த சுற்றுலாத் துறையும் கணிசமான பாதிப்பை எதிர்நோக்குகிறது.

### பிளாஸ்டிக் வேண்டாம்

கடந்த நல்லாட்சி அரசாங்கம் 2017 ஜூலை மாதத்தின் போது 20 மைக்ரான் அல்லது அதை விட அடர்த்தி குறைந்த பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது என சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டது. இதன் மூலமாக பொலிஸ்டிரினால் செய்யப்பட்ட (Polystyrene) உணவுப் பொதிகள், கோப்பைகள், கரண்டிகள் மற்றும் பொலித்தீன் உற்பத்திகள் ஸ்டைரொஃபோம் (Styrofoam) பெட்டிகள் அனைத்தும் பயன்பாட்டில் இருந்து நிறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த யோசனையானது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டதுடன் இலங்கையில் 20 மைக்ரான் அல்லது அதை விட குறைந்த அடர்த்தியை கொண்ட பொலித்தீன் பைகள் உற்பத்தி செய்வது தடைசெய்யப்பட்டது. [illegible]

தீன் தாள்களும், ஸ்டைரொஃபோம் பெட்டிகளும் பெரும்பாலான உணவகங்களிலும் வீடுகளிலும் உணவை பொதி செய்யப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

மேலும் பிளாஸ்டிக் பைகள் நாடு முழுவதும் காணப்பட்ட கடைகளிலும், சூப்பர் மார்க் கெட்களிலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் இலங்கை அரசால் கொண்டுவரப்பட்ட இந்த புதிய சட்டமானது மக்களை பெரும் சிக்கலுக்கு உள்ளாக்கியது. பிளாஸ்டிக் பைகளுக்குப் பதிலாக மீண்டும் பயன்படுத்தக்கூடிய துணியாலான பைகளைப் பயன்படுத்துமாறு புதிய சட்டம் தெளிவுபடுத்தியது.

இந்தப் புதிய நடைமுறையால் 345,000 பேர் தங்களுடைய வாழ்வாதாரத்தை இழக்கக் கூடுமென பொலித்தீன் உற்பத்தியாளர்கள் அரசிடம் தெரிவித்தனர். எனவே தங்களுக்கு மேலதிகமாக இன்னும் சில காலம் அனுமதி வழங்குமாறும் கோரிக்கை விடுத்தனர். இதற்கு பதிலளிக்கும் விதமாக அரச தரப்பிடம் இருந்து பதில் வந்தது. அதனடிப்படையில் குறித்த சட்டமானது செப்டெம்பர் 1 முதல் அமுலுக்கு வந்தாலும் 2018 ஜனவரி 1 வரையில் பிளாஸ்டிக்




மற்றும் பொலித்தீன் பாவனையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் மீது எந்தவித சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்ற உத்தரவாதம் அளிக்கப்பட்டது. எனவே குறித்த காலக்கெடுவுக்குள் பொருத்தமான மாற்று வழிகளைப் பயன்படுத்தத் தொடங்குமாறும் அரச தரப்பிடம் இருந்து அறிவித்தல்கள் வழங்கப்பட்டது. இன்றைய தினத்தில் மேற்கூறிய தடைசெய்யப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வது கண்டறியப்படுமாயின் சம்பந்தமுடைய நபருக்கு 2 வருட சிறை தண்டனையும், 10,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

மேலும் இதனைத் தொடர்ந்து கழிவுகளை அப்புறப்படுத்தும் செயற்பாட்டிலும் முக்கியமான கட்டுப்பாடாக உணவுக் கழிவுகளும், மீள்சுழற்சி கழிவுகளும் தனித் தனியாக சேகரிக்கப்பட்டு வருகின்றது.

கடல் மாசடைதலுக்கு எதிரான கூட்டமைப்பு இலங்கையில் ஜூலை மாதம் ஏற்படுத்தப்பட்ட அதிரடியான முடிவின் விளைவாக 2017 டிசம்பர் மாதம் 7 ஆம் திகதி நைரோபியிலும், பாங்கொக்கிலும் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சுற்றுச் சூழல் அமைப்பின் Clean Seas செயற்திட்டத்தில் ஒரு அங்கத்துவ நாடாக இலங்கை இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் போது இலங்கையுடன் ஓமான், தென்னாபிரிக்கா, மற்றும் சிலி ஆகிய நாடுகளும் புதிதாக அங்கத்துவம் பெற்றன. இந்த கூட்டமைப்பின் நோக்கமாக கடல்களில் குப்பை சேர்வதையும், சமுத்திரங்கள் மாசடைவதையும் தடுக்கும் வண்ணமாக பொலித்தீன், பிளாஸ்டிக் ஆகியவற்றின் உற்பத்தியை தடைசெய்வதும், அவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதும் மற்றும் பாதுகாக்கப்பட்ட கடல் வளையங்களை உருவாக்குவதும் அமைந்திருந்தன.

இக்கூட்டமைப்பின் அங்கத்துவ நாடாக இலங்கை பங்கேற்றத்தில் இருந்து 2030 ஆம் ஆண்டளவில் மாசில்லாத கடற்கரை மற்றும் சமுத்திரத்தை உருவாக்கும் நோக்கில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. மேலும் நைரோபியில் நடைபெற்ற அமர்வில் இலங்கை உள்ளிட்ட புதிய நான்கு அங்கத்துவ நாடுகளும் உலகம் முழுவதும் பல்லாயிரம் உயிர்களை பறித்த வண்ணம் இருக்கும் மோசமான சூழல் மாசடைவுகளுக்கு எதிராகப் போராடவுள்ளதாக அறிவித்தல்களை விட்டுள்ளது.

சூழல் மாசடைதல் என்ற தலைப்பின் கீழாகவே 2017 இன் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் அமைப்பின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 40 நாடுகள் பங்கேற்றன. அரசாங்கங்கள் மட்டுமல்லாது தனிநபர்கள், நிறுவனங்களும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

நீண்டகால பாவனை மற்றும் மலிவான விலையில் பொருட்களைப் பாதுகாப்பதற்கான ஒரு பொருளை தேடும்போதே பிளாஸ்டிக்கின் கண்டுபிடிப்பு நிகழ்ந்தது. இருந்த போதிலும் இன்று அந்த பிளாஸ்டிக்கே நம் கழுத்தை நெறிக்கும் பெரும் சூழல் பிரச்சினையாக உருமாறியுள்ளது.

---

### அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் – 18

## மு:.மின்களின் தாய்

### நபிகளாரிடம் சந்தேகங்களை நிவர்த்திக்கும் ஆயிஷா

ஒரு யூதக் குழு நபிகளாரிடம் வந்து, அலைக்கும் அஸ்ஸாம் என்றனர். அஸ்ஸலாமு அலைக்கும் எனும் வார்த்தைக்குப் பகரமாக உங்கள் மீது கேடு உண்டாகட்டும் என்ற கருத்தைத் தரும் அஸ்ஸாமு அலைக்கும் எனும் சொல்லைப் பயன்படுத்தினர். இதைச் செவியுற்ற நபிகளார், 'உங்கள் மீதும்' என்றார்கள். இச்சம்பவத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஆயிஷா, யூதர்களை நோக்கி, உங்கள் மீது கேடும் சாபமும் உண்டாவதாக என்றார். அதற்கு நபிகளார், ஆயிஷாவே, நிதானியுங்கள். எல்லா விடயங்களிலும் அல்லாஹ் மென்மையான போக்கையே விரும்புகின்றான்' என்றார்கள்.

ஒருமுறை நபிகளாரோடு ஆயிஷா பயணம் செய்தபோது அவர் தனது கோவேறு கழுதையை கோபத்தோடு சபித்தார். -இத்தகைய சந்தர்ப்பங்களில் பெண்கள் இவ்வாறு நடந்துகொள்வது பெண் களின் வழக்கம். நபிகளார். அவ்வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொள்ளுமாறு கூறிவிட்டு, ''என்னோடு சபிக்கப்பட்ட ஒன்று பயணம் செய்யாது'' என்றார்கள். இதன் மூலம் நபிகளார் மிருகங்களை சபிப்பதை தவிர்க்க வேண்டும் என்ற உபதேசத்தைச் செய்துள் ளார்கள்.

ஒருமுறை ஆயிஷாவே ஓர் ஈச்சம் சுளையைக் கொண்டேனும் நரக நெருப்பிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், அது வயிறு புடைக்கச் சாப்பிடுகின்றவனுக்கு பசித்த வனால் ஏற்படும் ஆபத்தை அடைந்து விடும்.

நபிகளார் பின்வருமாறு கூறுவதை நான் செவிமடுத்தேன். ''யா அல்லாஹ் என்னை மிஸ்கீனாக வாழ வைத்து, மிஸ்கீனாக மரணிக்கச் செய்வாயாக. மறுமை நாளில் மிஸ்கீன்களின் கூட்டத்தில் என்னை எழுப்புவாயாக.

அப்போது ஆயிஷா ஏன் யாரஸூலுல்லாஹ் எனக் கேட்டார். அதற்கு நபிகளார், செல்வந்தர்கள் சுவனம் நுழைவதற்கு 40 ஆண்டு களுக்கு முன்பாகவே மிஸ்கீன்கள் சுவனம் நுழைவார்கள். ஆயிஷாவே! ஒரு ஈச்சம் பழ சுளையையேனும் ஏழைகளுக்கு வழங்க தயக்கம் காட்டாதீர். ஆயிஷாவே மிஸ்கீன்களை நேசியுங்கள். அவர்களோடு நெருங்கிப் பழகுங்கள். அப்படிச் செய்தால் மறுமையில் அல்லாஹ் உங்களுக்கு நெருக்கமானவனாக இருப்பான்.

ரஸூலுல்லாஹ் துஆ, திக்ர், தொழுகை, சமூக வாழ்க்கை போன்ற பல்வேறு விவகாரங்களோடு தொடர்பான ஷரீஆ பிரச்சினை களுக்குத் தெளிவுகளை வழங்கி மார்க்கத்தின் சட்டங்களைக் கற்பித் துள்ளார்கள். இவற்றை ஆயிஷா மிகுந்த விருப்பத்தோடும் ஆர்வத் தோடும் கற்றிருக்கிறார்கள். அவற்றை ஆழ்ந்த உணர்வோடு செவி சாய்த்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக அவற்றை தனது வாழ்வில் கடைப்பிடித்து அமல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீனர்களின் உறுப்புக்களைத் திருடும் இஸ்ரேல்

நீண்டகாலமாக பலஸ்தீனர்களின் உடல் உறுப்புக்களைத் திருடி வரும் இஸ்ரேலிய அரச அதிகாரிகள் தொடர்ந்தும் இக்கீழ்த்தரமான வேலையில் ஈடுபட்டு வருவதாக அனாதுலு செய்திச் சேவை தெரிவித்துள்ளது. பலஸ்தீன மக்களுக்கு எதிரான நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட அரச பயங்கரவாதச் செயலின் உச்சகட்டமே இதுவாகும் என்று மனித உரிமை நிறுவனங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

பலஸ்தீனர்களின் சொத்துக்களைத் திருடுதல், அழித்தல், கொள்ளையிடுதல், அவர்களின் குடியிருப்புக்களை தரைமட்டமாக்குதல் போன்ற பல தசாப்த அநியாயங்களுக்கு மத்தியில் கடந்த பத்தாண்டுகளாக கடத்தப்படும் பலஸ்தீனர்களின் உறுப்புக்களை அவர்களுக்குத் தெரியாமலேயே திருடுதல் மற்றும் ஷஹீதாக்கப்படுகின்ற பலஸ்தீனர்களின் உடல்களிலிருந்து உறுப்புக்களைத் திருடுதல் போன்ற செயற்பாடுகளில் தொடர்ந்தும்



ஈடுபட்டு வருகின்றது.

இக்குற்றச் செயலை நுணுக்கமாகவும் கனகச்சிதமாகவும் நடைமுறைப்படுத்தும் வகையில் இஸ்ரேலிய மருத்துவர்கள் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து சர்வதேசப் பத்திரிகையாளர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டதன் பின்னர் மனித உரிமை நிறுவனங்கள் இதனை விசாரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஈரானுக்கு எதிராக இரு கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்திய இஸ்ரேலும் அமீரகமும்

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் வோல் ஸ்ரீட் ஜேர்னல் சஞ்சிகையின்படி ஈரானுக்கு எதிராக அமீரகமும் இஸ்ரேலும் இரு கட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது. அதில் ஈரானுக்கான விஷேட அமெரிக்கப் பிரதிநிதி பிரைன் ஹூக்கும் கலந்துகொண்டார். இரு நாடுகளும் பேச்சுவார்த்தையின்போது உளவுத் தரவுகளைப் பரிமாறிக் கொண்டன.

பேச்சுவார்த்தை நடந்த நேரங்கள், இடங்கள் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால், வளைகுடாவில் அமீரகத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவு பலமடைந்து வருவதாகவும் ஈரானுக்கு எதிரான பரஸ்பர பகைமை இஸ்ரேலின் அளவுக்கு அமீரகத்திலும் வளர்ந்துள்ளதாகவும் பிரதமர் நெடன்யாஹூ தெரிவித்துள்ளார்.

ஈரானை எதிர்கொள்வதற்குத் தேவையான ராஜதந்திர, இராணுவப் புலனாய்வு ஒத்துழைப்



பைப் பலப்படுத்துவதே இரகசியப் பேச்சுவார்த்தைகளின் நோக்கம் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் கார்ட்ஸ், பஹ்ரைன் வெளிவிவகார அமைச்சர் காலித் பின் அஹ்மதை வொஷிங்டனில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஈரான் பிராந்தியத்திற்கு அச்சுறுத்தல் விடுத்து வருவதாக இரு நாடுகளும் கருதுகின்றன.

# சர்வதேசப் பார்வை



# ஈரான் - அமெரிக்க மோதலுக்குள் இஸ்ரேல் தள்ளப்படக் கூடாது

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் இடம்பெறும் மோதலுக்குள் இஸ்ரேல் தள்ளப்படக் கூடாது என இஸ்ரேலியப் பிரதமர் நெடன் யாஹூ தெரிவித்துள்ளார். அவர் அவசரமாகக் கூட்டிய பாதுகாப்புத் துறை தொடர்பான அமைச்சரவைக் கூட்டத்தில், ஈரானின் அதியுச்ச பதவி வகித்த இராணுவத் தளபதி காஸிம் சுலைமானியை அமெரிக்காவே கொலை செய்தது. இஸ்ரேலுக்கு அதனுடன் சம்பந்தமில்லை. எனவே, இவ்விரு நாடுகளுக்கும் இடையில் நடக்கும் போரில் இஸ்ரேல் இழுபடக் கூடாது. அமெரிக்காவுக்கு நாம் முழு ஆதரவைத் தெரிவிக்கின்றோம் எனவும் தெரிவித்தார். இக்கூட்டத்தில் இஸ்ரேலின் புலனாய்வு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஈரான் இதற்குப் பதிலடியாக தாக்குதல் நடத்துமா என கேட்கப்பட்ட கேள்விக்கு புலனாய்வு அதிகாரிகள் இல்லை எனப் பதிலளித்தனர். 2018 இல் ட்ரம்ப் ஈரானுடனான அணுசெறிவாக்கல் உடன்படிக்கையிலிருந்து விலகியதை அடுத்து மோதல்கள் தீவிரமடைந்தன.

# ஷிர்தியைக் கைப்பற்றி உள்ளதாக ஹப்தர் அறிவிப்பு



லிபியாவின் ஷிர்தி எனப்படும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கரையோர நகரத்தைத் தாம் கைப்பற்றியுள்ளதாக கலீபா ஹப்தர் தெரிவித்துள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் முதல் தலைநகர் திரிப்போலி மீது ஐக்கிய அறபு அமீரகத்தின் ஆதரவுடன் ஹப்தர் படை தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

லிபியாவுக்கு சமீபமாகவுள்ள மத் திய தரைக் கடலை அண்டியதாக ஷிர்தி அமைந்துள்ளது. ஐசிஸ் பயங்கரவாதிகளிடமிருந்து இந்நகரை 2016 இல் திரிப்போலி அரசாங்கம் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

லிபியாவில் பெரும் அரசியல் குழப்பத்தையும் இராணுவ மோதலையும் உருவாக்கியுள்ள ஹப்தரின் படையை எதிர்கொள்வதற்கு துருக்கி தயாராகி வருகின்றது. திரிப்போலியைத் தளமாக் கொண்ட அரசாங்கத்தின் ஆலோசனை வழங்குதற்கும் இராணுவ உதவிகளை அளிப்பதற்கும் துருக்கி தயாராகி வருகின்றது.

எகிப்து, ஜோர்தான் அமீரகம் ஆகிய நாடுகள் ஹப்தருக்கு ஆதரவளிக்கும் நிலையில் துருக்கிய படைப்பலம் ஹப்தருக்கு எதிராகப் பிரயோகிக்கப்படவுள்ளது.

# ஈரானின் பண்பாட்டு மையங்களைத் தாக்கப் போவதாக ட்ரம்ப் மிரட்டல்

ஈரானின் பண்பாட்டு மையங்கள் மீது தாக்குதல் நடத்தப் போவதாக ட்ரம்ப் மிரட்டியுள்ளார். காஸிம் சுலைமானியின் படுகொலைக்கு தெஹ்ரான் பதிலளித்தால் ஈரானின் கலாச்சார மையங்கள் தாக்குதலுக்கு உள்ளாகும் என்று ட்ரம்ப் கூறியிருந்தார். ஆனால், ஆயுத மோதலின் சட்டங்களை மதித்து அமெரிக்க இராணுவம் கலாச்சார மையங்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ளாது என அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் மார்க் எஸ்டோ ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் 52 அமெரிக்கர்கள் பணயக் கைதிகளாக ஈரானில் வைத்துப் பிடிக்கப்பட்டனர். அதற்குப் பழிதீர்க்கும் முகமாக ஈரானின் 52 கலாச்சார மையங்கள் மீது நாம் தாக்குதல் நடத்துவோம். ஈரானும் கடுமையாகத் தாக்கப்படும் என்று ட்ரம்ப் தனது



டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தமை மிகச் பெரிய சர்ச்சையை உருவாக்கியது. இவை சகல விதமான சர்வதேச விழுமியங்களையும் மீறும் செயல் என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

# ஜவாஹர் லால் நேரு பல்கலைக்கழக மாணவத் தலைவர் மீது வழக்கு

கடந்த வாரம் டில்லியிலுள்ள பல்கலைக்கழகத்தில் நுழைந்த இனந்தெரியாத மர்ம நபர்கள், அங்கிருந்தவர்கள் மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு தம்பிச் சென்றுள்ளனர். ஆயினும், தாக்குதலோடு எந்த சம்பந்தமும் இல்லாத இடதுசாரி ஆதரவாளரான பல்கலைக்கழக மாணவத் தலைவர் ஐஷி கோஷ் மீது பொலிஸார் வழக்குத் தாக்கலை மேற்கொண்டுள்ளனர். மேலும் 19 மாணவர்கள் பல்கலைக்கழக



கட்டடங்களுக்கும் தளபாடங்களுக்கும் ஏற்பட்ட சேதங்களுக்குப் பொறுப்பு என்று பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

ஆனால் இதுவரை கொரூரமான தாக்குதலில் ஈடுபட்ட காடயர் கூட்டத்தில் எவரையும் பொலிஸார் கைது செய்ய வில்லை. தாக்குதலில் காயப்பட்டவர்கள் மாணவர்களும் விரிவுரையாளர்களாகவும் இருக்கின்ற நிலையில், கடும் காயங்களுக்கு உட்பட்ட மாணவ ஒன்றியத் தலைவர் ஐஷே கோஷ் மீது ஏன் வழக்கத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது மர்மமாக உள்ளது.

காயப்பட்ட 31 மாணவர்களில் கோஷும் ஒருவர். முகமூடி அணிந்து வந்த 50 மர்ம நபர்கள் மாணவர்கள் மீதும் விரிவுரையாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தினர். இவர்கள் பெரும்பாலும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் என்பது தெளிவாகி யுள்ளது. அதனால் பொலிஸார் அவர்களைக் கைதுசெய்யாமல் தாக்குதலுக்குப் பலியானவர் மீது வழக்குத் தாக்கல் செய்திருப்பது மிகவும் வேடிக்கையானது என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவித்துள்ளார்.

மோடியின் புதிய குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து இந்தியாவில் தொடர்ந்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

# சிறையிலுள்ள பத்திரிகையாளருக்கு மகனின் நல்லடக்கத்தில் கலந்து கொள்ள அனுமதி மறுப்பு

சவூதி அறேபியாவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள யெமனி பத்திரிகையாளரான மர்வான் அல் முறைசி அவரது மகனின் ஜனாஸா நல்லடக்கத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. முறைஸி ஒரு அரசியல் கைதி என்பது குறிப்பிடத்தக்கது. தற்காலிகமாக அவரது மகனைப் பார்வையிடுவதற்குக் கோரப்பட்ட அனுமதியை சவூதி நிராகரித்துள்ளது.

அவர் ஜனாஸாவுக்கு வருகை தருவார் என்ற எதிர்பார்ப்புடன் அவரது குடும்பம் மகனின் நல்லடக்க நிகழ்வை சற்று ஒத்திவைத்திருந்தபோதும் அவருக்கான அனுமதி வழங்கப்படவில்லை. இது அடிப்படை மனித உரிமை மீறல் என்று மனித உரிமை நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

பத்திரிகையாளர் மர்வான் அல் முறைஸி சவூதி அறேபியாவின் அரசியல் அநீதிகள் குறித்து தொடர்ச்சியாக எழுதி வந்தமைக்காகவே சிறையில் தள்ளப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வருடாந்தம் 7 இலட்சம் இஸ்ரேலியர்கள் எகிப்துக்கு விஜயம் தருகின்றனர்



வருடாந்தம் 7 இலட்சம் இஸ்ரேலியர்கள் சுற்றுலாப் பயணிகளாக எகிப்து வருவதாக கெய்ரோவிலுள்ள இஸ்ரேலியத் தூதரகம் தெரிவித்துள்ளது. இஸ்ரேலியர்களைப் பொறுத்தவரை எகிப்து அவர்களுக்கு சிறந்ததோர் சுற்றுலாத் துறை நாடாகும். குறிப்பாக சினாயை அவர்கள் அதிகம் தரிசிக்கின்றனர் என கெய்ரோவின் இஸ்ரேலியத் தூதரகம் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

2019 இல் மாத்திரம் 701000 இஸ்ரேலியர் எகிப்தை தரிசித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org